www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜூலை 2011
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 10.00

கோயில்கள் மன்னர்களுடைய
ஸ்விஸ் வங்கிகள்.
கடவுளர்கள் கருப்புப்
பணத்தின் காவலர்கள்.
அம்பானியையும் பில் கேட்சையும்
படுத்துக் கொண்டே ஜெயிக்கிறார்
பத்மநாபசுவாமி.
இந்தியா வல்லரசு ஆகிவிட்டது.. ..

## ஆன்மீக வல்லரசு



படிப்பகம்

www.padippakam.com

# சரசம் சாடிசம் சாரு நிவேதிதா

**சா**ரு நிவேதிதா என்கிற பெயரில் ஒரு எழுத்தாளர் தமிழகத்தில் இருக்கிறார். தமிழகத்தில் இப்படியொருவர் இருக்கிறார் என்பது சாதாரண வாசகர்களுக்குத் தெரியாது. ஆனால் கேரளத்தில் ஷகீலாவை விட இவர் தான் மிகவும் பிரபலம் என்று விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய அவரது இணைய ரசிகர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். இதுவரை ஒரு சில சரோஜாதேவி நாவல்களை எழுதியுள்ள இவரது எழுத்தை, பின் நவீனத்துவ இலக்கியத்தின் உச்சம் என்று அவ்வட்டாரம் கொண்டாடுகிறது.

சிற்றிலக்கிய உலகத்தில் இலக்கிய ஜீவனம் நடத்தும் விநோதப் பிராணிகளின் வட்டாரத்திலும், அவ்வுலகுக்கு 'தரத்தில்' சற்றும் குறையாத இணைய வலைப்பதிவு மொக்கையர்களின் உலகத்திலும் இவரது எழுத்துக்கென்று சிறிய ரசிகப் பட்டாளம் ஒன்று இருக்கின்றது. இந்த ரசிகப் பட்டாளங்கள் சாருவையும், அவரது எழுத்துக்களையும் ஒரேயடியாக உயர்த்திப் பிடித்து இவரே சமகாலத் தமிழ் இலக்கியத்தின் ஒரே போக்கிடம் என்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இவர்கள் சேர்ந்து பேஸ்புக் தளத்தில் சாருவுக்காக ஒரு வாசகர் வட்டத்தையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இணைய உலக அல்லக்கைகளின் துதி பாடல்களாலும், நல்லி குப்புசாமி, தினமலர் அந்துமணி போன்ற மேல் மட்ட புரவலர்கள் வீசும் எலும்புத் துண்டுகளாலும் கொழுத்து அலைந்த சாரு நிவேதிதா, பேஸ்புக் தளத்தின் மூலம் தன்னிடம் வாசகியாய் அறிமுமான ஒரு இளம் பெண்ணிடம் பாலியல் ரீதியில் அத்துமீறியுள்ள விவகாரம் சமீபத்தில் அம்பலமாகியுள்ளது. இவ்விவகாரம் பற்றிய ஆதாரங்களோடு விரிவான கட்டுரை ஒன்று வினவு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

எழுத்தாளர் சாரு நிவேதிதா மேட்டுக்குடி வர்க்கத்தின் இலக்கிய அரிப்புகளுக்குக் களிம்பு தடவி, அவர்களின் மது விருந்துக் கூட்டங்களின் இலக்கிய விதூஷகனாகப் பல்லாண்டுகளாக இருந்த வகையில் சில மேல்மட்டத் தொடர்புகள் அவருக்குக் கிடைத்துள்ளது. இதையே காட்டி தன்னோடு சேட்டில் உரையாட வந்த அந்த அப்பாவிப் பெண்ணை உளவியல் ரீதியில் மிரட்டி தனது அந்தரங்க இச்சைகளுக்குப் பணிய வைக்க முயன்றுள்ளார். தனது பாலியல் சாகசங்களைக் காட்டி அப்பெண்ணை அச்சுருத்தும் முகமாக, இவரை சுவீகாரத் தந்தை என்று பல இலக்கிய மேடைகளில் வெளிப்படையாக அறிவித்துக் கொண்ட கனிமொழியைப் பற்றியும் ஆபாசமாகப் பேசியுள்ளார்.

இருபத்தோரு வயதே ஆன அந்தப் பெண் தனது சொந்த வாழ்க்கையில் சுதந்திரமாக வெளியே செல்ல குடும்பத்தாரால் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், ஒரு மன ஆறுதலுக்காகவே இணையதளங்களில் கவிதைகள் எழுதி வந்தார். அந்த வகையில் தான் பேஸ்புக் தளத்தில் இயங்கி வந்த சாருவின் வாசகர் வட்டத்தில் இணைகிறார். ஆரம்பத்தில் அப்பெண்ணின் சாதாரணக் கவிதைகளைக் கூட தனது வாசகர்களிடம் அறிமுகம் செய்து பரவலான கவனத்தைப் பெற்றுத் தருகிறார் சாரு நிவேதிதா. இதைத் தொடர்ந்து, அப்பெண்ணுடன் சாட்டிங்கில் உரையாடும் சாரு, துவக்கத்தில் நாகரீகமாகப் பேசுவது போல் நடித்து விட்டு பின் கொஞ்சம் கொஞ்சமாக தனது ஆபாச நோக்கத்தை வெளிப்படுத்துகிறார். அச்சில் ஏற்ற முடியாத அந்த ஆபாசக் குப்பைகளை எதிர் கொண்ட உலக அனுபவம் ஏதுமில்லாத அப்பெண் முதலில் தயங்குகிறார்.

ஒரு கட்டத்தில் இந்த அத்துமீறல் எல்லைமீறிச் செல்வதை அவதானிக்கும் அவர், உரையாடலைத் திசைமாற்றும் நோக்கத்தோடு சாருவின் குடும்பம், மனைவி, மகன் என்று அவரது வயதையும், குடும்பத்தையும் நினைவூட்டும் நோக்கில் பேசிப் பார்க்கிறார். ஆனால், இதற்கெல்லாம் அசராமல் ஒரு பழக்கப்படுத்தப்பட்ட காம மிருகத்தைப் போல் அதையெல்லாம் புறங்கையால் ஒதுக்கித் தள்ளும் சாரு, தனது வக்கிர நோக்கத்தை அப்பெண்ணின் மேல் திணிக்கும் முகமாகவே உரையாடலைத் தொடர்கிறார்.

வேறு வழியின்றி தனக்கு ஏற்கெனவே ஒரு காதலர் இருப்பதாகவும், அவரும் ஃபேஸ்புக் இணையத்தில் இயங்குவதாகவும் சொல்லிப் பார்க்கிறார் அந்தப் பெண். சாருவின் குடும்பத்தை நினைவூட்டிப் பார்த்தும்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



காந்தி சிலையருகே காமப்பொறுக்கி சாரு நிவேதிதா.



படிப்பகம்

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே!

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர்: 28-29
- குரல்: 11,12 - 1,2
- ஏப்ரல் - ஜூலை 2011

உள்நாடு: ரூ. 10.00
ஆண்டுச் சந்தா: ரூ. 150.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா ரூ. 750.00

*சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 044-23718706
9941175876
ª ß A g \À •PÁ›:
pukatn@gmail.com.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

*அட்டை வடிவமைப்பு:*
ஸ்பார்ட்டகஸ்

# சமச்சீர் கல்வி ரத்து:
# கல்வியை கார்ப்பரேட்மயமாக்கும் சதி!

தி.மு.க அரசு கொண்டு வந்த சமச்சீர் கல்விப் பொதுப்பாடத் திட்டம் தரமற்றது என்பது அதனை முடக்குவதற்கு ஜெயலலிதா அரசு கூறியுள்ள காரணம். பொதுப் பாடத்திட்டத்தின் தரத்தை சோதித்துப் பார்த்து உயர்நீதி மன்றத்துக்கு அறிக்கை கொடுப்பதற்கு ஜெயலலிதா நியமித்த குழுவில் தயானந்தா ஆங்கிலோ வேதிக் ஸ்கூல் எனப்படும் டி.ஏ.வி பள்ளியின் தாளாளர் ஒரு உறுப்பினர். இன்னொருவர் பத்மா சேஷாத்ரி பள்ளியின் உரிமையாளர் திருமதி பார்த்தசாரதி. அரசுப்பள்ளி சார்ந்த ஒருவர் கூட இக்குழுவில் கிடையாது. தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் ஒரு கோடி ஏழு இலட்சம் பேர். 2,72,000 மாணவர்கள் மட்டுமே மெட்ரிக் பள்ளிகளில் படிக்கிறார்கள், என்ற போதிலும் 98% மாணவர்களின் பாடத்திட்டத்தின் தரத்தை நிர்ணயம் செய்யும் அதிகாரம் 2% மெட்ரிக் பள்ளி முதலாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

தரமே தமது தாரக மந்திரம் என்று தனியார் முதலாளிகள் கூறிக் கொண்டாலும், தீவிரமாகத் தனியார்மயம் அமல்படுத்தப்பட்டு வரும் கடந்த இருபது ஆண்டுகளில் கல்வி உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் தனியார் முதலாளிகள் தரங்கெட்டவர்கள் என்பதுதான் அம்பலமாகியிருக்கிறது. அங்கீகரிக்கப்பட்டுள்ள நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் 126 இல் 44 தரங்கெட்டவை என்று மத்திய அரசே அறிவித்துள்ளது. தமிழகத்தில் இயங்கும் தனியார் பொறியியல் கல்லூரிகளில் இரண்டு சதவீதம் கல்லூரிகள் மட்டுமே தரமானவை என்று ஏ.ஐ.சி.டி.ஈ அறிவித்துள்ளது. தமிழகத்தில் மட்டும் சுமார் 1500 க்கும் மேற்பட்ட தனியார் மெட்ரிக் பள்ளிகள் அங்கீகாரமே இல்லாமல் இயங்குகின்றன. இருப்பினும் தரநிர்ணயத் தராசை அரசு தனியார் முதலாளிகளிடம் தான் கொடுத்திருக்கிறது.

மழலையர் பள்ளி முதல் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் வரை நடத்தும் பல்வேறு படிநிலைகளிலும் உள்ள கல்வி வியாபாரிகளைப் பொருத்தமட்டில் இது கொள்ளை இலாபத்தை அள்ளிக் கொடுக்கும் ஒரு தொழில். இலாபத்தை நோக்கமாகக் கொண்டு நடத்தப்படும் ஒரு தொழிலில் பண்டத்தின் தரத்தை நிர்ணயிப்பது அதன் விலை. காசுக்கேற்ற தரம் என்பதுதான் தனியார் கல்வி முதலாளிகள் முன்வைக்கும் முழக்கம். பொதுப்பாடத்திட்டம் அமலாக்கப்படுமானால், ஆயிரக்கணக்கில் கட்டணம் வசூலிக்கும் மெட்ரிக் பள்ளிகள் அந்தக் காசுக்கு ஏற்ற 'தரமான கல்வியை' வழங்க முடியாமல் போகும். தங்களுடைய தொழில் வீழ்ச்சி, கல்வியின் தர வீழ்ச்சிக்கு வழிவகுத்து விடும் என்பதே மெட்ரிக் பள்ளி முதலாளிகளின் முறைப்பாடு.

இலவசக் கல்வியை ஒழிப்பதன் மூலம்தான் தரத்தை நிலைநாட்ட முடியும் என்பதை வெளிப்படையாகவே கூறுகிறது பிர்லா, முகேஷ் அம்பானி அறிக்கை. 2001 இல் பா.ஜ.க ஆட்சியின் கீழ் வெளியிடப்பட்ட இந்த அறிக்கை ஆரம்பக் கல்வி அளிப்பதுடன் அரசு ஒதுங்கிக் கொண்டு, உயர்கல்வி அனைத்தையும் கார்ப்பரேட் மயமாக்கி, கல்விக் கடனைத் தாராளமாக வழங்கக் கோருகிறது. அசோசெம் என்ற முதலாளிகள் சங்கம் தனியார் பல்கலைக்கழகங்களை சிறப்புப் பொருளாதார மண்டலங்களாகக் கருதி அவற்றை வழமையான சட்டங்களிலிருநது விடுவிக்கக் கோருகிறது. கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமானால் அதன் விலையை உயர்த்த வேண்டும் என்பதுதான் முதலாளிகள் முன்வைக்கும் வழிமுறை.

உலக வர்த்தகக் கழகம் மற்றும் காட்ஸ் ஒப்பந்த வரையறையின்படி கல்வி என்பது வணிகம் சார்ந்த சேவை. பன்னாட்டு முதலாளிகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் திறந்துவிடப்பட வேண்டிய இன்னொரு துறை. உலகமயமாக்கலின் கீழ் பன்னாட்டு நிறுவனங்களின் தேவைக்கேற்ற ஊழியர்களையும், துறைசார் வல்லுநர்களையும் உலகமெங்கும் ஒரே நேரத்தில் உற்பத்தி செய்து தருகின்ற பட்டறைகளே பல்கலைக்கழகங்கள். தனது தேவைகளை இவை நிறைவு செய்கின்றனவா என்பதைக் கொண்டே இவற்றின் தரத்தை அளவிடுகிறது உலக முதலாளித்துவம்.

ஆய்வு நோக்கம், அறிவுத் தேட்டம், சமூக நோக்கம் ஆகிய அனைத்தையும் கல்வியிலிருந்து நீக்கி அதன் தரத்தை தனியார்மயம் வீழ்த்துகிறது என்பதே உண்மை. கற்பவனுக்கு அது பிழைப்புக்கான கருவி. விற்பவனைப் பொருத்தவரை அது உடனடி இலாபம் தரும் சரக்கு.

•

www.padippakam.com

# ஆன்மீக வல்லரசு!

# ஏழை இந்தியாவில் வாழும் பணக்காரக் கடவுளர்கள்

உண்மையில் இது ஒரு பொற்காலம்தான். சாயிபாபா உயிரோடு இருந்தபோது கக்கிய தங்க லிங்கங்களைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான தங்கத்தை பாபா இறந்தபின் அவருடைய தனியறையான யஜுர் வேத மந்திரம் கக்கிக் கொண்டே இருக்கிறது. திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோவில் நிலவறையிலிருந்து இதுவரை எடுக்கப்பட்ட தங்கம், வைரங்களின் மதிப்பு ஒரு இலட்சம் கோடி ரூபாய் என்கிறார்கள். இல்லை, 5 இலட்சம் கோடி என்கிறார்கள். இன்னும் இரண்டு நிலவறைகள் திறக்கப்படக் காத்திருக்கின்றன.

இந்தியாவின் முதற்பெரும் கோடீசுவரனான முகேஷ் அம்பானியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அந்த இடத்தை ரத்தன் டாடா பிடித்து விட்டார் என்று சமீபத்தில்தான் செய்தி வெளிவந்தது. ஆன்மீக உலகிலும் அதிரடி மாற்றம். இந்தியாவிலேயே மிகப்பெரும் கோடீசுவரர் என்ற இடத்தை நெடுங்காலமாகக் கைப்பற்றி வைத்திருந்த திருப்பதி ஏழுமலையானை வீழ்த்தி அந்த இடத்தைப் பிடித்து விட்டார் பத்மநாபசாமி. ஏழுமலையானின் சொத்து மதிப்பு 40,000 கோடிதானாம். பத்மநாபசாமியின் இன்றைய நிலவறைச் சொத்து மதிப்பு நிலவரமே ஒரு இலட்சம் கோடியைத் தாண்டி விட்டது. திருமாலைத் தோற்கடித்தவரும் திருமாலே என்பதனால் வைணவர்கள் ஆறுதல் கொள்ளலாம்.

ஃபோர்ப்ஸ் பத்திரிகை, உலகப் பணக்கார மனிதர்களின் பட்டியலோடு உலகப் பணக்காரக் கடவுளர்களின் பட்டியலையும் வெளியிடுமானால் ஆன்மீக உலகின் அசைக்க முடியாத



வல்லரசு இந்தியாதான் என்ற உண்மையை உலகம் புரிந்து கொள்ளும். நிற்க. மீண்டும் நாம் பத்மநாபசாமி கோவிலுக்கே வருவோம்.

சீரங்கத்து அரங்கநாதனைப் போலவே, பாம்புப் படுக்கையின் மீதில் மீளா உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் பத்மநாபசாமியின் கோவிலுக்குக் கீழே, கல் அறைகள் என்று அழைக்கப்படும் ஆறு நிலவறைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. காற்றோட்டமில்லாத இந்தப் பொந்துகளின் உள்ளே பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பொக்கிஷங்களை வெளியே எடுத்து, அவற்றைப் பட்டியலிட வேண்டும் என்று உச்சநீதி மன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து கடந்த சில நாட்களாக இந்தப் புதையல் வேட்டை நடந்து வருகின்றது.

சுமார் ஒன்றரை அடி உயரமுள்ள மகாவிஷ்ணுவின் தங்கச்சிலை, தங்கத்தினால் செய்யப்பட்டு வைரக் கற்கள் பதிக்கப்பட்ட இரண்டு தேங்காய் மூடிகள், பத்தரை கிலோ எடையுள்ள 18 அடி நீள மார்புச் சங்கிலி, 36 கிலோ எடையுள்ள தங்கத் திரை, தங்க அங்கி, 500 கிலோ தங்கப் பாளங்கள், தங்கத்தில் வில் அம்பு, வைரம் பதிக்கப்பட்ட தங்கத் தட்டுகள், பல நூறு கிலோ எடையுள்ள தங்க மணிகள், நகைகள், கிழக்கிந்தியக் கம்பெனியின் தங்கக் காசுகள், நெப்போலியனின் தங்கக் காசுகள், ஐரோப்பாவின் புகழ்பெற்ற ஆன்ட்வெர்ப் நகரின் வைரங்கள்..

தங்கம், வைரம் என்ற முறையில் இவற்றின் சந்தை மதிப்பு ஒரு இலட்சம் கோடி ரூபாய் வருவதாகவும், புராதனக் கலைப்பொருட்கள் என்ற வகையில் மதிப்பிட்டால், இவற்றின் மதிப்பு பத்து இலட்சம் கோடி ரூபாயாகவும் இருக்கலாம் என்றும் கூறுகின்றன பத்திரிகைகள். நிலவறைக்குள் தங்கம் இருக்கும் என்பது எல்லோரும் எதிர்பார்த்ததுதான். ஆனால் அதன் அளவுதான் யாரும் எதிர்பாராதது. இன்னும் இரண்டு நிலவறைகள் திறக்கப்பட வேண்டும். அவற்றைத் திறப்பதற்கு முன் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்கிறது போலீசு.

கோவிலைச் சுற்றிலும் நெருக்கமாக வீடுகள் இருப்பதுடன், பூமிக்கு அடியில் இரண்டரை அடி நீள அகலத்தில் பழங்

> **ஃபோர்ப்ஸ் பத்திரிகை, உலகப் பணக்கார மனிதர்களின் பட்டியலோடு உலகப் பணக்காரக் கடவுளர்களின் பட்டியலையும் வெளியிடுமானால் ஆன்மீக உலகின் அசைக்க முடியாத வல்லரசு இந்தியாதான் என்ற உண்மையை உலகம் புரிந்து கொள்ளும்.**



படிப்பகம்

www.padippakam.com

காலத்து பாதாள சாக்கடை ஒன்று இருப்பதால், அந்த பாதாள சாக்கடை வழியாக யாரேனும் நிலவறைகளுக்குள் புகுந்து தங்கச் சுரங்கத்தைக் கொள்ளையடிக்க வாய்ப்பிருப்பதாக அஞ்சுகிறது போலீசு. எனவே, பத்மநாபசாமி கோவிலுக்கு அருகில் குடியிருக்க நேர்ந்த துர்ப்பாக்கியசாலிகள் அனைவரும் போலீசின் கண்காணிப்புக்கு உரியவர்கள் ஆகி விட்டார்கள்.

**ஒரு இலட்சம் கோடிக்கும் மேல் மதிப்புள்ள இந்தத் தங்கப் புதையல் எப்படி வந்தது? மன்னர்களின் ஆடை ஆபரணங்கள், அரண்மனைகள், அந்தப்புரங்கள், அவர்களது சொத்துகள் ஆகிய அனைத்தும் மக்களின் ரத்தத்தை வரியாகப் பிழிந்து எடுக்கப்பட்டவைதான் என்பதற்கு விளக்கங்கள் தேவையில்லை.**

ஒரு இலட்சம் கோடிக்கும் மேல் மதிப்புள்ள இந்தத் தங்கப் புதையல் எப்படி வந்தது? மன்னர்களின் ஆடை ஆபரணங்கள், அரண்மனைகள், அந்தப்புரங்கள், அவர்களது சொத்துகள் ஆகிய அனைத்தும் மக்களின் ரத்தத்தை வரியாகப் பிழிந்து எடுக்கப்பட்டவைதான் என்பதற்கு விளக்கங்கள் தேவையில்லை. பார்ப்பனக் கொடுங்கோன்மையின் வரலாற்று உதாரணமாக இருந்த கேரளத்தில், விவசாயிகள் எவ்வளவு இரக்கமற்ற முறையில் சுரண்டப்பட்டனர் என்ற உண்மையைக் கடந்த நூற்றாண்டின் மாப்ளா விவசாயிகள் போராட்டம் வெளிக்கொணர்ந்தது. இன்று பத்மநாபசாமி கோவிலின் தங்கப்புதையலும், வைர நகைகளும் அந்தச் சுரண்டலின் ஆபாசமான நிரூபணமாக மின்னுகின்றன.

ஸ்விஸ் வங்கிகள், பாதுகாப்புப் பெட்டகங்கள் போன்றவை இல்லாத அந்தக் காலத்தில் கோவில்கள்தான் மன்னர்கள் தமது செல்வத்தைப் பதுக்கி வைப்பதற்கான பெட்டகங்களாக இருந்திருக்கின்றன. அது மட்டுமல்ல, நிலப்பிரபுத்துவ சாதிய சமூகத்தின் அதிகாரமும், அரசு அதிகாரமும் கோவில் வழியாகவே செலுத்தப்பட்ட காரணத்தினால், கோவில்கள் அறிவிக்கப்படாத அரசு கஜானாக்களாகவே இருந்திருக்கின்றன. ஆகையினால்தான் இராசராச சோழன் முதல் கஜினி முகமது வரையிலான மன்னர்கள் அனைவரும் தாங்கள் ஆக்கிரமிக்கும் நாட்டில் உள்ள கோவில்களைக் குறிவைத்துக் கொள்ளையிட்டிருக்கிறார்கள். தங்கத்தைக் கோவிலுக்குப் பதிலாகச் சுடுகாட்டில் புதைத்து வைப்பது மரபாக இருந்திருந்தால், கஜினி முகமதுவும் சோமநாதபுரத்தின் கோவிலுக்குப் பதிலாக அந்த ஊரின் சுடுகாட்டைத்தான் சூறையாடியிருப்பான்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்திடம் இந்த அளவுக்குத் தங்கம் சேர்ந்ததற்குச் சில குறிப்பான காரணங்களும் உள்ளன. அன்று ஐரோப்பாவுடன் கடல் வணிகத்தில் ஈடுபட்டு வந்த செம்பகச்சேரி, கோட்டயம், கொச்சி ஆகிய நாடுகள் திருவிதாங்கூரைக் காட்டிலும் பன்மடங்கு செல்வ வளம் மிக்கவையாக இருந்தன. 18-ஆம் நூற்றாண்டில் திருவிதாங்கூர் மன்னனாக இருந்த மார்த்தாண்ட வர்மா, இந்த நாடுகளின்



உழைக்கும் மக்களின் உதிரத்தை பொக்கிஷமாய் மாற்றி பதுக்கப்பட்ட திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோவில்.



படிப்பகம்

## சோம்பேறிகளுக்குச் சோறுபோடும் சத்திரம்!

திருவிதாங்கூர் மன்னர் பரம்பரையினர் தாங்கள் பத்மநாபசாமியின் சேவகர்கள் என்றும், தங்களது சொத்து முழுவதையும் கடவுளுக்கே அர்ப்பணித்தவர்கள் என்றும் பெருமைபடக் கூறிக்கொள்வர். விரைவில் வெளிவர இருக்கும் ''திருவாங்கூர்: விதியின் சுவடுகள்'' என்ற நூலில் தற்போதைய மன்னர் உத்திராடம் திருநாள் மகாராஜா கீழ்க்கண்ட சம்பவத்தை மன்னர் பரம்பரையின் பக்திக்குச் சான்றாக பதிவு செய்திருக்கிறார்.

1900-ஆம் ஆண்டில் கர்சன் பிரபு வைஸ்ராயாகப் பதவியேற்றவுடன், திருவிதாங்கூருக்கு விஜயம் செய்தார். அவரை வரவேற்று குதிரைச் சாரட்டில் அழைத்துச் சென்றார் அன்றைய மன்னர் மூலம் திருநாள் ராமவர்மா மகாராஜா. குதிரை வண்டி கோவிலைக் கடந்து செல்லும்போது, எழுந்து நின்று கடவுளை வணங்கினார் மன்னர். அவர் செய்வது என்னவென்று புரியாத கர்சன், ''மன்னர் அவர்களே! உங்கள் நடவடிக்கையின் பொருள் என்ன?'' என்று வினவ, ''இது எங்கள் கடவுள் சயனித்திருக்கும் கோவில். நான் கடவுளுக்கு என் மரியாதையைத் தெரிவித்துக் கொண்டேன். கோவிலைக் கடந்து செல்லும்போதெல்லாம் நான் இப்படித்தான் வணங்குவேன்'' என்று கர்சனுக்கு விளக்கினாராம்.

''ஓ.. அப்படியா, 'சோம்பேறிகளுக்குச் சோறு போடும் சத்திரம்' என்று சொல்கிறார்களே, அந்த இடம் இதுதானா?'' என்றாராம் கர்சன். கோபம் கொப்பளித்த போதும், நாகரிகம் கருதி அதை வெளியில் காட்டிக் கொள்ளாத மன்னர், அன்று மாலை கர்சனுக்கு நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியைப் புறக்கணித்தாராம். ''கர்சன் பிரபு மன்னர் பதவியையே பறித்தாலும் சரி, கடவுளுக்காக மன்னர் பதவியை இழக்கத் தயார்'' என்றாராம் மன்னர். மன்னருடைய மன உறுதியைக் கண்ட கர்சன், அதன் பிறகு தான் பேசியதற்கு வருத்தம் தெரிவித்தாராம். அதன் பின்னர்தான் மன்னர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டாராம்.

வெள்ளையனுக்கு நாட்டையே எழுதிக் கொடுத்துவிட்டு, அவனுக்கு சொம்பு தூக்கி, அடியாள் சேவையும் செய்த மன்னர், கடவுளுடைய மானத்தைக் காப்பாற்றிய கதை இது.

---

மீது படையெடுத்து அந்நாடுகளின் செல்வத்தைக் கொள்ளையிட்டிருக்கிறான். இவையன்றி மன்னன் விதிக்கும் அபராதங்கள் அனைத்தும் கோவிலின் பெயரில் தங்கமாக வசூலிக்கப்பட்டதால் அவையும், வணிகர்களும் செல்வந்தர்களும் கோவிலுக்குச் செலுத்திய காணிக்கைகளும் தங்கமாகச் சேர்ந்திருக்கின்றன.

18-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் கட்டபொம்மன், மருது முதலானவர்களும், மைசூரில் திப்புவும் ஆங்கிலேயனை எதிர்த்து நின்றபோது, கேரளத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானமும், தமிழகத்தில் ஆற்காட்டு நவாபும் கும்பினியின் கைக்கூலிகளாக இருந்தனர். கும்பினியின் எடுபிடியாக இருந்த திருவிதாங்கூர் அரசுக்கு எதிராக திப்பு படையெடுத்த போது, கேரளத்தின் வட பகுதியில் இருந்த குறுநில மன்னர்கள் பலரும் தமது பொக்கிஷங்களைத் திருவிதாங்கூர் மன்னனிடம் கொடுத்துப் பதுக்கி வைத்திருக்கின்றனர். இதற்கு ஆவணச் சான்றுகள் உள்ளன என்று கூறும் கேரளத்தைச் சேர்ந்த வரலாற்றாசிரியர் கோபாலகிருஷ்ணன், இந்த நிலவறைகள் எல்லாம் அப்போதுதான் தோண்டப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். அந்நியப் படையெடுப்புக்கு அஞ்சியது மட்டுமல்ல, அரச குடும்பங்களுக்குள் வழக்கமாக நடக்கும் அரண்மனைச் சதிகளும், உள்குத்துகளும் கூட இப்படி தங்கத்தைப் புதைத்து வைக்கக் காரணமாக இருந்திருக்கலாம்.

அவ்வாறின்றி, ஆன்மீக அடிப்பொடிகள் சித்தரிப்பதைப் போல இவையெல்லாம் கடவுளுக்கு வந்த காணிக்கைகள் அல்ல. ஒரு வாதத்துக்கு அப்படி வைத்துக் கொண்டாலும் அதற்குக் கணக்கும் இல்லை, யார் கொடுத்த காணிக்கை என்பதற்கான விவரமும் இல்லை. கோவிலில் மணி அடிப்பவனுக்கும், சமையற்காரனுக்கும், விளக்கு போடுபவனுக்கும் ஆண்டுக்கு எவ்வளவு கலம் நெல் அளிக்க வேண்டும் என்பதைக் கல்வெட்டில் செதுக்கி வைக்கும் அளவுக்கு 'யோக்கியர்களான' மன்னர் பரம்பரையினர், பல இலட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள 'காணிக்கைகளை' புதைத்து வைத்திருப்பது பற்றி ஒரு துண்டுச் சீட்டில் கூட எழுதி வைக்காததற்கு வேறு என்ன காரணம்?

> **18-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் கட்டபொம்மன், மருது முதலானவர்களும், மைசூரில் திப்புவும் ஆங்கிலேயனை எதிர்த்து நின்றபோது, கேரளத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானமும், தமிழகத்தில் ஆற்காட்டு நவாபும் கும்பினியின் கைக்கூலிகளாக இருந்தனர்.**

இந்தப் புதையல் அனைத்தையும் மக்கள் நலனுக்கும், வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கும் பயன்படுத்த வேண்டும் என்று ஓய்வுபெற்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர், கேரள பகுத்தறிவாளர் சங்கத்தை சேர்ந்த காலநாதன், வரலாற்றாய்வாளர் செரியன் போன்றோர் கூறியிருக்கின்றனர். இதைக் கேட்டவுடனே ஆத்திரம் கொண்ட ஆர்.எஸ்.எஸ் காலிகள் நள்ளிரவில் காலநாதன் வீட்டைக் கல்லெறிந்து தாக்கியுள்ளனர்.

''தற்போது எடுக்கப்பட்டுள்ள நகைகள் எல்லாம் மன்னர் குடும்பத்துக்கே சொந்தம்'' என்பது காஞ்சிபுரத்து யோக்கியர் ஜெயேந்திரனின் கருத்து. ''அவை தொல்லியல் துறைக்குச் சொந்தம்'' என்பது கே.என். பணிக்கர் போன்றோரின் கருத்து. ''மாநில அரசுக்குச் சொந்தம்'' என்பது வேறு சிலர் கருத்து. ''அனைத்தும் பகவான் பத்மநாபசாமிக்கே சொந்தம்'' என்பது மாநில முதல்வர் உம்மன் சாண்டியின் கருத்து.



படிப்பகம்

www.padippakam.com

''பகவான் பத்மநாபஸ்வாமியும், அவருடைய கோவிலும், அதன் சொத்துக்களும் மன்னர் குடும்பத்துக்கே சொந்தம்'' என்பது தற்போதைய திருவிதாங்கூர் மகாராஜா உத்திராடம் திருநாள் மார்த்தாண்ட வர்மாவின் கருத்து. அது வெறும் கருத்து அல்ல. இந்தக் கோவிலும், அதன் சொத்துக்களும் மக்களுக்குச் சொந்தமா அல்லது மன்னர் குடும்பத்துக்குச் சொந்தமா என்பது உச்சநீதி மன்றத்தில் தற்போது நிலுவையில் இருக்கும் வழக்கு. இந்த வழக்கின் அங்கமாகத்தான் தற்போதைய புதையல் வேட்டை நடந்து கொண்டிருக்கிறது என்பதால் மேற்கூறிய கேள்விக்கான விடையைப் புரிந்துகொள்வதற்கு இவ்வழக்கு பற்றித் தெரிந்து கொள்வதும் அவசியம்.

•••

1947 இல் திருவிதாங்கூர் சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைப்பதற்கு மன்னருடன் போடப்பட்ட ஒப்பந்தத்தில், கேரளத்தின் மற்ற கோவில்களெல்லாம் அறநிலையத்துறையின் கீழ் கொண்டு வரப்பட்டாலும், பத்மநாப சாமி கோயில் மட்டும் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதை உத்திரவாதம் செய்து கொண்டார் திருவிதாங்கூர் மன்னர். பத்மநாப சுவாமியின் மீது மட்டும் மன்னர் கொண்டிருந்த அளவுகடந்த பக்திக்குக் காரணம் என்ன என்பது அப்போது புரியவில்லையெனினும் இப்போது அனைவருக்கும் புரிந்திருக்கும்.

'இந்துக் கோவில், இந்து மன்னர், இந்துப் புதையல்' என்று சங்க பரிவாரத்தின் அமைப்புகள் தற்போது கூச்சல் எழுப்புகின்றனர். . கிறித்தவர்கள், முஸ்லிம்களிடத்திலிருந்தும் திருவிதாங்கூர் மன்னர் பிடுங்கிய வரிதான் தங்கப் பொக்கிஷமாக மின்னிக் கொண்டிருக்கிறது. எனினும், இந்தப் பொக்கிஷத்தை என்ன செய்வது என்பது பற்றி கிறித்தவர்களோ முஸ்லிம்களோ கருத்துத் தெரிவிக்கக் கூடாது என்று மிரட்டுகின்றனர் இந்து வெறியர்கள். அவர்களது அபிமான திருவிதாங்கூர் மன்னரும், திவான் சர்.சி.பி. ராமசாமி ஐயரும் அகண்ட பாரதத்திலிருந்து திருவிதாங்கூரைத் துண்டாடவும், அதன் பின் பாகிஸ்தானுடன் கூட்டணி சேரவும் முயன்றார்கள் என்ற வரலாற்று உண்மை அரை டவுசர் அம்பிகள் பல பேருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

1947 இல் மேற்படி இந்து மன்னரும், அவருடைய திவான் சர்.சி.பி. ராமசாமி ஐயரும் திருவிதாங்கூரை (கேரளத்தை) தனிநாடாக அறிவித்து பிரிந்து போவதற்கே முயன்றனர். அணு ஆயுதத் தயாரிப்புக்குப் பயன்படும் மோனோசைட் எனும் தாது திருவிதாங்கூர் கடற்கரையில் நிறைந்திருந்ததால் திருவிதாங்கூரைத் தனிநாடாக்கி விட்டால், அதனைப் பிரிட்டன் மட்டும் பயன்படுத்திக் கொள்ள வசதியாக இருக்கும் என்று பிரிட்டிஷ் அமைச்சர்களும், சி.பி. ராமசாமி ஐயரும் சேர்ந்து இரகசியத் திட்டம் தீட்டினர். பாகிஸ்தானும் திருவிதாங்கூரும் தனியே நட்புறவு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று ஜூன், 1947 இல் ஜின்னாவுக்குக் கடிதம் எழுதினார் சி.பி. ராமசாமி ஐயர். ஜூலை 1947-இல் தனிநாடாகச் செல்லப் போவதாக மவுண்ட்பாட்டனிடம் ராமசாமி ஐயர் அறிவிக்கவும் செய்தார். ஆனால் கம்யூனிஸ்டுகள் தலைமையிலான புன்னப்புரா வயலார் விவசாயிகள் எழுச்சியும், சமஸ்தானம் முழுவதும் மன்னராட்சிக்கு எதிராக நடைபெற்ற மக்கள் போராட்டங்களும் மன்னருடைய தனிநாட்டுக் கனவில் மண் அள்ளிப் போட்டன. (ஆதாரம், தி இந்து, 25.5.2008)

இதுதான் 'இந்துப் பொக்கிஷத்தை'ச் சுருட்டிக் கொண்டு போவதற்கு 'இந்து மன்னன்' செய்த சதியின் கதை. சமஸ

**மே.வங்கத்தில் தரகு முதலாளி டாடாவுக்கு ஆதரவாக புத்ததேவ் பட்டாச்சார்யா. கேரளத்தில் திருவிதாங்கூர் மன்னனுக்கு ஆதரவாக அச்சுதானந்தன்! கோவிலும், அதன் சொத்துக்களும் மன்னரிடமே இருக்கட்டும் என்று கூறிய மார்க்சிஸ்டு கட்சி அரசு, அதனை மறுத்து உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னரும் அந்தத் தீர்ப்பை அமல்படுத்தவில்லை.**

**சாமி அங்கம் மறைக்கும் தங்கம்**





தங்கத் தேரில் சாய்பாபா உலா!
ஆன்மீகத்தின் வக்கிரம்!!



படிப்பகம்



மோசடி செய்து முதலாளியானார் அம்பானி,
படுத்துக் கொண்டே சொத்து 'சேர்த்தார்' கடவுள்.

தான மன்னர்களுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்கி இந்திய யூனியனுடன் இணைத்த இரும்பு மனிதர் சர்தார் படேல், திருவிதாங்கூரை இந்தியாவுடன் இணைக்கும் ஒப்பந்தத்தில், பத்மநாபசாமி கோவில் திருவாங்கூர் மன்னர் சித்திரைத் திருநாள் பலராம வர்மாவின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இருக்கும் என்பதை ஏற்றுக் கொண்டிருந்தார்.

1991 இல் பலராம வர்மா இறந்த பின் அவரது தம்பியான உத்திராடம் திருநாள் மார்த்தாண்ட வர்மா, அடுத்த வாரிசு என்ற முறையில் கோவிலின் மீது உரிமை கோரியதுடன், கோயிலில் உள்ள பொக்கிஷங்கள் அனைத்தும் அரச குடும்பத்தின் தனிச்சொத்துக்கள் என்றும் கூறினார். இதனை எதிர்த்து கோவிலின் சொத்துக்களையும், நிர்வாகத்தையும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கோரி சுந்தரராஜன் என்ற வழக்குரைஞர் கேரள உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இது தொடர்பாக நடைபெற்ற வழக்கில் (உத்திராடம் திருநாள் மார்த்தாண்ட வர்மா - எதிர்- யூனியன் ஆஃப் இந்தியா) 31.1.2011 அன்று கேரள உயர் நீதி மன்ற பெஞ்சு (நீதிபதிகள்: ராமச்சந்திரன் நாயர், சுரேந்திர மோகன்) தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பின் சாரம் கீழ்வருமாறு:

''சித்திரைத் திருநாள் பலராம வர்மா 1991 இல் மரணமடைந்த பின் அவர் வகித்து வந்த கோவிலின் அறங்காவலர் பொறுப்பு, மாநில அரசுக்குத் தான் வரும். அரசியல் சட்டத்தின் 366 (22) பிரிவின் படி இந்தியாவுக்குள் யாரும் எந்த விதத்திலும் மன்னர் என்ற தகுதியைக் கோர முடியாது. எனவே அரச வாரிசு என்ற முறையில் மார்த்தாண்ட வர்மா கோயிலின் மீது உரிமை கோர முடியாது.

பத்மநாபசாமி கோவில் என்பது மன்னர் குடும்பத்தின் தனிச்சொத்து அல்ல. அவ்வாறு தனிச்சொத்தாக இருந்திருப்பின் திருவிதாங்கூர்-இந்திய யூனியன் இணைப்பு ஒப்பந்தத்தில் இது குறித்த ஒரு ஷரத்தினைச் சேர்க்க வேண்டிய அவசியமே நேர்ந்திருக்காது.

கோவிலின் சொத்துக்கள், பொக்கிஷங்கள் குறித்து மறைந்த பலராம வர்மா தயாரித்த பட்டியலைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த போதிலும் மார்த்தாண்ட வர்மா அவற்றைச் சமர்ப்பிக்கவில்லை. அவர் கொடுத்துள்ள விவரங்கள் முறையற்றவையாகவும், நம்பகத்தன்மையற்றவையாகவும் உள்ளன.

தற்போது மார்த்தாண்ட வர்மா என்ற தனிநபர் பத்மநாபசாமி கோவிலை நிர்வகித்து வருவதைச் சட்டப்படி சரியானது என்று மாநில அரசு கருதுகிறதா என்று இந்த நீதிமன்றம் எழுப்பிய கேள்விக்கு மாநில அரசு பதிலே சொல்லவில்லை. கோவில் நல்லபடியாக நிர்வகிக்கப்படுவதாகவும், அதில் தலையிட வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை என்றும் மாநில அரசு பதிலளித்திருக்கிறது. கேரளத்தில் தனியார்களால் நிர்வகிக்கப்படும் கோவில்கள் குறித்த அரசின் நிலை பொதுமக்களின் நலனைப் பிரதிபலிப்பதாக இல்லை.

ஏராளமான தனியார் கோவில்கள் செல்வாக்குப் பெற்று வருகின்றன. அவர்களது சொத்துக்கள் எல்லாம் மக்களும், பக்தர்களும் செலுத்திய காணிக்கைகளே. மத நிறுவனங்கள் பொதுமக்களிடமிருந்து இவ்வாறு பணம் திரட்டும் போது, அவை மக்களுக்குக் கணக்கு கொடுத்தாக வேண்டும் என்பதை அரசு உத்திரவாதப்படுத்த வேண்டும். கடவுளின் பெயரால் மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கும் நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டியது மிகவும் அவசரக் கடமையாகி விட்டது என்று கருதுகிறோம். கடவுள் அல்லது நம்பிக்கையின் பெயரால் திரட்டப்படும் பணத்தைத் தனிநபர்கள் அல்லது அறங்காவலர் குழுக்களின் தனிப்பட்ட நலனுக்குத் திருப்பி விடுவதை அனுமதிப்பது என்பது, மதம், நம்பிக்கை ஆகியவற்றை வைத்து வியாபாரம் செய்வதை அனுமதிப்பதாகும். இதனை அரசு அனுமதிக்கிறதா என்பதே கேள்வி. இவ்விசயத்தில் மாநில அரசின் அணுகுமுறை பக்தர்களின் நலனையோ, மக்களின் நலனையோ பிரதிபலிப்பதாக இல்லை.

எனவே பத்மநாபசாமி கோவிலின் சொத்துக்களையும், அதன் நிர்வாகத்தையும் மாநில அரசு மேற்கொள்ள வேண்டும். அதனை நிர்வகிப்பதற்குரிய அறங்

**ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட செல்வத்தை வைத்துக் கொண்டு, கேட்டால் பகவானுக்கு வந்த காணிக்கை என்கிறார்கள். காணிக்கைக்குக் கணக்கு எழுதி வைக்கக் கூடாது என்று பகவான் சொன்னாரா, அல்லது பக்தன் சொன்னானா? கணக்கில் வராத பணத்தைத்தானே கருப்புப் பணம் என்று அழைக்கிறார்கள்?**



படிப்பகம்

www.padippakam.com

## யோகக்காரன்!!

''அவனுக்கென்னப்பா யோகக்காரன்!!'' என்ற பேச்சை தமிழகத்தில், குறிப்பாக தென் மாவட்டங்களில் பரவலாகக் கேட்கலாம்.

உண்மையில் இந்தச் சொல்லின் பின்னால் ஒரு ரத்தக்கறை படிந்த வரலாறே இருக்கிறது. தென் திருவிதாங்கூர் நாட்டில் இருக்கும் கோவில் வரலாறெல்லாம் உழைக்கும் சாதியினரைச் சுரண்டிய வரலாறே. ஆதியில் 'மகாசபை'யின் நிர்வாகத்தின் கீழ் இருந்த கோவில்களும், கோவில்களின் ஏகபோகமாக இருந்த நஞ்சை நிலங்களும் உழுபடைச் சாதியினரின் உழைப்பை மேல்வாரமாக ஒட்டச் சுரண்டிக் கொழுத்தன.

இந்த மகாசபைதான் ஆண்டவனின் பேரால் அதிகாரத்தை உழைக்கும் மக்கள் மீது ஏவியது. இச்சபையின் உறுப்பினராக இருக்க ஒரே தகுதி - பிறப்பால் நம்பூதிரிப் பார்ப்பனராய் இருக்க வேண்டும் என்பதுதான்.

சோழப் பேரரசின் உச்சத்தில் 'மகாசபை' என்ற அதிகார நிறுவனம் ஆட்டம் கண்டது. அவ்விடத்தே யோகக்காரர்களின் ஆட்சி வந்தது. யோகக்காரர்களாகவும் நம்பூதிரிகளே ஆரம்பத்தில் இருந்தனர். பின்னர் நாயர்களும், நம்பூதிரிகளும் சேர்ந்து யோகக்காரர் சபையை அலங்கரித்தனர். (அலங்கரிப்பதென்ன... குத்தகைதாரர்களை ஒட்டச் சுரண்டிக் கொழுத்தனர்).

பிறகு, கர்னல் மன்றோ திருவிதாங்கூர் ரெசிடெண்டாக ஆன பின் (அதாவது, விஷ்ணுவாகிய பத்மநாப சுவாமியும் மேற்படியாரின் பூலோக ஏஜெண்டான மார்த்தாண்ட வர்மாவின் வாரிசுகளும் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரத்தின் கீழ் அடங்கிய பின்னர்) இந்த யோகக்காரர்களைப் பதவி நீக்கம் செய்தார். கோவில் நிலங்களையும், கோவில்களையும் முதலில் பத்மநாபபுரத்துக்கும் பின்னர் திருவனந்தபுரத்துக்கும் எனத் தலைநகரை மாற்றிக் கொண்ட நாயர்சாதி மன்னர்களின் கீழ் அரசுடைமை ஆக்கினார்.

அன்று கஷ்டப்பட்டு உழைக்காமலேயே, சகல சவுகரியங்களையும் தாணுமாலயன் பெயராலும் ஆதிகேசவன் பெயராலும் ஆண்டனுபவித்துக் கொழுத்த அந்த 'யோகக்காரன்'கள்தான் இன்னும் மக்கள் மொழியில் 'யோகக்காரன்யா...அவன்' என வழங்கப்படுகின்றனர்.

மன்றோவின் காலத்திற்கு முன்னரும், பின்னரும் கோவில் நிலங்களில் பாடுபட்ட விவசாயிகளிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட மேல்வாரங்களே இன்று பத்மநாபசாமி கோவில் பாதாள அறைகளில் தங்கமாக மின்னுகின்றன. நியாயப்படி திருவிதாங்கூர் நாட்டின் (இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் உள்ளிட்ட தென் கேரளம்) உழைக்கும் சாதியினர் அனைவருக்கும் இதன் மீது உரிமை உண்டு.

---

காவலர் குழு அல்லது சட்டப்பூர்வமான நிர்வாகத்தை நியமிக்க வேண்டும். இது 3 மாதங்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அவ்வாறு மாநில அரசால் நியமிக்கப்படுகின்ற கோவில் நிர்வாகியின் மேற்பார்வையில் கோவிலில் உள்ள சுரங்க அறைகள் திறக்கப்பட்டு, அதில் உள்ள பொக்கிஷங்கள் பட்டியலிடப்பட வேண்டும். இந்தப் பணியை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான, நேர்மையான அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் கோவில் வளாகத்திலேயே ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு, அங்கே அவையனைத்தும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்."

மேற்கூறிய தீர்ப்பில் கேரள உயர்நீதி மன்றம் மாநில அரசு என்று குறிப்பிட்டு விமரிசிப்பது மார்க்சிஸ்டு கட்சி அரசைத்தான். மே.வங்கத்தில் தரகு முதலாளி டாடாவுக்கு ஆதரவாக புத்ததேவ் பட்டாச்சார்யா. கேரளத்தில் திருவிதாங்கூர் மன்னனுக்கு ஆதரவாக அச்சுதானந்தன்! கோவிலும், அதன் சொத்துக்களும் மன்னரிடமே இருக்கட்டும் என்று கூறிய மார்க்சிஸ்டு கட்சி அரசு, அதனை மறுத்து உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னரும் அந்தத் தீர்ப்பை அமல்படுத்தவில்லை என்பதுதான் மிகவும் முக்கியமானது. மூன்று மாதங்களுக்குள் கோவிலை மேற்கொள்ள வேண்டும் என்று ஜனவரி 31, 2011 இல் உயர்நீதி மன்றம் உத்தரவிட்டிருந்த போதிலும் அச்சுதானந்தன் அரசு ஒரு துரும்பைக் கூட அசைக்கவில்லை.

விளைவு, மார்த்தாண்ட வர்மா உச்சநீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்து, மேற்கூறிய உயர்நீதி மன்ற உத்தரவுக்கு இடைக்காலத் தடையும் வாங்கி விட்டார். கோவிலை மாநில அரசு மேற்கொள்வதற்கு இடைக்காலத் தடை பெற்றதன் மூலம், கோவிலின் நிர்வாகத்தை மார்த்தாண்ட வர்மா தன்னுடைய கைகளில் வைத்திருக்கிறார். சுரங்க அறையிலிருந்து பொக்கிஷங்களை எடுத்துப் பட்டியலிடுவதற்கு மட்டும் உச்சநீதி மன்றம் ஒரு குழுவை நியமித்திருக்கின்றது.

பொக்கிஷங்கள் மக்களுக்குத்தான் சொந்தம் என்பதை நாம் அரசியல் ரீதியாகக் கூறுகிறோம். சட்டப்படி அது அரசுக்குத்தான் சொந்தம் என்று தனது தீர்ப்பில் விளக்கியிருக்கிறது கேரள உயர்நீதி மன்றம்.

ஆனால் பொக்கிஷங்களும், கோவிலும் தனக்குச் சொந்தம் என்பது மார்த்தாண்ட வர்மாவின் கருத்து. சங்கராச்சாரியின் கருத்தும் அதுதான். ''பொக்கிஷம் கோவிலுக்குச் சொந்தம். அதில் அரசு தலையிடக் கூடாது'' என்பது ஆர்.எஸ்.எஸ் கும்பலின் கருத்து. ''பொக்கிஷம் கோவிலுக்குச் சொந்தம். கோவில் நிர்வாகம் மன்னனுக்குச் சொந்தம். அதில் அரசு தலையிடத் தேவையில்லை'' என்பது மார்க்சிஸ்டு

**ஒருவேளை கலைஞர் டிவிக்கு பதிலாக 'கலைஞர் கோவில்' என்றொரு ஆன்மீகக் கம்பெனியைத் தொடங்கி, அக்கோவிலின் உண்டியலில் 200 கோடி ரூபாயை காணிக்கையாக வரவு வைத்திருந்தால், கணக்கே கொடுக்காமல் பணத்தையும் காப்பாற்றி, கனிமொழியையும் கூட காப்பாற்றியிருக்கலாமோ?**



படிப்பகம்

www.padippakam.com



செத்துப் போன சாய்பாபா, 40,000 கோடிக்காக சூடு பிடிக்கும் வாரிசுச் சண்டை.

களின் கருத்து. ''பொக்கிஷம் பத்மநாப சுவாமிக்கு சொந்தம்'' என்பது காங்கிரசு முதல்வர் உம்மன் சாண்டியின் கருத்து. இவர்கள் எல்லோரது கருத்தும் சாராம்சத்தில் ஒரே கருத்துதான்.

யார் கொடுத்தார்கள், எவ்வளவு கொடுத்தார்கள், எதற்காகக் கொடுத்தார்கள் என்று எந்தவித விவரத்தையும் காட்டாமல், ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட செல்வத்தை வைத்துக் கொண்டு, கேட்டால் பகவானுக்கு வந்த காணிக்கை என்கிறார்கள். காணிக்கைக்குக் கணக்கு எழுதி வைக்கக் கூடாது என்று பகவான் சொன்னாரா, அல்லது பக்தன் சொன்னானா? கணக்கில் வராத பணத்தைத்தானே கருப்புப் பணம் என்று அழைக்கிறார்கள்?

திருவிதாங்கூரின் பாதாள அறையிலிருந்து மட்டுமல்ல, புட்டபர்த்தியிலுள்ள பாபாவின் தனியறையான யஜுர் வேத மந்திரத்திலிருந்தும் தங்கமும் வைரமும், கட்டு கட்டாகப் பணமும், காசோலைகளும் வருகின்றன. தனியறையில் படுத்து ஆன்மீக ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்குப் பதிலாக காணிக்கைகளை ஆராயக் காரணம் என்ன? பெண்டாட்டி, பிள்ளை இல்லாத பாபா யாருக்காக காணிக்கைப் பணத்தை தனியறையில் ஒதுக்கி வைத்தார்? வந்த காணிக்கைகளை அறங்காவலர் குழுவிடம் கொடுத்து ரசீது போடாமல், கோடிக் கணக்கான ரூபாயை ஏன் தன்னுடைய தனியறையில் பதுக்கி வைத்துக் கொண்டார் என்ற கேள்விகளை அரசாங்கம் எழுப்பவில்லை. பத்திரிகைகளும் எழுப்பவில்லை. பக்தர்களுக்கும் அது உரைக்கவில்லை.

அலைக்கற்றை ஊழலில் ஈட்டிய கணக்கில் வராத காசை சோதனை போட்டுப் பிடிக்கும் வருமான வரித் துறையோ, சி.பி.ஐ யோ பாபாவின் அறையைச் சோதனை போடவில்லை. ஒருவேளை கலைஞர் டிவிக்கு பதிலாக 'கலைஞர் கோவில்' என்றொரு ஆன்மீகக் கம்பெனியைத் தொடங்கி, அக்கோவிலின் உண்டியலில் 200 கோடி ரூபாயை காணிக்கையாக வரவு வைத்திருந்தால், கணக்கே கொடுக்காமல் பணத்தையும் காப்பாற்றி, கனிமொழியையும் கூட காப்பாற்றியிருக்கலாமோ?

வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் குவித்து வைத்திருக்கும் கருப்புப் பணத்தைக் கைப்பற்றி மக்களுக்குச் சொந்தமாக்குவதற்காக சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்றை அமைத்திருக்கிறது உச்சநீதி மன்றம். கருப்புப் பணத்தைப் பதுக்குவதற்கு வெளிநாட்டுக்கு ஓடுவதும், கே மேன் ஐலாண்ட், மொரிஷியஸ் போன்ற தீவுகளைத் தேடுவதும் மேற்கத்திய சிந்தனை முறையில் உதித்த வழிமுறைகள். பாரம்பரியமிக்க நமது பாரத மரபில் இதற்கான பல வழிமுறைகள் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் தொன்மையானது திருவிதாங்கூர் நிலவறை. நவீனமானது பாபாவின் யஜுர்வேத மந்திரம். இவை எந்தச் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் பிடிக்கும் சிக்காதவை.

ஏனென்றால் இவை ஆன்மீக உரிமைகள் என்ற இரும்புப் பெட்டகத்தினால் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படும் பௌதீகத் திருட்டுச் சொத்துகள். தற்போது தோண்டியெடுக்கப்பட்டுள்ளவை அனைத்தும் தொல்லியல் மதிப்புமிக்க செல்வங்கள் அல்ல. அவற்றில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவை அனைத்தும் தங்கத்தின் வடிவிலான பணம். அவ்வளவே. அவை இந்த நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமே உரிமையான சொத்து. அவர்களுடைய முன்னோர்களிடமிருந்து பிடுங்கப்பட்ட செல்வம்; சுரண்டப்பட்ட உழைப்பு.

திருவிதாங்கூர் அரசாட்சி கீழ் விவசாயிகள் மீதும், ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்கள் மீதும் நம்பூதிரிகளும், நாயர்களும் இழைத்த கொடுமைகளையும், அவ்வரசாட்சியின் கீழ் மக்களுடைய அவலமான வாழ்நிலையையும், ஆங்கிலேயனுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு நம் நாட்டு மக்களுக்கு அந்த மன்னர் பரம்பரை இழைத்த துரோகத்தையும் காட்சிப்படுத்தி, இரத்தம் தோய்ந்த அந்த வரலாற்றின் பின்புலத்தில், கண்டெடுக்கப்பட்ட இந்த ஒரு இலட்சம் கோடிப் புதையலைப் பார்வைக்கு வைக்க வேண்டும்.

அப்போதுதான் இந்தப் புதையல் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்ற விவரத்தைக் காட்டிலும், யாரிடமிருந்து எடுக்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையின் முக்கியத்துவம் நிலை நிறுத்தப்படும்.

**தற்போது தோண்டியெடுக்கப்பட்டுள்ளவை அனைத்தும் தொல்லியல் மதிப்பு மிக்க செல்வங்கள் அல்ல. அவற்றில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவை அனைத்தும் தங்கத்தின் வடிவிலான பணம் அவ்வளவே. அவை இந்த நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமே உரிமையான சொத்து.**

• மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

# தலித் மாணவர்களைக் கொல்லும் உயர்கல்வி நிறுவனங்கள்

டாக்டர் ஜஸ்ப்ரீத் சிங், ஒரு தலித் மாணவன். ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த இவர் நன்றாகப் படிக்கும் மாணவர். பள்ளியில் அனைத்துப் பாடங்களிலும் முதல் மதிப்பெண் எடுத்துத் தேர்ச்சி பெற்றார். மருத்துவர் ஆக வேண்டும் என்பது மட்டுமே அவரது இலட்சியம், கனவு. ஆனால் அந்தக் கனவு நிறைவேற இந்த சமூகம் அனுமதிக்கவில்லை.

ஜஸ்ப்ரீத் சிங் வறுமையால் வாடும் சாதாரண தலித் குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவர். வீட்டின் மூத்த பிள்ளையான இவரோடு, மற்ற மூன்று இளைய சகோதரிகளையும் உள்ளடக்கியது அவரது குடும்பம். தந்தை வேலைக்குப் போகிறார். தாய் வீட்டு வேலைகளையும் கவனித்தபடியே தூங்கும் நேரம் தவிர எப்போதுமே தையல் வேலையைத் தொடர்ந்து செய்து வந்தார்.

படிப்பில் திறமையுடன் விளங்கிய ஜஸ்ப்ரீத்தின் படிப்புக்காக மொத்தக் குடும்பமுமே ரத்தத்தை வியர்வையாக்கி, உழைத்துத் தியாகம் செய்தது. மகனை ஒரு ஊர் போற்றும் மருத்துவனாகப் பார்க்க அந்தத் தாயும் ஆசைப்பட்டாள். மூன்று பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு வரதட்சிணைக்கு பொருள் சேர்க்க வேண்டிய நமது இந்திய சூழலில் தனது மகனது கனவுப் படிப்புக்காகவும் அந்தத் தாய் ஓய்வறியாமல் வேலை செய்து வந்தார்.

சண்டிகர் அரசு மருத்துவக் கல்லூரியில் ஜஸ்ப்ரீத் சிங் தனது மருத்துவப் படிப்புக்காக சேர்ந்தார். முதுநிலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சண்டிகரில் தனது மேற்படிப்பான எம்.டி படிப்பை படிக்க வேண்டும் என்பதுதான் ஜஸ்ப்ரீத் இன் திட்டம். இத்திட்டத்தின்படி நான்கு ஆண்டுகள் இளநிலை மருத்துவப்படிப்பில் பெரிய பிரச்சினைகள் இல்லாமல்தான் கழிந்தது.

அதன் பிறகுதான் அனைத்துப் பாடங்களிலும் அதிக மதிப்பெண் எடுத்துத் தேர்ச்சியடைந்த ஜஸ்ப்ரீத்-இன் வாழ்வில் சூறாவளி வீசத் துவங்கியது. இறுதியாண்டு படிக்கும்போதுதான் பேரா. என்.கே. கோயல் என்பவரது மூலம் தொல்லை ஆரம்பமானது. சாதி வெறியனான என்.கே. கோயல் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஜஸ்ப்ரீத் சிங்கை சாதியின் பெயரால் அவமானப் படுத்தினான்.

''தலித் என்பதால்தான் உனக்கு இங்கே படிக்க அனுமதி கிடைத்துள்ளது. எப்படியோ மருத்துவப் படிப்பில் இடம் பிடித்து விட்டாய். ஆனால் உன்னை தேர்ச்சியடைய விட மாட்டேன். உன்னால் முடிந்ததைப் பார்த்துக் கொள். நான் உன்னை மீண்டும் முதலிலிருந்து மருத்துவப் படிப்பை மேற்கொள்ளச் செய்யாமல் விட மாட்டேன்'' என்றெல்லாம் சவால் விட்டுள்ளான்.

இதைத் தொடர்ந்து, மருத்துவப் படிப்பில் முக்கியப் பாடங்களில் ஒன்றான கம்யூனிட்டி மெடிசின் பாடத்தில் வேண்டுமென்றே ஜஸ்ப்ரீத் சிங்கை தோல்வியடையச் செய்தான். இந்த அநீதியைத் தனது சக மாணவர்களிடமும், பிற பேராசிரியர்களிடமும் எடுத்துரைக்க முற்பட்டார் ஜஸ்ப்ரீத். மீண்டும் தேர்வு எழுதியும் ஒரு மதிப்பெண் குறைவாகப் போட்டு அவரை தேர்வில் தோல்விடைய வைத்தான் சாதி வெறி பிடித்த கோயல்.

மனம் கலங்கிய மாணவர் ஜஸ்ப்ரீத் இதனைத் தனது தாயிடம் கூறி கதறி அழுதுள்ளார். தாயும் மகனைத் தேற்றி வரும் தேர்வில் நன்றாக எழுத ஊக்கம் கொடுத்துள்ளார். ஆனால் சாதிவெறி என்ற எதார்த்தத்தில் தனது கனவு நனவாகப் போவதில்லை என்பதைப் புரிந்து கொண்ட ஜஸ்ப்ரீத் ஜனவரி 27, 2008



தற்கொலை செய்த
மருத்துவ மாணவர் ஜஸ்ப்ரீத் சிங்.

அன்று தனது 22-வது வயதில் கல்லூரி நூலகத்தின் ஐந்தாவது மாடியில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டார். அவரது சட்டைப் பையில் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியையும், அநீதி இழைத்த கோயலையும் குறிப்பாக எழுதி வைத்துவிட்டு மறைந்து விட்டார் ஜஸ்ப்ரீத் சிங்.

தன்னுடைய ஒரே மகனை இழந்த பெற்றோருக்கு கிடைத்த அந்தத் துருப்புச் சீட்டைக் கொண்டே காவல் நிலையத்தில் புகார் செய்தனர் அந்தப் பெற்றோர். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. உடனே அங்கிருந்த காவல்துறைக் கண்காணிப்பாளரை வேறு இடத்திற்கு மாற்றல் செய்தது அரசும், ஆளும் வர்க்கமும். இந்த வழக்கில் வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த ஏழைத் தந்தையின் தொடர்ச்சியான சட்டப் போராட்டத்தின் பிறகே தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கினைப் பதிவு செய்தனர்.

அதன் பிறகு சில உண்மைகள் வெளி வந்தன. முதலாவதாக தற்கொலைக் குறிப்பு ஜஸ்ப்ரீத் எழுதியதுதான் என நிரூபணமானது. அடுத்ததாக, அவர் தேர்ச்சியடையவில்லை என கோயலால் நிராகரிக்கப்பட்ட ஜஸ்ப்ரீத் -இன் கம்யூனிட்டி மெடிசின் தேர்வுத் தாள் அனைத்தும் மூன்று வெவ்வேறு பேராசிரியர்களால் மறு மதிப்பீடு செய்யப்பட்டது. அதில் ஜஸ்ப்ரீத் தேர்ச்சி பெற்றிருப்பது தெரிய வந்தது. ஆனால் இந்தச் செய்தியைக் கேட்க அதனை எழுதிய ஜஸ்ப்ரீத் உயிரோடு இல்லை.

இவ்வளவு ஆதாரப்பூர்வ தகவல்கள் இருந்தும் என்.கே. கோயல் ஒரு நாள் கூட சிறையில் இருக்கவில்லை. பேராசிரியராக, துறைத்தலைவராக இன்றும் தொடருகிறான். என்ன நடக்கும் என இலக்குத் தெரியாமலேயே இந்த வழக்கைக் கைவிடாமல் தொடர்ந்து நடத்தி வருகிறது அந்தக் குடும்பம். மறு



படிப்பகம்

www.padippakam.com

**''தலித் என்பதால்தான் உனக்கு இங்கே படிக்க அனுமதி கிடைத்துள்ளது. எப்படியோ மருத்துவப் படிப்பில் இடம் பிடித்து விட்டாய். ஆனால் உன்னை தேர்ச்சியடைய விட மாட்டேன். உன்னால் முடிந்ததைப் பார்த்துக் கொள்.''**

ஆண்டு சகோதரத்துவத்துக்காக கொண்டாடப்படும் ரக்ஷா பந்தன் தினத்தன்று தனது இயலாமை, பிரிவுத் துயருடன் கோபத்தை அடக்க முடியாத ஜஸ்ப்ரீத் சிங்-இன் இளைய சகோதரி நீதி வேண்டி தனது உயிரையே மாய்த்துக் கொண்டாள்.

சாதிவெறி ஆட்டத்தால், கொடுமையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு இளம்வயதினர் தங்களது வாழ்க்கையை முடித்துக் கொண்டுள்ளனர். இதனை ஒரு பொருட்டாகவே மதிக்காது, நீதி வழங்குவதை தவிர்த்து ஒரு தலித் வாழ்வின் மதிப்பு இவ்வளவுதான் என உறுதி செய்யும் அரசின் கொட்டத்தை நேரில் அனுபவித்திருந்தாலும் தங்களுக்கு என்ன நேர்ந்தாலும் சரி, நீதி கிடைக்காமல் ஓய மாட்டோம் எனத் தொடர்ந்து போராடி வருகிறார்கள் ஜஸ்ப்ரீத் சிங்கின் குடும்பத்தார்.

தொடர்ச்சியாக தலித் மாணவர்கள் மீதான தாக்குதல் பல கல்வி நிறுவனங்களில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதற்கு மேலும் ஒரு உதாரணம் மருத்துவர் பால்முகுந்த் பார்தி என்ற தலித் மாணவனின் கதை. மத்தியப் பிரதேசத்தில் உள்ள குணதேஸ்வர் என்ற பகுதியைச் சேர்ந்தவர் இவர். ஒடுக்கப்பட்ட சாம்பர் இனத்தைச் சேர்ந்த இவர் நன்றாகப் படிக்கக் கூடியவர். மேல் நிலை வகுப்பில் 78 சதவீத மதிப்பெண்களைப் பெற்று அதற்காகக் குடியரசுத் தலைவர் விருதையும், ஐஐடி நுழைவுத் தேர்வில் அகில இந்திய அளவில் 8 வது இடத்தையும் பெற்றுள்ளார். கால்நடை மருத்துவப் படிப்பில் முதலில் சேர்ந்த அவருக்கு ஆறு மாதம் கழித்து AIIMS இல் இருந்து அழைப்பு வந்தது. மருத்துவத் துறையில் ஆர்வம் இருந்த காரணத்தால் அங்கிருந்து வந்த அழைப்பை ஏற்று மருத்துவப் படிப்பில் சேர்ந்துள்ளார். CM-BT தேர்வில் கூட வெற்றி பெற்றுள்ளார். மேலும் இந்திய ஆட்சிப் பணிக்கான தேர்வுக்கும் தன்னைத் தயார் செய்து வந்தார். கல்விப்புலத்தில் மிகச்சிறந்த நபராகத்தான் இருந்து வந்தார் பால் முகந்த்.

அவரது குடும்பம் மிகவும் ஏழ்மையான சூழலில் இருந்தது. இரண்டு மகன், ஒரு மகள் என்ற அந்தக் குடும்பத்தில் தந்தை மட்டுமே வேலைக்குப் போகிறார். தாய் வீட்டைக் கவனித்துக் கொள்கிறாள். படிப்பில் சிறந்து விளங்கியதால் மொத்தக் குடும்பமுமே பால் முகுந்தை மருத்துவராக்க தன்னாலியன்ற வரை முயற்சி செய்துள்ளது. வங்கியில் மாத்திரமன்றி வெளியிலும் கடன் வாங்கித் தான் அவரை படிக்க வைத்துள்ளனர். அவரது தந்தைக்குக் கூலி சில சமயங்களில் மூன்று மாதமாகக் கூட கைக்கு வந்து சேராமல் இருக்கும். அதுபோன்ற தருணங்களில் திருமணமான சகோதரி கூட தலா 2500 ரூபாய் வரை மாதந் தோறும் கொடுத்து உதவியுள்ளார்.

இது வெறும் குடும்பப் பாசம் மட்டு மல்ல, அந்த சமூகத்தில் கடந்த 50 ஆண்டுகளில் ஒருவர் கூட கண்டறியாத கனவு மருத்துவராவது. இவர் மூலமாக அச் சமூகத்தின் பிற இளைஞர்களும் உந்தப்பட்டு உயர்வடைவார்கள் என அக் குடும்பத்தினர் கருதினர். ஆனால் அவர்களது இந்த கனவுக்கோட்டையை சாதி என்னும் கருங்கல் வந்து சுக்குநூறாக நொறுக்கியது.

டாக்டர் பால் முகுந்த்-இன் சாதி இன்னது என அறிந்த AIIMS பேராசிரியர்கள் அவரை முதல் நாளில் இருந்தே அவமானப்படுத்தத் தொடங்கி விட்டனர். படிப்பில் சிறந்து விளங்கிய அவரை, வெறும் சாதி அடிப்படையில் மட்டுமே தகுதி பெற்று மருத்துவம் படிக்க வந்தவர் என்று கேலி செய்தனர். முதலாமாண்டு துவங்கிய இந்த அவமானப்படுத்தல்கள் அவர் தற்கொலை செய்து கொண்ட இறுதி ஆண்டு வரை தொடர்ந்தது. இப்படிச் செய்தவர்களில் ஐவர் பேராசிரியர்கள். இது தவிர்த்து கல்லூரி முதல்வரும் ''தலித் ஆகிய நீங்கள் எல்லாம் மருத்துவராக முடியாது'' என்று அவரிடம் சவால் விட்டுள்ளார். பிரச்சினையைப் பெரிதுபடுத்தினால் தனது எதிர்காலம் பாதிக்கப்படுமே என்று கருதி, அதனைப் பொருட்படுத்தாமல் படிப்பில் தீவிரமாகக் கவனம் செலுத்தி வந்தார் பால் முகுந்த்.

பெற்றோர் மற்றும் உடன்பிறந்தோரிடம் தான் சந்திக்கும் அன்றாடப் பிரச்சினைகளையும், அதனால் ஏற்படும் மன வருத்தத்தையும் பகிர்ந்து கொண்டுள்ளார். தங்களை சாதியைச் சொல்லியே பேராசிரியர்கள் அழைப்பதையும், தங்களைப் பார்க்க மற்றும் பேச அவர்கள் மறுப்பதையும் மிகுந்த மன வேதனையுடன் பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். தலித் மாணவர்கள் வகுப்பில் கேட்கும் கேள்விகள் மற்றும் சந்தே



ஜஸ்ப்ரீத் சிங்கின் பெற்றோர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

கங்களுக்குப் பேராசிரியர்கள் பதில ளிக்க மறுப்பதை எடுத்துச் சொல்லி புலம்பியுள்ளார். செய்முறைத் தேர்வு களில் தாழ்த்தப்பட்ட மாணவர்களைத் தேர்ச்சியடைய விடாமல் தடுப்பதுதான் இந்தப் பேராசிரியர்களின் தலையாய பணியாக இருந்திருக்கிறது.

இதனையெல்லாம் பார்த்த பால் முகுந்த் படிப்பு முடிந்தவுடன் இந்தி யாவை விட்டுச் சென்றுவிட வேண்டும் என்று தனது வீட்டாரிடம் கூறியுள்ளார். தன்னுடைய குடும்பப் பெயரையும், சாதியையும் மாற்ற முடியுமா என்றெல் லாம் முயற்சி செய்துள்ளார். ஒரு கட்டத் துக்குப் பிறகு இந்தச் சாதிக்கொடுமை யைச் சகித்துக் கொண்டிருக்க முடியா மல், அதேநேரத்தில் தனது எதிர்காலம் கேள்விக்குறியாக மாறும் நிலையை உணர்ந்த பால் முகுந்த் இறுதியாண்டு படிக்கும்போது மார்ச் 3, 2010 அன்று தற்கொலை செய்து கொண்டார். அதற்கு இரு நாட்களுக்கு முன்னர்தான் அவரது தற்கொலை முயற்சி ஒன்று அவரது நண் பனால் தடுக்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவத்தை அப்படியே விட் டுவிடுமாறு AIIMS-இன் டீன் ராணி குமார், பால் முகுந்த்-இன் பெற்றோரி டம் கேட்டுக் கொண்டாராம். அதற்கு அவர்கள் மறுக்கவே ‘‘எங்கு சென்றா லும் நீங்கள் ஜெயிக்க முடியாது’’ என்று சவால் விட்டு, மன உளைச்சல் காரண மாகத்தான் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று கூறி வழக்கை முடிக் கப் பார்க்கிறது கல்லூரி நிர்வாகம். பால் முகுந்த்-இன் மன உளைச்சலுக்கு யார் அல்லது எது காரணம் என்று பெற்றோர் கேட்கும் கேள்விக்கு நிர்வாகம் பதில் அளிக்க மறுக்கிறது.

என்ன நடந்தாலும் சரி, நியாயம் கிடைக்க வேண்டும் என்று போராடி வருகிறது பால் முகுந்த்-இன் குடும்பம். ‘‘எங்களிடம் இழப்பதற்கு எதுவு மில்லை. எனவே இந்திய அரசிடம் நீதி கேட்டு இறுதிவரை போராடுவோம். நீதி கிடைக்காதபட்சத்தில் நாங்களும் தற்கொலை செய்து கொள்வோம்‘‘ என்று கூறிவிட்டு அழத் துவங்குகிறார் பால் முகுந்த்-இன் தந்தை. மகனை இழந்த தாயோ ‘‘புத்திசாலியான என் மகனைக் கொன்று விட்டார்களே. என் மகனே! என்னை விட்டு எங்கு சென்று விட்டாய்’’ என்று ஒப்பாரியுடன் அழுது கொண்டே இருக்கிறாள்.

டாக்டர் ஜஸ்ப்ரீத் சிங் மற்றும் டாக் டர் பால் முகுந்த் பார்த்தி ஆகியோரின் தற்கொலை பற்றி ஒரு செய்திப் படம்

**அடித்தட்டு வர்க்கங்களிலிருந்து மருத்துவர்கள் வந்தால் அவர்கள் எப்படி மக்களது சிரமங்களைப் புரிந்துகொண்டு மக்கள் மருத்துவராகப் பணியாற்றுவார்கள் என்பதறிவோம். அந்த வகையில் இந்த நாட்டின் ஏழைகளுக்கான மருத்துவர்களை வரவிடாமல் செய்யும் நாசகாரச் செயலாகத்தான் இந்தக் கொலைகளைக் கருது முடியும்.**

எடுக்கப்பட்டுள்ளது. டெத் ஆஃப் மெரிட் என்ற அந்த ஆவணப் படத்தில் சம்பவங்களுடன் இளைஞர்களின் குமு றல்களும் இடம் பெற்றுள்ளது. கடந்த ஓரிரு ஆண்டுகளில் இவ்வாறு மேற் படிப்புக்குப் போய் தற்கொலைக்குத் தள்ளப்பட்ட தலித் மாணவர்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.

மும்பை ஐஐடி-இல் பி.டெக் படித் துக் கொண்டிருந்த ஸ்ரீகாந்த், 2007 புத் தாண்டுப் பிறப்பன்று இக்கணக்கைத் துவக்கி வைத்தார். ஐஐஎஸ்சி-இன் ஆய்வு மாணவர் அஜய் எஸ்.சந்திரா, ஹைதராபாத் பல்கலை இயற்பியல் ஆய்வு மாணவர் செந்தில்குமார், கான் பூர் ஐஐடி-இன் பி.டெக் மாணவர் பிர சாந்த் குரீத், எம்.டெக் மாணவன் ஜி.சுமன், அங்கித வெக்தா என்ற அகம தாபாத் நர்சிங் மாணவி, ஷியாம் குமார் என்ற பிடெக் மாணவர், அமராவதி என்ற ஆந்திரப் பிரதேச குத்துச்சண்டை வீராங்கனை, அவ்வூரைச் சேர்ந்த பி.காம் மாணவி பாந்தி அனுஷா, புஷ் பாஞ்சலி பூர்தி என்ற பெங்களூரு எம்பிஏ மாணவி, லக்னோ மருத்துவக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர் சுசீல்கு மார் சவுத்ரி, பெங்களூரில் விவசாய விஞ்ஞானம் படித்த ரமேஷ், கான்பூர் ஐஐடி-இல் பிடெக் படித்த மாதுரி செல்,



மும்பை ஐ.ஐ.டி:
உயர் கல்வி நிறுவனமா?
ஆதிக்க சாதி வதைக்கூடமா?

ஹைதராபாத்-இல் பிடெக் மாணவி யான வீ.வரலட்சுமி, ரூர்கி-இன் பிடெக் மாணவன் மணீஷ் குமார், லினேஷ் மோகன் காவ்லே என்ற டெல்லி பிராந் திய பொறியில் கல்லூரி ஆராய்ச்சி மாணவன் என அப்பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

புதிதாக இப்பட்டியலைப் பார்ப்ப வர்களுக்கு இத்தனை சாதிக் கொடுமை கள் நம் நாட்டிலா? என்று ஆச்சரியமாக இருக்கலாம். இவையனைத்தும் கணக் கில் வந்தவை. ஆகவே இவை விதி விலக்கானவைதான். எல்லாவற்றையும் தொகுத்தால் பட்டியல் தாங்காது. இந்தத் தற்கொலைகள் கோழைத்தனமான வையா? இல்லை, நிச்சயம் இல்லை. இவை ஆதிக்க சாதிவெறி நடத்தியிருக் கும் படுகொலைகள். வல்லரசாகப் போகும் இந்தியாவின் சாதனைகள் இந் தக் கொலைகள். தாங்கள் நாகரீக உல கைச் சேர்ந்தவர்கள் என்று நினைத்துக் கொள்ளும் ஒவ்வொருவரையும் கூனிக் குறுக வைக்கின்றன இந்தக் கொலைகள்.

இவை பார்ப்பனியத்தின் சாதி ரீதி யான அடக்குமுறை என்று மட்டும் பார்க்க கூடாது. அடித்தட்டு வர்க்கங்களி லிருந்து மருத்துவர்கள் வந்தால் அவர் கள் எப்படி மக்களது சிரமங்களைப் புரிந்துகொண்டு மக்கள் மருத்துவராகப் பணியாற்றுவார்கள் என்பதறிவோம். அந்த வகையில் இந்த நாட்டின் ஏழைக ளுக்கான மருத்துவர்களை வரவிடாமல் செய்யும் நாசகாரச் செயலாகத்தான் இந்தக் கொலைகளைக் கருது முடியும். ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வி கற்கும் உரிமையை பல நூற்றாண்டுகளாக மறுத்து வரும் பார்ப்பனியத்தை என்றைக்குக் கல்லறைக்கு அனுப்பு கிறோமோ அன்றுதான் நம் நாட்டு மக் களுக்கு சமூக விடுதலை கிடைக்கும்.

அதுவரை இன்னும் எத்தனை இளை ஞர்களை இழக்கப் போகிறோம்?

● ஜென்னி



படிப்பகம்

www.padippakam.com

## திரை விமரிசனம் - தி ரெஸ்ட்லர்:

# அமெரிக்க மல்லர்களின் உண்மைக் கதை


டெர்மினேட்டர்களாகவும், ராம் போக்களாகவும் அவதரித்து தீயவர்களோடு சண்டையிட்டு உலகை மாபெரும் அபாயத்திலிருந்து அமெரிக்கர்கள் காப்பாற்றுவதாக வரும் ஹாலிவுட் திரைப்படங்களின் இடையே எதார்த்த வாழ்க்கையின் கதைகளைச் சொல்லும் படங்களும் அபூர்வமாக வருவதுண்டு. அவ்வாறான ஒரு படம் தான் 2008-இல் வெளியான 'தி ரெஸ்லர்' (THE WRESTLER).

நரம்புகள் தளர்ந்து, இரத்தத்தின் வேகம் குறைந்து, வயோதிகத்தின் வாயிலில் நிற்கும் ஒரு தொழில்முறை மல்யுத்த வீரனின் வாழ்க்கையைப் பேசும் அக்கதையின் நாயகன் ராண்டி. வில்லன் இல்லாத இத்திரைக்கதையில் சூட்சுமமான எதிர்நாயகன் ஒருவனும் உண்டு. பிரமாண்டமான அமெரிக்கப் பொழுதுபோக்குத் தொழில் எனும் அந்த வில்லன் தனது நாயகர்களைப் பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறியும் வலியை இந்தத் திரைப்படம் அழுத்தமாக உணர்த்துகிறது.

நிஜ உலகில் நமக்குக் கடும் ஆச்சரியத்தை உண்டாக்கும் எத்தனையோ அம்சங்களின் மறுபக்கத்தை, நம்மிடம் இருந்து மறைக்கப்படும் பக்கத்தை வெள்ளித்திரையின் வெளிச்சத்தில் காட்டுகிறது 'தி ரெஸ்லர்'. அதற்கு முன் ரெஸ்லர் திரைப்படத்தின் கதைச் சுருக்கத்தை பார்ப்போம்.

•••

ராண்டி என்கிற ரோபின் ராம் ஸின்ஸ்கி எண்பதுகளில் நட்சத்திரமாய் விளங்கிய தொழில்முறை மல்யுத்த வீரன். இருபது வருடங்களும் இளமைத் துடிப்பும் வழிந்து ரத்தம் சுண்டிப் போன பின் இப்போது அவன் ஒரு பல்பொருள் அங்காடியின் வேலை செய்து அன்றாட ஜீவனத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறான். ஆனாலும் பழைய வாழ்க்கையையும், இரசிகர்களின் ஆரவாரத்தையும், அது கொடுத்த புகழ் போதையையும் மறக்க முடியாத அவன் வார இறுதி நாட்களில் சிறு நகரமொன்றின் சிறிய அளவிலான மல்யுத்தப் போட்டிகளில் பங்கு கொள்கிறான்.




ஒரு கட்டத்தில் அவனது ஒப்பந்ததாரர்கள் அவன் புகழுடன் இருந்த காலத்தில் மல்யுத்த மேடைகளில் அவனது பிரதான எதிரியாக இருந்த அயதுல்லா கொமேனி என்பவனோடு ஒரு போட்டியை ஏற்பாடு செய்கிறார்கள். இளமை தொலைந்து உடல் தளர்ந்து போன நிலையில் இருக்கும் ரேண்டி, இந்தப் போட்டிக்காக தனது உடலை ஊக்க மருந்துகளின் துணையோடு தயாரிக்கிறான். ஆனால் அந்தப் போட்டிக்கு முன் உடலில் செலுத்திய ஊக்கமருந்துகளின் விளைவாக அவனுக்கு மாரடைப்பு ஏற்படுகிறது.

அதன் பின் பைபாஸ் சர்ஜரி செய்து கொள்ளும் ராண்டி, இனிமேலும் மல்யுத்தப் போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்வது தற்கொலைக்கு ஒப்பானது என்று மருத்துவர்கள் தெரிவித்து விடுகிறார்கள். நட்சத்திரமாய் மிளிர்ந்து ஒளி வீசிய அவனது கடந்தகாலப் பெருமைகளோடு நிகழ்கால எதார்த்தம் முரண்படுகிறது - அதன் முடிவில் எதார்த்த நிலைமைகளே ஜெயிக்கிறது. ராண்டி தனது வார இறுதி நாட்களில் ஒரு அங்காடியில் விற்பனைப் பிரதிநிதியாகப் பணிக்குச் சேர்கிறான்.

மல்யுத்த மேடையின் ஒளிவெள்ளமும், இரசிகர்களின் ஆரவாரமும் புடைசூழ வாழ்ந்த ராண்டி முதன்முறையாக தனித்து விடப்படுகிறான். கதையில் அவனுக்கு ஒரு தோழியும் இருக்கிறாள். ஸ்ட்ரிப் க்ளப் எனப்படும் உடலைக் காட்டி முக்கால் நிர்வாணத்தோடு நடனமாடுபவளாய் ஒரு பாரில் பணிபுரியும் அவளும் ரேண்டியைப் போலவே நடுத்தர வயதின் வாயிலில் நிற்பவள் தான். உடல் தளர்ந்து தனிமையில் வாடும் ராண்டிக்கு அவளின் நட்பு ஆறுதலாய் இருக்கிறது. அவளது யோசனையின் பேரில் முன்பு அவனால் கைவிடப்பட்ட ஒரே மகளைச் சந்தித்து மீண்டும் தனது உறவைப் புதுப்பிக்கிறான் ராண்டி.

ஒரு கட்டத்தில் தனது பழைய வாழ்க்கையை மறக்க முடியாத ராண்டி தனது மல்யுத்த நண்பர்களைத் தேடிப் போகிறான். அங்கே போதை மருந்து உட்கொள்ளும் அவன், மகளைச் சந்திக்க வருவதாகச் சொன்ன நேரத்தில் சந்திக்கத் தவறி விடுகிறான். தனது பதின்ம வயதுகளில் தந்தைப் பாசத்திற்காக ஏங்கிய அந்தப் பெண், மீண்டும் சிறிதாய் துளிர்விடத் துவங்கிய அந்த நம்பிக்கை முளையிலேயே கருகியதால் ஏமாற்றமடைகிறாள். ராண்டியைப் புறக்கணிக்கிறாள்.



படிப்பகம்

www.padippakam.com

இதற்கிடையே நடனமாடும் பெண் தோழியிடம் தன் காதலை வெளியிடுகிறான், ராண்டி. ஒரு விடலைச் சிறுவனுக்குத் தாயான அவளோ முதலில் அதை மறுக்கிறாள். காதலும் மறுக்கப்பட்டு மகளும் புறக்கணித்து விடும் சூழலில் கடுமையாக ஏமாற்றமடையும் ராண்டி, சொந்த வாழ்க்கையின் உறவுகள் தனக்கு ஒட்டாது என்று முடிவு செய்கிறான். தனது வாழ்வும், சாவும் மல்யுத்த மைதானத்தில் என்று தீர்மானிக்கிறான். தற்கொலைக்கு ஒப்பான ஒரு முடிவை எடுக்கிறான். மீண்டும் ஒரு போட்டியில் கலந்து கொள்கிறான். அது அயதுல்லா கொமேனி எனும் வீரனுடன் முன்பு திட்டமிடப்பட்ட போட்டி.

அந்தப் போட்டியின் துவக்கத்தில் ஒரு உணர்ச்சிப்பூர்வமான உரையை நிகழ்த்தும் ராண்டி, தன்னை இத்தனை ஆண்டுகளாக ரசித்து ஆதரித்த ரசிகர்களுக்கு நன்றி தெரிவிக்கிறான். தனது உலகம் இதுதானென்று அறிவிக்கிறான். போட்டி துவங்குகிறது. பைபாஸ் சர்ஜரி செய்து கொண்ட இதயம் போட்டியின் முரட்டுத்தனங்களுக்கு ஒத்துழைக்க மறுக்கிறது. ஊசியாய்க் குத்தும் வலியால் தடுமாறும் ராண்டி, ஒளிரும் விளக்குகளின் வெளிச்சத்தில், இரசிகர்களின் ஆரவாரத்தோடு (அயதுல்லா பெயர் ஈரானோடு சம்பந்தப்பட்டதால் ரசிகர்கள் யு.எஸ்.ஏ என்று கத்துகிறார்கள்) தட்டுத்தடுமாறி பக்கவாட்டுத் தடுப்பின் மீதேறி தனது எதிரியின் மேல் பாய்கிறான்.. அதோடு திரைப்படம் முடிகிறது.

•••

**மல்யுத்தம்:**
**விளையாட்டா, வெறியா?**

தற்காப்பு நடவடிக்கை அல்லது சண்டை என்பது எப்போது விளையாட்டாகிறது - எப்போது கலையாகிறது? உடலின் இயக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட லயத்தில் தொடர்ச்சியாக இயங்கும் போது உண்டாகும் நளினம் உடற்தசைகளோடு ஊறி, உடலையும் மனதையும் ஒரு பக்குவத்திற்குக் கொண்டு வந்து ஒரே நேர் கோட்டில் நிறுத்துகிறது. அப்போது அதன் உள்ளடக்கமாய் இருக்கும் வன்முறை என்பது இயல்பாகவே உதிர்ந்து, ஒரு கலையாகப் பரிணமிக்கிறது. இதுவே ஒரு குறிப்பிட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட, பாதுகாப்போடு நடக்கும் போது விளையாட்டாகிறது.

கலை எனும் அம்சத்தில் புறவயமாயுள்ள சமூக உலகின் சவால்களுக்கு ஒருவனின் அகநிலைமைகளைத் தயாரிக்கிறது - விளையாட்டு எனும் அம்சத்தில் புற உலகின் அழுத்தங்களில் இருந்து கண நேர விடுதலையையும், உடலுக்கும் மனதுக்குமான புத்துணர்வையும் அளிக்கிறது. பல ஆண்டு தொடர் பயிற்சிகளின் ஊடாக ஒருவனுக்குக் கிடைக்கும் ஆற்றல் புறநிலையில் மனிதர்களின் மீதான அன்பாக மிளிர்கிறது.

**அமெரிக்காவில் மட்டும் இதுவரை நூற்றுக்கணக்கான தொழில்முறை மல்யுத்த வீரர்களும், தொழில் முறை பாடிபில்டிங் வீரர்களும் அனபாலிக் ஸ்டிராய்டுகளின் பயன்பாட்டினால் மரணமடைந்துள்ளனர்.**

அதே கலை வணிகமாகவும், இலாபமீட்டும் தொழிலாகவும் மாறும்போது அது தன்னோடு சம்பந்தப்பட்டவர்களின் வாழ்வில் உண்டாக்கும் விளைவுகளைத் தான் ரெஸ்லர் திரைப்படம் நேர்மையாகக் காட்சிப்படுத்துகிறது. வீரன் ஒருவனுடன் ராண்டி மோதும் காட்சியைக் காணும் நமக்கு நரகலைக் கண்டது போல் அருவெறுப்புத் தோன்றக் கூடும். கையில் கிடைத்த பொருட்களையெல்லாம் வைத்துத் தாக்கிக் கொள்கிறார்கள். அந்த வீரன் ஸ்டாப்லரின் சிறிய ஊசிகளைக் கொண்டு ரேண்டியின் உடலெங்கும் குத்துகிறான். சுற்றியிருக்கும் இரசிகர்களோ கத்தி வெறியேற்றுகிறார்கள்.

அந்த அரங்கத்திலிருந்த இரசிகர்களின் தேசியவெறியை மேலும் தூண்டி, தன்மேல் ஒரு பரிதாபத்தைச் சம்பாதித்துக்கொள்ள ரேண்டி தன் உடலில் காயங்களை தானே உண்டாக்கிக் கொள்கிறான்.

மல்யுத்தம் என்பது விளையாட்டு என்பதைக் கடந்து தொழிலாகவும், அதிலும் குறிப்பாகக் கேளிக்கைத் தொழிலாகவும் இருப்பதன் இரகசியம் இந்த இரத்த இரசிகர்களின் வக்கிர ரசனையின் அடிப்படையில் தான் இருக்கிறது. WWE, TCW, TNA போன்ற கார்ப்பரேட் மல்யுத்தக் கேளிக்கை நிறுவனங்கள் அந்த இரசனையை மேலும் மேலும் வெறியேற்றிப் பயன்படுத்திக் கொள்கின்றன. காசுக்கு ஏற்ற தோசை என்பது போல் அதிக வலியையும், வேதனையையும் தன் உடல் மேல் ஏற்றுக் கொள்பவரே திறன்மிக்க வீரராக இரசிகர்களால் போற்றப்படுகிறார்.

மேடைகளில் காட்டும் வெறித்தனம் மட்டுமே போதாது என்பதால், இக்கேளிக்கை விளையாட்டை நடத்தும் கார்ப்பரேட் நிறுவனங்கள் வீரர்களிடையே நடக்கும் மோதல்களுக்கு நாடகம் போல ஒரு கதைப் பின்னணியையும் உருவாக்குகின்றன. அதற்காகவே ஒரு திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் போல் கதை எழுதவென்றே தனிப்பிரிவையும்



பேக்கரியில் வேலை செய்யும் ராண்டி.



படிப்பகம்

www.padippakam.com



கொலைவெறியை ரசனையாகக் கற்றுத் தரும் அமெரிக்க மல்யுத்தம் - விளையாட்டல்ல!

கூட சம்பளம் கொடுத்துப் பராமரிக்கின்றன. உதாரணமாக, எதார்த்த உலகில் அமெரிக்கா ஆக்கிரமிப்புப் போர் தொடுக்கும் நாடுகளைச் சேர்ந்தவர்கள் போல் சித்தரிக்கப்படும் மல்யுத்த வீரர்கள் வில்லன்களாகவும், அமெரிக்க வீரர்கள் நல்லவர்கள் போலவும் சித்தரிக்கப்படுகிறார்கள்.

இவ்வகையில் தான் சாமானிய விளையாட்டு ரசிகர்களான அமெரிக்கர்களைக் கூட போதை தலைக்கேறிய வெறியர்களாக திட்டமிட்டு மாற்றுகிறார்கள். பே பெர் வ்யூவ் எனப்படும் காசு கொடுத்து மல்யுத்தப் போட்டிகளைக் காண்பவர்கள் மூலம் கிடைக்கும் வருமானமே இந்த பில்லியன் டாலர் தொழிலில் பிரதானமானது எனும் செய்தியிலிருந்தே இது சராசரி அமெரிக்கர்களிடையே எந்தளவுக்கு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

சுமார் ஐந்தாயிரம் கோடிகளைக் குவிக்கும் இத்தொழிலில் விற்பனை செய்யப்படும் பண்டம் வெறித்தனமும், மிருகத்தனமும். அமெரிக்காவில் மட்டுமல்ல - அதை நுகர்வது உலகெங்கும் பரந்து விரிந்து கிடக்கும் இரசிகர் பட்டாளம் என்பது உங்களுக்கு வியப்பை ஏற்படுத்தலாம். ஆனால் அது தான் உண்மை. அமெரிக்காவின் மேலாதிக்க அரசியல் நலனுக்கேற்ற விதத்தில் இத்தகைய கேளிக்கைத் தொழில்கள் உலகெங்கும் தமது சாம்ராஜ்யத்தைக் கட்டியமைத்திருக்கின்றன.



குடும்பத்தைக் கொலை செய்து தற்கொலை செய்து கொண்ட கிரிஸ் பென்னோயிட்.

**ரத்தம்.. மேலும் ரத்தம்... மேலும் மேலும் ரத்தம்..!**

அமெரிக்காவில் மட்டும் இதுவரை நூற்றுக்கணக்கான தொழில்முறை மல்யுத்த வீரர்களும், தொழில் முறை பாடிபில்டிங் வீரர்களும் அனபாலிக் ஸ்டிராய்டுகளின் பயன்பாட்டினால் மரணமடைந்துள்ளனர். இது மட்டுமல்லாமல், தங்கள் உடலின் மேல் தாங்களே வலிந்து திணித்துக் கொள்ளும் வலியைப் போக்க அதீதமான வலி நிவாரணி மருந்துகளையும் உட்கொள்கிறார்கள். 2004-ஆம் ஆண்டு யு.எஸ்.ஏ டுடே எடுத்த நேர்காணலில் தான் நாளொன்றுக்கு 200 வலி நிவாரண மாத்திரைகளை உட்கொள்வதாக ஸ்காட் லெவி என்ற வீரர் தெரிவிக்கிறார்.

போதை மருந்துகளாலும், ஊக்க மருந்துகளாலும் செத்துப் போனவர்களில் பெரும்பாலானவர்கள் நம் நாயகன் ராண்டியைப் போலவே நடுத்தர வயதினர் அல்லது நடுத்தர வயதைக் கடந்தவர்கள். உடலின் ஒத்துழைப்பு விடைபெற்றுச் செல்லும் காலகட்டத்தில் நுகர்வோர்களான ரசிகர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய மருந்துகளின் துணையின்றி வேறு வழியில்லை. வயோதிகத்தின் எதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு ஒரு சராசரி வாழ்க்கையை இவர்களால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

பைபாஸ் அறுவை சிகிச்சைக்குப் பின் பல்பொருள் அங்காடியில் வேலைக்குச் செல்ல முயலும் ராண்டிக்கு ஒவ்வொரு கணமும் மல்யுத்த மேடையின் ஜொலிக்கும் ஒளி வெள்ளமும், ஆரவாரிக்கும் ரசிகர்களின் கூச்சலும் காதுகளுக்குள் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. இறுதிக்காட்சியில் ராண்டி தற்கொலைக்கு ஒப்பான அந்த முடிவை எடுக்க பழைய வாழ்வின் மீதான ஏக்கம் ஒரு காரணம் என்றால், இன்னொரு புறம் ரசிகர்களும் காரணம். இது ஒரு விதமான கையறு நிலை. தானே உருவாக்கிக் கொண்ட மரணக்குழி.

விளையாட்டு என்பது தொழிலாக மாற்றப்பட்டு விட்ட நிலையில், அதன் நுகர்வோரின் சந்தையின் முன் ரகரகமான வகையினங்களைக் கடைபரப்ப வேண்டிய தேவை எழுகிறது. அமெச்சூர் மல்யுத்தத்தில் ஒரு வீரரின் தொழில் நுணுக்கமும், அறிவாற்றலும் வெற்றியைத் தீர்மானிக்கிறது என்றால், இங்கே மனித இயல்பைத் தாண்டிய அசுர பலம் மட்டுமே வெற்றியைத் தீர்மானிக்கிறது. ஒரு வீரன் எத்தனை அடி வாங்குகிறான்,



படிப்பகம்

www.padippakam.com

எத்தனை ரத்தம் சிந்துகிறான், அந்த வலியையும் தாண்டி எப்படி ஜெயிக்கிறான் என்பதில் இருந்தே அவன் தனது வாடிக்கையாளர்களான ரசிகர்களைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள முடியும்.

இதற்கு மனித உடலின் சாத்தியங்களையெல்லாம் கடந்த ஒரு வலிமையும், கொடூரத்தனமும் தேவைப்படுகிறது. இயல்பான மனித உடலால் அது சாத்தியப்படாது என்கிற நிலையில் தான் போதை மருந்துகளை வீரர்கள் நாடுகிறார்கள். பார்வையாளர்களின் மன வக்கிரங்களை ஆற்றுப்படுத்த மேடையிலேயே இரத்தம் சிந்திக் காட்ட வேண்டும். இதற்காக கையுறைகளுக்குள் சிறிய பிளேடுகளை மறைத்து வைத்துக் கொண்டு தங்கள் முகங்களைத் தாங்களே கீறி இரத்தம் சொட்டச் சொட்ட மேடையில் நிற்கும் மல்யுத்த வீரனை வெறியுடன் கூடிய ரசிகர் கூட்டம் ஆரவாரித்துப் போற்றுகிறது. படத்தில் ராண்டியும் இந்த உத்தியைக் கையாள்கிறான்.

பண்டைய ரோம நாகரீகத்தில் கிளாடியேட்டர்கள் எனப்படும் அடிமைகளை ஒருவரோடு ஒருவர் மோத விட்டு அவர்கள் மடிந்து விழுவதைக் கண்டு ரசிக்கும் காட்டுமிராண்டிக் கலாச்சாரத்தின் நவீன வடிவம் தான் தொழில்முறை மல்யுத்தம். அன்றைய ரோம கிளாடியேட்டர்களின் கதை ஓரிரு போட்டிகளில் முடிந்து விடும். வலியும், வேதனையும் கண நேர அவஸ்தை தான். ஆனால், தொழில்முறை மல்யுத்த வீரர்கள் சுலபத்தில் இறந்து விடுவதில்லை. இந்த நரக வேதனையையும் மரண வஸ்தையையும் தங்களோடு சுமந்து திரிகிறார்கள் - தமது சுற்றாத்தாருக்கும் அதையே பரிசளிக்கிறார்கள்.

கிறிஸ் பென்னோய்ட் தொண்ணூறுகளிலும், இரண்டாயிரங்களின் மத்தியப் பகுதி வரையிலும் கூட மல்யுத்த மேடைகளைக் கலக்கிய கனேடிய வீரர். ஒவ்வொரு போட்டியிலும் அவரது இறுதித் தாக்குதலான (Finishing move) கிரிப்லர் க்ராஸ் பேஸ் எனும் பாய்ச்சலுக்கு மயங்காதவர் கிடையாது. அதீதமான ஊக்க மருந்துகளை உட்கொண்டதால் மூளை பாதிக்கப்பட்ட பென்னோய்ட், 2007-ம் ஆண்டு ஜூன் மாதம் தனது இரண்டு குழந்தைகளையும், மனைவியையும் கொன்று விட்டு தற்கொலை செய்து கொண்டார்.

ராண்டியின் வாழ்வுக்கும், பென்னோய்ட்டின் வாழ்வுக்கும் சாராம்சத்தில் வேறுபாடு ஏதுமில்லை. பென்னோய்ட் தனது மனைவியையும் குழந்தைகளையும் நேரடியாகக் கொன்றார் என்றால், ராண்டி தனது மகளுக்கு நியாயமாகக் கிடைத்திருக்க வேண்டிய பாசத்தை அளிக்காமல் புறக்கணித்து உளவியல் ரீதியில் கொல்கிறார். பென்னோய்ட்டின் தற்கொலையும் ராண்டி மீண்டும் போட்டியில் கலந்து கொள்ள முடிவு செய்வதும் கூட சாராம்சத்தில் ஒன்றே தான்.

ரெஸ்லர் திரைப்படத்தைப் பார்த்த பிரபல மல்யுத்த வீரரான ரவுடி ரோடி பைப்பர் கதறி அழுதிருக்கிறார். இவ்விளையாட்டுக்காகவும், ரசிகர்களின் அன்பைப் பெறுவதற்காகவும் தன்னைப் போன்ற நூற்றுக்கணக்கானவர்கள் செய்த தியாகங்களை இத்திரைப்படம் தனக்கு நினைவூட்டியதாகப் பின்னர் குறிப்பிட்டுள்ளார். தான் பிரபலமாயிருந்த காலத்தில் தனது உணவே பெயின் கில்லர் மாத்திரைகளாக இருந்ததையும், அதிலிருந்து விடுபட தான் போராடிய அந்த நினைவுகளும் இந்தத் திரைப் படத்தைக் காணும் போது வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் அவருக்கு நினைவில் வராத இன்னொரு அம்சமும் உள்ளது. திரைப்படத்தின் இறுதியில் ராண்டியின் உரை படத்தின் ரசிகர்களிடம் உண்டாக்க விரும்பும் அனுதாப உணர்ச்சியாகட்டும், ரவுடி ரோடி பைப்பரின் அழுகையாகட்டும் ஒரே தளத்தில் தான் நிற்கிறது. அது தன்னலமிக்க 'தியாக'த்தைக் குறித்து அவர்களே கொண்டிருக்கும் சுய கழிவிரக்கம் தான். எதார்த்தத்தில் ஆயிரக்கணக்கான மல்யுத்த வீரர்களையும், பாடி பில்டர்களையும், அமெரிக்க கால்பந்து வீரர்களையும் ஸ்டிராய்டுகளை நோக்கியும் பிற போதை வஸ்துக்களை நோக்கியும் தள்ளியது அவர்களது தியாகம் அல்ல. அது இத்தொழிலின் நுகர்வோரான ரசிகர்களின் வெறி கொண்ட விருப்பமும், இதை நடத்திக் கொண்டிருக்கும் கார்ப்பரேட் கம்பெனிகளின் லாப வெறியும் தான்.

படம் நெடுக அரூபமாய் உலாவந்து ராண்டியோடு வினையும், எதிர்வினையும் புரியும் அவனது எதிர்நாயகன் இவ்விரு அம்சங்கள் தான். திரைப்படத்திலும் சரி எதார்த்தத்திலும் சரி, தொழில்முறை மல்யுத்த வீரர்கள் தோற்றுப் போய் தாங்கள் வாழ்வை இழப்பது இவைகளிடம் தான். ஆனால், அந்த அடிமைத்தனத்தைத் தியாகமாகவே அவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். ரோடி பைப்பரின் கண்ணீர் சொல்லும் செய்தி அது தான். அதனால் தான் இறுதிக் காட்சிகளில் தனது அறியாமையையும், அடிமைத்தனத்தையும் தியாகமாக நினைத்துக் கொண்டு ராண்டி நிகழ்த்தும் அந்த உரை நமக்குள் கண்ணீரைக் கோரவில்லை - பரிதாபத்தைக் கோருகிறது.

பண்டைய க்ளாடியேட்டர்கள் ஒரு வகையில் இந்த முதலாளித்துவ க்ளாடியேட்டர்களினின்றும் உணர்வுத் தளத்தில் மேம்பட்டவர்களாயிருந்தார்கள். தாம் அடிமைகள் என்கிற குறைந்தபட்சப் புரிதல் அவர்களுக்கு இருந்ததாலேயே பின்னர் விடுதலை என்பதை நோக்கிய அவர்களின் முன்னேற்றம் சாத்தியமானது. ஆனால், இவர்களோ தங்களது எதிரி யாரென்று கூடத் தெரியாமல் நிழலோடு சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் படத்தை வாசகர்கள் அனைவரும் பார்க்க வேண்டும். தொலைக் காட்சியில் அமெரிக்க மல்யுத்தப் போட்டிகளுக்கு அடிமையாகி இருக்கும் நமது சிறார்களை எப்படி மீட்க முடியும் என்பதைக் கற்பதற்காகவாவது அனைவரும் இந்தப் படத்தைக் காண வேண்டும்.

வீரனை மெல்லக் கொன்றும், ரசிகனை விரைவாக வெறியனாகவும் மாற்றும் இந்த கேளிக்கைத் தொழிலின் இருண்ட பக்கங்களை இந்தத் திரைப்படம் காட்டுகிறது. அது காட்டத் தவறிய அரசியலை நாம் கண்டுபிடிப்பதற்கும் அதுவே உதவி செய்கிறது.

**பைபாஸ் அறுவை சிகிச்சைக்குப் பின் பல்பொருள் அங்காடியில் வேலைக்குச் செல்ல முயலும் ராண்டிக்கு ஒவ்வொரு கணமும் மல்யுத்த மேடையின் ஜொலிக்கும் ஒளி வெள்ளமும், ஆரவாரிக்கும் ரசிகர்களின் கூச்சலும் காதுகளுக்குள் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.**

● தமிழரசன்



படிப்பகம்

www.padippakam.com

# நடுத்தர வர்க்கத்தை திருப்திப்படுத்த ஊழல் எதிர்ப்பு காமடிகள்!

அகத்தியனின் கமண்டலத்தில் அடைபட்டுக் கிடந்த காவிரியைப் போல் ஊழல் முறைகேடுகளால் நாட்டின் வளர்ச்சியும் முன்னேற்றமும் தடைபட்டுக் கிடக்கிறதாம். விநாயகன் காக்கை உருவில் வந்து கமண்டலத்தைக் கவிழ்த்து காவிரியை விடுவித்தது போல் அண்ணா ஹசாரேவும், பாபா ராம்தேவும் ஊழல் தளைகளால் சிக்குண்டு கிடக்கும் இந்தியாவை விடுவிக்கப் போகிறார்களாம். அதன் பின் இந்தியா சுபிட்சமாகி பாலும், தேனும் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடத் துவங்கி விடுமாம். அப்புறம் மக்களுக்கு இருக்கக்கூடிய ஒரே கவலை பாய்ந்தோடும் பாலாறிலும், தேனாறிலும் ஈக்கள் மொய்க்காமல் பார்த்துக் கொள்வது மட்டும் தானென்றும் முதலாளித்துவ ஊடகங்கள் கடந்த சில மாதங்களாகப் பிரச்சாரம் செய்து வருகின்றன.

கடந்த ஏப்ரல் மாதத்தின் முதல் வாரம், உலகக் கோப்பை கிரிக்கெட் முடிந்து ஐ.பி.எல் போட்டிகள் துவங்குவதற்கு இடைப்பட்ட அந்த நாட்களில், ஆங்கிலச் செய்தி ஊடகங்களின் அரங்குகளில் அனல் பறந்து கொண்டிருந்தது. அது வரை நாட்டு மக்களுக்கு எந்தவிதத்திலும் அறிமுகமின்றி ஆர்.எஸ்.எஸ் பயங்கரவாத பயிற்சி முகாம்களின் பாடத்திட்டங்களில் மட்டுமே பதுங்கிக் கிடந்த அண்ணா ஹசாரே தில்லியில் உள்ள ஜந்தர் மந்தரில் ஜன் லோக்பால் மசோதாவை வலியுறுத்தி உண்ணா விரதத்தை அப்போது தான் ஆரம்பித்திருந்தார்.

உடனே இதுதான் ஊழலுக்கு எதிரான இறுதி யுத்தம் என்று ஊடகங்கள் போர்க்குரல் எழுப்பத் துவங்கின. இந்த யுத்தத்தில் மட்டும் எப்படியாவது வென்று விட்டால் இந்தியா வல்லரசாவதை யார் நினைத்தாலும் தடுக்க முடியாது என்று சொல்ல ஆரம்பித்தன. திசை தெரியாத இருளின் நிசப்தத்தில் ஆழ்ந்து கிடக்கும் ஒரு சமூகத்தில் இந்த உண்ணாவிரதம் ஒரு விடிவெள்ளியென்றும், மக்களுக்கான விடிவு இந்தப் போராட்டங்களில் பங்குகொள்வது மட்டும் தான் என்றும் சினிமா நடிகர்களும், பிற மேட்டுக்குடிப் பிரபலங்களும், சீமான்களும், சீமாட்டிகளும் தொலைக்காட்சித் திரையில் தோன்றி ஓயாமல் ஓதினர்.



ஊழல் எதிர்ப்புக் கோமாளி
அண்ணா ஹசாரே!

இதைத் தொடர்ந்து அண்ணா ஹசாரேவைப் பின்னின்று இயக்கிய என்.ஜி.ஓ.க்கள் பல்வேறு நகரங்களில் கூட்டிய கூட்டங்களில் சில பத்து பேர்கள் பங்கு பெற்று மெழுகுவர்த்தி ஏந்தி ஊர்வலம் வந்தனர். 'ஆஹா.. இதோ தெரிகிறது பாருங்கள் இந்தியாவின் தாஹீர் சதுக்கம்' என்று ஆங்கில ஊடகங்கள் புளகாங்கிதம் அடைந்தன. தமது ரசிகர்களையும் அவ்வாறே அடையச் செய்தன. அண்ணா ஹசாரேவின் போராட்டத்தை விமர்சித்த ஒரு சில ஊடகங்களும், இணையதளங்களும் இந்தத் திடீர்ப் போராளிகளுடைய ரசிகப் பட்டாளத்தின் கடுமையான விமர்சனங்களுக்குத் தப்பவில்லை.

அரசியல்வாதிகள் செய்யும் ஊழல்களுக்கு எதிராகவும், பிற முறைகேடுகளுக்கு எதிராகவும் எந்தவிதமான போராட்டங்களும் இன்றி நாடே மயான அமைதியில் ஆழ்ந்து கிடக்கும் நிலையில் வராது வந்த மாமணி போல் உதித்திருக்கும் அண்ணா ஹசாரேவை ஆதரிப்பது ஒன்றே இப்போதைய நமது கடமை என்றார்கள். இதை ஆதரிக்காதவர்கள் அனைவரையும் ஊழலுக்குத் துணை போகிறவர்களாகவே கருத முடியும் என்றார்கள். நீ எங்களோடு இல்லையென்றால் எமது எதிரியாகிறாய் என்று புஷ்ஷின் வார்த்தைகளில் அனல் கக்கினார்கள்.

நாடும் மக்களும் அமைதியாகத் தான் இருந்தனரா?

சர்வதேச அளவில் உலகமயமாக்கப் பொருளாதாரக் கொள்கைகள் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டதன் உச்ச விளைவாய் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தத்திற்கான எதிர்விளைவுகள் உலகளவில் கடந்த பத்தாண்டின் மத்தியப் பகுதியில் இருந்து வெளிப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது. ஐரோப்பிய நாடுகள் ஒன்றைத் தொடர்ந்து ஒன்று திவாலாகிக் கொண்டிருந்தன. அந்நிலையில் பல்வேறு நாடுகளில் வேலை இழப்பிற்கும், சமூக நலத்திட்டங்கள் ரத்து செய்யப்படுவதற்கும் எதிராக நடந்த போராட்டங்களால் ஐரோப்பியக் கண்டமே கொதிநிலையில் இருக்கிறது.

அதேபோல் வட ஆப்ரிக்க நாடுகளிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் மறுகாலனியாக்கப் பொருளாதாரக் கொள்கைகள் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டதன் விளைவாய் வாழ்விழந்த தொழிலாளர்கள் தமது போராட்டங்களைத் துவங்கியிருந்தனர். ஆங்காங்கே சின்னதும் பெரியதுமாய் குமிழ் விட்டுக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்த போராட்டங்கள் கடந்த இரண்டு வருடங்களில் மாபெரும் மக்கள் கிளர்ச்சிகளாக வெடித்தெழுந்துள்ளன. இலட்சக்கணக்கான மக்கள் பங்குபெற்ற அப்போராட்டங்களின் விளைவாய் சில நாடுகளில் ஆட்சியாளர்களே அஞ்சி ஓடும் நிலைமை கூட உருவானது.

ஆனால், ஒரு புரட்சிகரமான அரசியல் தலைமையின்றி தன்னெழுச்சியாக நடந்த அப்போராட்டங்கள் ஆட்சியாளர்களை மாற்றுவது என்கிற அளவில் தம்மைச் சுருக்கிக் கொண்டன. இருப்பினும், இன்றளவும் எகிப்தில் புதிதாய் அதிகாரத்தில் அமர்ந்துள்ள இராணுவத்திற்கெதிராக மக்கள் போராட்டங்கள் நடந்து தான் வருகின்றன. ஏமன், பஹ்ரைன் போன்ற நாடுகளில் அரசின் கொடூரமான அடக்குமுறையைத் தாண்டி இன்றும் போராட்டங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

ஒருபக்கம் மறுகாலனியாக்கப் பொருளாதாரக் கொள்கைகள் தீவிரமாக அமுல்படுத்தப்படுவதைத் தொடர்ந்து சமூக நலத்திட்டங்களை அரசு கைவிட்டது. இன்னொரு பக்கம் பொருளாதாரப் பெருமந்தத்தினால் ஏற்பட்ட வேலையிழப்பு என்று நடந்த இருமுனைத் தாக்குதல் மேற்கில் மக்களைத் தெருவிற்கு இழுத்து வருகிறது. புதிய பொருளாதாரக் கொள்கைகள் விளைவித்த சமூகப் பொருளாதாரச் சீர்குலைவிற்கான எதிர்வினை இந்தியாவிலும் இதே காலகட்டத்தில் வேறு வகைகளில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

நெருக்கடியிலிருந்து மீளவும், மேற்கில் சரிந்த தனது சந்தைகளை மறுகட்டமைப்பு செய்யவும் மூன்றாம் உலக நாடுகளின் வளங்களை அபரிமிதமாய் கொள்ளையடித்துச் செல்ல வேண்டிய தேவை பன்னாட்டுக் கம்பெனிகளுக்கும், தேசங்கடந்த தொழிற்கழகங்களுக்கும் இருந்தது. இவர்களுக்குச் சேவை செய்வதில் ஓட்டுக்கட்சிகளிடையே எந்தப் பாகுபாடும் இன்றி காங்கிரசு, பாரதிய ஜனதா, போலிக் கம்யூனிஸ்டுகள் என்று அனைவரும் ஓரணியில் நின்றனர். நாட்டின் எல்லைகளையும், வளங்களையும் பன்னாட்டு மூலதனத்திற்குத் திறந்து விட்டனர். இதன் வெளிப்பாடு தான் நிலப்பறிப்பு, இயற்கை வளங்களை கேள்விமுறையின்றி கூறு போட்டு விற்பது என்று பச்சையாக வெளிப்பட்டது.

இதன் காரணமாக ஒரு பக்கம் தேசத்தின் இயற்கை வளங்களைக் கைப்பற்ற பன்னாட்டுக் கம்பெனிகளிடையேயும்,

**செய்தி ஊடகங்கள் அண்ணா ஹசாரேவையும், பாபா ராம்தேவையும் நோக்கி தமது கேமராக்களைத் திருப்பிய இந்த இடைவெளியில் நிலப்பறிப்புக்கு எதிராகவும், தமது வாழ்வுரிமைக்காகவும் நடக்கும் மக்கள் போராட்டங்கள் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன.**

உள்நாட்டுத் தரகு முதலாளிகளிடையேயும் பெரும் போட்டி உண்டாகிறது. இந்தப் போட்டியும், அதனூடாய் நடந்த கழுத்தறுப்புகளும், உள்குத்துகளும் அவற்றில் நடந்த ஊழல்களை வெளிப்படுத்தி சந்தி சிரிக்க வைத்தது. ஸ்பெக்ட்ரம் விவகாரம் வெளிப்பட்டது கூட முதலாளிகளிடையே நடந்த கழுத்தறுப்புப் போட்டியின் விளைவாகத் தான். இன்னொரு பக்கம் பன்னாட்டு மூலதனத்தின் காலடியில் சரணடைந்திருந்த ஆளும் கும்பல் வளங்களைக் கைப்பற்றி அவர்களுக்குப் படையலிட மக்களை அவர்களின் வாழ்விடங்களில் இருந்து மூர்க்கத்தனமாய் வெளியேற்றிக் கொண்டிருந்தது.

வரலாறு காணாத ஊழல்கள் வெளிப்பட்டுக் கொண்டிருந்த அதே நேரத்தில், இழந்த தமது வாழ்வுரிமையை மீட்க மக்கள் போராட்டங்கள் நாடெங்கும் வெடித்துக் கிளம்பியது. நிலப்பறிப்பை எதிர்த்தும் வாழ்வுரிமையை மீட்கவும் சிங்கூர், நந்திகிராம், லால்கர், ஒரிசா, சத்தீஷ்கர், மத்திய பிரதேசம் மற்றும் இந்தியாவெங்கும் நடந்த மக்கள் போராட்டங்களின் செய்திகளே சென்ற ஆண்டு தலைப்புச் செய்திகளை ஆக்கிரமித்திருந்தது. இதுவே தேசமெங்கும் விவாதத்தில் இருந்தது.

நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் மக்களோடு கைகோர்த்து, களத்தில் நின்று அரசின் அடக்குமுறைக் கருவிகளை நேர்கொண்டு எதிர்த்தனர். இப்போராட்டங்களை நசுக்கியழிக்க மத்திய அரசு பச்சை வேட்டைப் படுகொலைகளை நிகழ்த்தியது. மத்திய இந்தியாவெங்கும் போராடும் மக்கள் சிந்திய இரத்தத்தால் சிவந்தது. தட்டிக் கேட்க நாதியில்லை என்று அம்மக்களை அற்பமாக நினைத்து நிலங்களையும், வளங்களையும் கேட்பாரின்றி தேட்டை போடலாம் என்று வாயில் எச்சிலூற கணக்குப் போட்டு வந்த பன்னாட்டுக் கம்பெனிகள் இன்று வரை கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றன.

பச்சை வேட்டைப் படுகொலைகள் பற்றிய செய்திகள் மனச்சாட்சி உள்ள எவரையும் பிடித்து உலுக்கும். புதிய பொருளாதாரக் கொள்கைகளால் பலனடைந்த நடுத்தர வர்க்கத்தின் பெரும்பான்மை அரசின் இந்த பயங்கரவாத வெறியாட்டத்தை மௌனமாக






படிப்பகம்




வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாலும் அவ்வர்க்கத்தின் ஒரு பிரிவினர் அரச பயங்கரவாதத்தைக் கண்டிக்க முன்வந்தனர். நாடெங்கும் நடந்த பச்சை வேட்டைப் படுகொலைகளுக்கு எதிரான கருத்தரங்குகளிலும், வேறு போராட்ட வடிவங்களிலும் இப்பிரிவினர் கணிசமான அளவில் பங்கு கொண்டனர்.

அறியாமையில் ஆழ்ந்திருக்கும் அப்பாவிக் கூட்டம் தானே என்று சாமானியமாய் கணக்குப் போட்டு களத்தில் இறங்கிய சிதம்பரம் - மன்மோகன் கும்பலால் மக்களுக்கு எதிரான இப்போரில் தீர்மானகரமான எந்த ஒரு வெற்றியையும் பெற முடியவில்லை. பல லட்சம் கோடி மதிப்பு கொண்ட கனிமங்களைச் சுரண்டிச் செல்ல பல நூறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டு காத்துக் கிடந்த பன்னாட்டு முதலாளிகளின் நிலவரம் தேன் கூட்டில் கையை வைத்த கதையாகிப் போனது.

ஆளும் கும்பல் உருவாக்கியளித்த 'வில்லன்' பொம்மை கூட்டத்தோடு நிற்கும் கள்ளன்' இதோ கள்ளன். அதோ கள்ளன்' என்று எல்லோருக்கும் முந்திக் கூச்சலிட்டு மற்றவர்களின் கவனத்தை மாற்றுவானாம். மொத்தக் கூட்டமும் அங்கும் இங்கும் அலைக்கழிந்து கொண்டிருக்க கள்ளனோ ஓசைப்படாமல் நழுவி ஓடுவானாம். அரசின் நிலப்பறிப்பையும், வாழ்வுரிமையை அழிப்பதையும் எதிர்த்து நாடெங்கும் மக்கள் போராடிக் கொண்டிருக்கையில் முதலாளித்துவ ஊடகங்கள் இதோ இது தான் உங்களது தலையாய பிரச்சினை என்று 'ஊழலை' அடையாளம் காட்டுகிறது.

நாடெங்கும் மெழுகுவர்த்தியும், கையுமாய்க் கூடும் சில பத்து மேட்டுக் குடியினரை வீரதீரமிக்க போர்வீரர்கள் என்கிறார்கள். இவற்றையெல்லாம் செய்திகள் போலல்லாமல் இருபத்து நான்கு மணி நேரமும் திரும்பத் திரும்பச் சொல்லி ஏதோ மொத்த நாடும், நாட்டு மக்களும் ஒட்டுமொத்தமாக வரிந்து கட்டிக் கொண்டு ஊழலை எதிர்த்துக் களத்தில் நிற்பது போலச் சித்தரிக்கிறார்கள்.

இவையெல்லாம் ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கான செய்தி ஊடகங்களின் திருகு வேலைகள் தானேயென்று புறந்தள்ளி விட முடியாது. இவர்கள் தான் தேசத்தின் அரசியல் அரங்கில் எது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும், எது பின் தள்ளப்பட வேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள். தேசிய அரசியலின் அவ்வப்போதைய திசை வழி என்னவென்று கார்ப்பரேட் செய்தி ஊடகங்களின் ஸ்டூடியோக்களில் இருந்து தான் தீர்மானிக்கிறார்கள். செய்தி ஊடகங்கள் அண்ணா ஹசாரேவையும், பாபா ராம்தேவையும் நோக்கி தமது கேமராக்களைத் திருப்பிய இந்த இடைவெளியில் நிலப்பறிப்புக்கு எதிராகவும், தமது வாழ்வுரிமைக்காகவும் நடக்கும் மக்கள் போராட்டங்கள் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன.

அண்ணா ஹசாரேவுடன் இன்முகத்தோடு பேசும் அதே அரசு தனது பயங்கரவாத முகத்தை ஐரோம் ஷர்மிளாவிடம் காட்டிக் கொண்டிருப்பதை மக்களின் கவனத்திற்கே வராமல் தடுக்கிறார்கள். இது ஒருபுறம் என்றால், புதிய பொருளாதாரக் கொள்கைகளின் அமுலாக்கத்தால் விளைந்துள்ள சீர்குலைவுக்கு எதிராக மக்களிடையே இயல்பாகத் தோன்றக் கூடிய ஆவேசம் எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்பதையும், அதன் இலக்கு என்னவாக இருக்க வேண்டும் என்பதையும் இவ்வூடகங்களின் ஸ்டூடியோக்களிலேயே தீர்மானிக்கிறார்கள்.

இதோ மும்பையின் இரண்டாவது பெரிய சேரிப்பகுதியிலிருந்து உழைக்கும் மக்களை பலாத்காரமாய் விரட்டியடித்து விட்டு அந்நிலத்தைப் பிடுங்கி ரியல் எஸ்டேட் முதலைகளின் கைகளில் ஒப்படைக்க மகாராஷ்டிர அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை அம்மக்கள் எதிர்த்து நிற்கிறார்கள். ஜெய்தாபூரின் அணுமின் நிலையத்தை எதிர்த்துப் போராடும் மக்களுடன் துப்பாக்கிச்



அண்ணா ஹசாரேவுக்காக மும்பை நடிகைகள்! நடுத்தர வர்க்கத்தின் சாமியாட்டம்!!

குழல் மூலம் பேச்சு வார்த்தை நடத்துகிறது அரசு. ஒரிசாவிலோ தென்கொரியாவின் போஸ்கோ நிறுவனம் உருக்காலை அமைப்பதற்காக அரசு மேற்கொண்டு வரும் நிலப்பறிப்பை எதிர்த்து மக்களுடன் சிறுவர்களும் களமிறங்கியுள்ளனர்.

இன்னும் இது போல் காஷ்மீரிலும், வடகிழக்கிலும் மற்றும் நாடெங்கும் விலைவாசி உயர்வுக்கெதிராக, விவசாயம் அழிக்கப்படுவதற்கெதிராக என நடந்து வரும் போராட்டங்களையெல்லாம் பின்தள்ளி விட்டு அண்ணா ஹசாரே புன்னகைக்கிறார். நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் இருக்கும் ஒரே பிரச்சினை 'ஊழல்' தான் என்றும், சகல பிரச்சினைகளுக்கும் சர்வரோக நிவாரணி இதோ இந்த ஜன் லோக்பால் மசோதா மட்டும் தான் என்றும் அண்ணா முன்மொழிகிறார். அதையே வழிமொழிகின்றன ஊடகங்கள்.

ஜன் லோக்பால் நிறைவேறி, அதன் மூலம் ஊழல் ஒழிந்து, நாடு உடனடியாய் வல்லரசாக மாறுவதை சில அரசியல்வாதிகள் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள் மட்டும் தான் எதிர்க்கப்பட வேண்டிய வில்லன்கள் என்றும் ஊடகங்கள் எடுத்துக் கொடுக்கின்றன. ஆனால், எதார்த்தத்தில் ஊழல் சட்டப்பூர்வமாகி, அதன் ஆன்மாவும் உயிரும் புதிய பொருளாதாரக் கொள்கைகளினுள் புதைந்து கிடக்கும் நிலையில், அதன் நடைமுறையில் ஏற்படும் சில்லறைத் திருட்டுகளையே ஒட்டுமொத்தமாக ஊழல் என்று முன்தள்ளுவதன் மூலம் உண்மையான ஊழலை மக்களின் பார்வையில் இருந்து இவர்கள் மறைக்கிறார்கள்.

புதிய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாய் உருவாகியிருக்கும் ஒரு புதுவிதமான நடுத்தர வர்க்கத்திற்கு இந்தக் கோரிக்கையும், இவர்கள் சொல்லும் போராட்ட வடிவமும் ஏற்புடையதாய் இருக்கிறது. ஊழல் என்றில்லை; எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் ஒரு வீடியோ கேம் முடியும் நேரத்தில் முடிந்து விட வேண்டும். அதிலும், வலி மிகுந்த போராட்டங்கள் ஏதுமின்றி அது சாத்தியப்பட வேண்டும் என்று கருதும் இவ்வர்க்கம், தமது ஊசலாட்ட மனப்போக்கிற்கு ஏதுவாக வைக்கப்படும் இது போன்ற எளிய தீர்வுகளைச் சட்டென்று பற்றிக் கொள்கிறது.

ஊழல் பேர்வழிகளைத் தூக்கில் போடுவோம் என்று அண்ணா ஹசாரே, பெய்டு நியூஸ் விவகாரத்தில் ஊழல் கறைபடிந்து ஊரெல்லாம் அம்பலமான டைம்ஸ் நௌ தொலைக்காட்சியிலும், நீரா ராடியா சார்பாக தரகு வேலை பார்த்து மாட்டிக் கொண்ட பர்க்கா தத்திடமும் எந்தக் கூச்சமும் இன்றிச் சொல்ல முடிகிறது என்றால், அதற்கு அடிப்படையாய் இருப்பது அவரது இரசிகர்களின் ஆழமான அரசியல் புரிதலற்ற மழுங்கல் தனமும், உடனடி விளைவைக் கோரும் அவர்களின் பாப்கான் காலாச்சாரமும் தான்.

ஆக, நடந்து வரும் இந்தக் கோமாளிக் கூத்துகள் அனைத்தும் நடுத்தர வர்க்க மக்கள் எதிர்த்துப் போராடி 'விளையாட' ஒரு வில்லன் பொம்மையை உருவாக்கிக் கொடுத்துள்ளது. இது கருத்துருவாக்கம் போன்றதொரு எதிர்ப்புருவாக்கம். இந்த எதிர்ப்பு என்பதும் அதற்கான போராட்டம் என்பதும் ஊழலுக்கு மெய்யான காரணமாக இருக்கும் பருண்மையான காரணிகள் அல்ல - இது வெறும் நிழல் சண்டை தான். எதார்த்தத்தில் இவர்கள் காற்றோடு கத்தி வீசிக் கொண்டிருக்கும் அதே வேளையில் நாட்டு வளங்கள் அனைத்தும் பின்வாசல் வழியே கொள்ளை போய்க் கொண்டிருக்கிறது.

அண்ணா கோரும் ஜன் லோக்பால் மசோதாவும், பாபாராம் தேவ் கருப்புப் பணத்தை திரும்பப் பெற முன்வைக்கும் யோசனைகளும் நடைமுறையில் சாத்தியமே இல்லாத தீர்வுகள். மொத்த அரசு இயந்திரமும் பழுதுபட்டுள்ளது என்று அறிவிக்கும் அண்ணா ஹசாரே, அதன் சிதைந்து போன பாகங்களைக் கொண்டே ஊழல் எதிர்ப்புக்கான புதிய இயந்திரத்தை உருவாக்கப் போவதாகச் சொல்கிறார். அதற்கு, அவர் 'பேச்சு வார்த்தை' நடத்திக் கொண்டிருப்பதும் அவரே ஊழல்மயமானது என்று சொல்லும் அதே பழைய இயந்திரத்தோடு தான்.

இப்படி நுனிக் கிளையில் உட்கார்ந்து கொண்டு அடிக்கிளையை வெட்டும் யோசனை என்பது எதார்த்தத்தில் இவற்றையெல்லாம் உண்மை என்று நம்பி மெழுகுவர்த்தியோடு களத்தில் நிற்கும் கும்பலை ஒரு கட்டத்தில் சோர்வுக்கும், அவநம்பிக்கைக்குமே உள்ளாக்கும். ஏற்கெனவே அரசியல் நீக்கம் செய்யப்பட்டு மழுங்கடிக்கப்பட்டிருக்கும் இவர்கள், இந்தப் போராட்ட அனுபவங்கள் தரும் ஏமாற்றத்தையும், தோல்வி மனப்பான்மையையும் தமது ஆயுசுக்கும் மறக்க மாட்டார்கள். அதோடு சேர்ந்து இனிமேல் உண்மையான சமூக மாற்றத்திற்கான எந்த விதமான போராட்டங்களுக்கோ முன்னெடுப்புகளுக்கோ ஆதரவு கூட அளிக்காமல் முற்றிலும் தம்மைத் தாமே சமூக விலக்கம் செய்து கொள்ளவும் கூடும்.

இதைத் தான் ஆளும் வர்க்கமும் எதிர்பார்க்கிறது. இதனால் தான் தமது வாழ்வுரிமைக்காக போராடும் மக்கள் மேல் ஆயுதப் படைகளை ஏவும் அரசு, அண்ணா ஹசாரேவோடு முகம் கொடுத்துப் பேசுகிறது - பாபா ராம்தேவை வரவேற்க நான்கு காபினெட் அமைச்சர்களை அனுப்பி வைக்கிறது. மக்கள் இந்த மோசடிகளைப் புரிந்து கொள்வதோடு, தமது போராட்டத்தின் தெளிவான இலக்கு மறுகாலனியாக்கப் பொருளாதாரக் கொள்கைகளும், அதை ஒரே குரலில் ஆதரிக்கும் ஓட்டுப் பொறுக்கிகளும் தான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**பானையில் கொதிக்கும் ஊழல்களுக்கும், முறைகேடுகளுக்கும், லஞ்ச லாவண்யங்களுக்கும், கருப்புப் பணப் பதுக்கலுக்கும் காரணமாக இருப்பது அதன் அடியில் எரியும் மறுகாலனியாக்கக் கொள்ளி தான்.**

பானையில் கொதிக்கும் ஊழல்களுக்கும், முறைகேடுகளுக்கும், லஞ்ச லாவண்யங்களுக்கும், கருப்புப் பணப் பதுக்கலுக்கும் காரணமாக இருப்பது அதன் அடியில் எரியும் மறுகாலனியாக்கக் கொள்ளி தான். எரியும் கொள்ளிக் கட்டையைப் பிடுங்கி விட்டால் கொதிக்கும் முறைகேடுகள் தானே அடங்கி விடும்.

● பாலன்



படிப்பகம்


www.padippakam.com

**சிறுகதை:**

# கடைசி பிளாட்பாரம்

**ப**வானியும், கார்த்திக்கும் தனித்தனியே தொலைபேசியில் அழைத்து அம்பத்தூர் இரயில்வே ஸ்டேசனுக்கு கட்டாயம் வரச்சொன்னது மனோகரனுக்கு பதட்டத்தையும், குழப்பத்தையும் வரவழைத்தது. பவானியும், கார்த்திக்கும் தொழில் தெரிந்த கட்டிங் மாஸ்டர்கள். அதை விட அயராத வேலைகளுக்கிடையேயும் தங்களுக்கிடையே காதலையும் கச்சிதமாக எக்ஸ்போர்ட் செய்து கொண்டனர். கட்டிங்கில் பிசிறு இல்லாதது போலவே, அவர்களது காதலிலும் பிசிறு இல்லாமல் பார்த்துக் கொள்ளும் இயந்திரமாகவே அவர்களுக்கு மாறிப் போயிருந்தான் மனோகரன். சமீபத்தில் அயனிங் செக்சனில் வேலைக்குச் சேர்ந்து நல்ல பெயரெடுத்த மனோகரன் பவானி, கார்த்திக் இருவரின் நெருக்கமான நண்பனாகவும், அவர்களது காதலுக்கு அளவுக்கு மீறிய ஆதரவாளனாகவும் உதவிக் கொண்டிருந்தான். முக்கியமாக அவர்களை யாராவது கம்பெனியில் கேலி, கிண்டல் பேசினால் மனோகரன் முந்திக்கொண்டு சண்டைக்குப் போவதோடு, காதலைப் பற்றி தத்துவ ஆவேசத்தோடு ஏதேதோ பேசவும் ஆரம்பித்தான்.

டைலர் செக்சனில் இருக்கும் ரவி ஒருமுறை, ''மச்சான், இதோட நான் எத்தன பீச பாத்துருக்கேன், ஒவ்வொரு பீசுக்கும் ஒரு ரேட் உண்டுடா மச்சான்'', என்று பவானி, கார்த்திக்கைப் பற்றி ஜாடை பேச, மனோகரன் பொங்கி எழுந்துவிட்டான். ''நாயே, அடுத்தவங்க லவ்வ கேவலமா பேச நீ யார்றா?'' என்று சண்டைக்குப் பாய ''ஏய்! சும்மா கெட நீ ஊர் நாட்டான், உனக்கு இன்னா தெரியும்? பெர்சா பாயுற! நான் யாரச் சொன்னேன்னு தெர்யுமா உனக்கு? பெசாம போவியா...'' என்று ரவியும் பாய அவர்களை இயல்பு நிலைக்குத் தள்ளிவிட மற்றவர்களுக்குப் பெரும்பாடாய் போனது. இருவரையும் சேர்த்து வாழ வைப்பதை ஒரு லட்சியமாகவே ஆக்கிக் கொண்டவன் போல மனோகரன் நடந்து கொண்டது மற்றவர்களுக்கு ஓவராகப் பட்டாலும், இந்தப் பையன் என்ன வித்தியாசமா ப்ரண்ட்ஷிப்புக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறான்? என்று ஆச்சர்யமாகவும் பேசிக் கொண்டார்கள்.



•••

**அ**ம்பத்தூர் இரயில்வே ஸ்டேசன், கடைசி பிளாட்பாரத்தின் கடைசி இருக்கை காலியாகக் கிடந்தது மனோகருக்கு பூரிப்பை வரவழைத்தது. வழக்கமாக யார் தொந்திரவும் இல்லாது தனியே ஒதுங்கிப் பேச தோதான இடம் அது. வேலைக்குப் போகும் பெண்கள் தங்களுக்குள் பரிமாறிக்கொண்ட குடும்பக் கதைகள், உழைத்து ஓடாகிப்போன தொழிலாளிகள் தனியே உளறிவைத்த துயரங்கள், எக்ஸ்போர்ட் மற்றும் சிறு தொழிற்சாலைக் காதலர்கள் உருகி உருகிப் பேசியும், சமயத்தில் குலுங்கி குலுங்கி அழுதும் தீர்த்த உணர்ச்சியின் அத்தனைக் கறையும் படிந்தது போல காட்சியளித்தது அந்த இரும்பு நாற்காலி. அதன் கைப்பிடியை மெல்ல யோசனையுடன் வருட மனோகருக்கு பழைய நினைவுகள் விழித்துக் கொண்டன.

''மனோகர், ஒண்ணு சொல்லுவேன் தப்பா நினைக்க மாட்டியே..!'' தயங்கி தவித்தான் கார்த்திக்.

''எங்கிட்ட என்ன பில்டப்லாம் நேரா விசயத்துக்கு வா! என்ன... பவானியோட சண்டையா..?''

''அதெல்லாம் இல்ல, நேத்து மகாபலிபுரம் போறோம்னு சொல்லிட்டு போனோம்ல, அங்க போவலடா...''

''பின்ன...? நிமிர்ந்து உட்கார்ந்தான் மனோகரன்.

''நம்ம எலக்ட்ரீசியன் பிரபு ரூம் இல்ல, திருவான்மியூர் அங்க போய்.. ஆள் இல்லியா கொஞ்சம் அப்படி, இப்படி இருந்துட்டோம்டா...?

''ஏய்... என்னடா ரொம்ப சாதாரணமா சொல்ற...? ரெண்டு வீட்டுக்கும் இன்னும் லவ் பண்றதே தெரியாது... தெரிஞ்சா பிரச்சினைன்னீங்க.. இதெல்லாம் வேற இப்ப நடந்தா எப்புடிடா..? ஏதாவது குழந்தை கிழந்தென்னு பார்ம் ஆனா பிரச்சனை பெரிசா ஆவாதா? நீங்க இப்படில்லாம் நடந்திப்பீங்கன்னு நினைச்சி கூட பாக்கலடா... இது ரொம்ப பிரச்சனைடா? முகத்தைச் சுழித்து பேசிக்கொண்டே போனான் மனோகரன்.

''டேய், மச்சான் நீயே புரிஞ்சுக்க லேன்னா எப்புடிடா? டயர்டா இருக்கேன்னுதான் அங்க போனோம், சூழ்நிலை.. ரெண்டு பேருமே.. விருப்பப் பட்டு... அப்படி ஆயிடுச்சுடா... ப்ளீஸ்... புரிஞ்சுக்க...

''ஏய், நீ என்னத்தச் சொன்னாலும் ரெண்டு பேருமே அவசரப்பட்டது தப்புடா, நீயாவது பலதையும் யோசிக்க வேணாமா? உங்களுக்கு உதவி செய்ய எங்க ஊர் வரைக்கும் எல்லாம் ரெடி பண்ணி வச்சிருக்கேன். ஆனா மேட்டர் இத மாதிரின்னு கேள்விப்பட்டா... டேஞ்சராயிடும்.''

**''ஏய்... என்னடா ரொம்ப சாதாரணமா சொல்ற...? ரெண்டு வீட்டுக்கும் இன்னும் லவ் பண்றதே தெரியாது... தெரிஞ்சா பிரச்சினைன்னீங்க.. இதெல்லாம் வேற இப்ப நடந்தா எப்புடிடா..? ஏதாவது குழந்தை கிழந்தென்னு பார்ம் ஆனா பிரச்சனை பெரிசா ஆவாதா?''**



படிப்பகம்

www.padippakam.com

‘‘அந்த அளவுக்கு இப்ப ஒண்ணும் பிரச்சனை இல்ல, நாங்க பாத்துதாண்டா நடந்துகிட்டோம் சேப்டியாதான் நடந்து கிட்டோம்... இதுக்கு மேல பயப்படாதடா மச்சான்... ஹீ..ஹீ

‘‘எல்லாம் ப்ளான் பண்ணி செஞ்சுட்டே சிரிச்சு மழுப்புற... ரெண்டு பேரும் சேர்ந்து சிக்கல்ல மாட்டாம இருக்கணும்... அப்புறம் எல்லாருக்குமே நல்லதில்ல... ஆமாம்!’’

‘‘அந்தளவுக்கு பீல் பண்ணாதடா மச்சான், உங்கிட்ட நாங்க எதையும் மறைக்க விரும்புல, இல்லேன்னா சொல்லுவேனா... பிரச்சனை ஆகுற அளவுக்கு ஒண்ணுமே நடக்கல... மச்சான், நீ தப்பா எடுத்துக்காம... எப்போதும் போல இருடா...’’ ராசி பண்ணினான்.

‘‘என்னய பத்தி இல்ல, பாதிப்புன்னு வந்தா மொதல்ல பவானிக்குத்தான் அதுவே துணிஞ்சிருக்குன்னா நான் என்னத்த சொல்ல? இனியாவது பாத்து நடந்துக்குங்க?.’’

‘‘ஏய் மச்சான் கூல்டா.. நீ இந்த அளவுக்கு ஃபீல் பண்ணுவேன்னு நினைக்கலடா? கம்பெனியிலேயே நீதாண்டா எங்க பர்சனல் எல்லாம் தெரிஞ்சவன், அடுத்தவங்க லவ்வுக்கு இந்த அளவு ஹெல்ப் பண்றவன் உன்ன மாதிரி யாரும் கிடையாதுடா... இனிம உன் அட்வைஸ் படி பாத்துக்குறேன்டா... நீ மட்டும் எப்போதும் போல இருடா.. ப்ளீஸ் ஓ.கேயா?’’ கார்த்திக் உருக்கத்தோடு பக்கத்தில் இருந்த மனோகரனின் தொடையை அழுத்தமாய் தட்டினான்.

திடுக், திடுக் என மின்சார ரயிலின் ஓசை கடந்து போக பழைய நினைவுகளிலிருந்து மீண்டவனாய் இமைகளை உதறி இருவரது வருகையை எதிர்பார்த்து அவசரகதியில் கால்களை ஆட்டினான் மனோகரன்.

அவசரமாய் வரச்சொன்னது எதற்காக இருக்கும்? ஒருவேளை இருவரும் தனியாகப் போய் தங்கியதில் ஏதும் விளைவுகள் உருவாகி இருக்குமோ? இல்லை வீட்டுக்கு விசயம் தெரிந்து பிரச்சினையாகி, ஓடிப்போய் விடலாம் என்று முடிவுக்கு வந்திருப்பார்களோ? எப்படி இருந்தாலும் இருவரையும் யாருக்கும் தெரியாமல் ஊர்ப்பக்கம் அனுப்பி விடலாம். ஏற்கெனவே, அங்குள்ள நண்பர்களுக்கு சொல்லி வைத்திருக்கிற மாதிரி ரிஜிஸ்தர் மேரேஜ் செய்து வைத்து எங்காவது பாதுகாப்பான இடத்தில் கொஞ்ச நாளைக்குத் தங்க வைக்க வேண்டியதுதான். ஏதும் தெரியாதது போல் கம்பெனியில் இருப்போம்.. இல்லை, வேலையே போனாலும் பரவாயில்லை... பவானியும், கார்த்திக்கும் சேர்ந்து வாழ எந்த எல்லைக்கும் போவது என மனதில் பலவாறு திட்டமிட்டுக் கொண்டே... எதற்காக இவ்வளவு அவசரமாக வரச் சொன்னார்கள்? என்று மனோகரன் இருப்பு கொள்ளாமல் தவித்தான்.

**‘‘மனோகர்.. எனக்கு மேரேஜ் பிக்ஸ் ஆயிட்டதால இனி எந்தப் பிரச்சனையும் வராம இருக்கணும்னா.. ரெண்டு பேரும் சேர்ந்து எடுத்துக்கிட்ட போட்டோஸ் செல்போன்ல உள்ள போட்டோ, மெசேஜ் எல்லாத்தையும் உன் முன்னாடியே ரெண்டு பேரும் அழிச்சிடணும்.’’**

‘‘ரொம்ப நேரமாயிடுச்சா? சாரி.. மனோகர்..’’ பவானி, கார்த்திக் இருவருமே ஒத்தாற்போல வழக்கமான உற்சாகக் குரலின்றி தயங்கியவாறு பேசினர்.

அவர்களைப் பார்த்த மாத்திரத்தில் வேறு எதையும் பேசவிடாமல், ‘‘வேற ஒண்ணும் ஆயிடலையே ! எதுக்கும் பயப்பட வேணாம்! எப்ப வேணாலும் நீங்க புறப்பட்டுப் போய் பத்திரமா இருக்க எல்லா ஏற்பாடும் இருக்கு ! நீங்க வேற எதுக்கும் கவலைப்படாதீங்க..! முழு தைரியம் கொடுத்துப் பேசினான்.

அவனது படபடப்பையும், எதிர்பார்ப்பையும் பார்த்து மகிழ்ச்சிக்குப் பதில் சற்று தயங்கிய கார்த்திக், பவானியைப் பார்த்து ‘‘நீயே சொல்லு’’ என்று தூண்டினான்.

இருவரின் தயக்கத்தினாலும் குழம்பிப்போன மனோகரன் ‘‘என்ன பவானி... எங்கிட்ட யோசிக்கிறீங்க... நீயாவது என்னன்னு சொல்லு? எதுக்கு அவசரமா புறப்பட்டு வரச் சொன்னீங்க..?

தயக்கத்தை உடைத்துக்கொண்டு பவானி திடமான முடிவோடு பேசினாள். ‘‘மனோகர்.. எங்க வீட்ல மாப்பிள்ள பாத்துட்டாங்க.. எங்க தூரத்து ரிலேசன்தான்.. வீட்டு நிலைமை.. தங்கச்சி படிப்பு எல்லாத்தையும் பாக்குறப்ப... நல்ல வேலைல இருக்குற அவரா வந்து கேக்குறப்ப.. என்னால மறுக்க முடியல... மேலும் எங்க ரெண்டு வீட்லயும் ஒத்துக்க மாட்டாங்க.. வீணா சண்டை ஆகி.. ஒருத்தருக்கொருத்தர் பிரச்சனை ஆகுறத விட எங்க வீட்டுப் பிரச்சினைக்கெல்லாம்.. இந்த மேரேஜ் ஒரு நல்லா முடிவா படுது... அதான்... கார்த்திக்கும், நானும் கலந்து பேசி மேக் கொண்டு லவ்வ கண்டினிவ் பண்றத விட்டுடலாம்னு முடிவு பண்ணிட்டோம்...’’

ஒருகணம் அதிர்ச்சியில் தொண்டை தூர்ந்து போனவன் மாதிரி பேச்சற்றுப் போனவன்.. வியப்பும், தன் மேலே வெறுப்பும் கொண்டவனாக கார்த்திக்கைப் பார்க்க,






படிப்பகம்

www.padippakam.com

‘‘ஆமாண்டா மச்சான்.. எங்க வீட்ல யும் ஏகப்பட்ட சிக்கல்டா, இப்ப இருக் குற நிலமைல உடனே மேரேஜ் பண்ண வும் முடியாது.. தவிர தனியா போய் வீட்ட எதுக்குற அளவுக்கு முடியாது.. அதான் ரெண்டு பேருமே பிராக்டிகலா யோசிச்சு முடிவு பண்ணிட்டோம்...’’

அவனது பேச்சுக்கு அதிர்ச்சியுடன் பவானியின் பிரதிபலிப்பை எதிர்பார்த் தான் மனோகரன், பவானி எந்தப் பதட் டத்துக்கும் ஆட்படாமல், ‘‘மனோகர்.. நீ ஷாக் ஆகாம.. வழக்கம் போல எங்க ளுக்கு நல்லது செய்யணும்னா... கடை சியா ஒரு உதவி செய்யணும்.. ப்ளீஸ் செய்வியா மனோகர்...?’’

மனோகரின் எந்தக் கருத்தையும் எதிர்பார்க்காமல், தங்களது முடிவுக்கு இருவருமே மாறி மாறி உதவி கோர.. குரல் கம்மி பதிலேதுமின்றி கனைத்துக் கொண்டான் மனோகரன். பவானி பளிச் சென நேரச் சிக்கனத்தோடு பேசினாள், ‘‘மனோகர்.. எனக்கு மேரேஜ் பிக்ஸ் ஆயிட்டதால இனி எந்தப் பிரச்சனையும் வராம இருக்கணும்னா.. ரெண்டு பேரும் சேர்ந்து எடுத்துக்கிட்ட போட் டோஸ் செல்போன்ல உள்ள போட்டோ, மெசேஜ் எல்லாத்தையும் உன் முன்னாடியே ரெண்டு பேரும் அழிச்சிடணும், இத வச்சி இனி ஒருத்த ருக்கொருத்தர் எந்த பிளாக் மெயிலும் பண்ணக் கூடாது.. நீதான் சாட்சி... எங்க பர்சனல் உனக்கு மட்டுந்தான் தெரியும்? நீ எங்களுக்கு நல்லது தான் செய்வ.. இருந்தாலும் உங்கிட்டயும்.. இதோட எல்லாத்தையும் மறந்துட்டு எப்பவும் போல நாம ப்ரண்ட்ஸா இருப்போம்னு சொல்லிடலாம்னுதான் வரச் சொன் னோம்... இதுல எங்களுக்கு எந்தப் பிரச் சனையும் இல்ல... மனோகர் நீ வேஸ்ட்டா டிஸ்டர்ப் ஆகாம இருந் தாலே, அது போதும் எங்களுக்கு...?

ஏதோ பேச எத்தனித்த மனோகரி டம் ‘‘ஆமாண்டா மச்சான்... நாங்க டிசைட் பண்ணிட்டோம். நீ இந்த விசயத் திலயும் எங்களுக்கு ப்ரண்டா ஹெல்ப் பண்ணுடா மச்சான்.. நாளைக்கு கம்பெ னில பார்ப்போம்...’’ பதிலை எதிர் பார்க்காமல் இருவரும் தனியே பிரிந்து நடந்தனர்.

மேற்கொண்டு பேசுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லாமல் அவர்கள் சென்ற திசையையே உற்றுப் பார்த்து இமைக்க மறந்தவனை... உராய்வு ஒலி எழுப்பி நின்ற மின்சார ரயில் இயல்பு நிலைக்கு கொண்டு வந்தது.

● **துரை. சண்முகம்**

# எக்ஸ்கியூஸ் மீ

எல்லா பொது இடங்களிலும்
எல்லா சந்தர்ப்பங்களிலும்
எதிலும் பட்டுக் கொள்ளாமல்
நழுவிச் செல்கிறது அந்தக் குரல்.

தனியே அழுது நிற்கும் குழந்தையிடம்
அக்கறையால் விசாரிக்கும் கூட்டத்தின் குறுக்கே,
என்னதென்று எவ்விதக் கேள்வியுமின்றி
‘எக்ஸ் கியூஸ் மீ ! கொஞ்சம் வழி விடுறீங்களா?’
என்று தன்வழியே
விரைந்து செல்கிறது அந்தக் கால்கள்.

ஓடும் பேருந்தில் ஒருவருக்கொருவர்
கல்விக் கட்டணம் பற்றிக் காரசாரமாய் பேசிக்கொண்டிருக்க,
காது கொடுக்க பிடிக்காதது போல்
‘எக்ஸ் கியூஸ் மீ ! கொஞ்சம் தள்ளிக்கிறீங்களா?’
என எட்டிப்போய்
காதில் ஹெட்போனை மாட்டிக் கொண்டு
கடுப்பாய்ப் பார்க்கிறது அந்த முகம்.

பெட்ரோல், டீசல்
விலை உயர்வுக்கெதிரான ஆர்பாட்டத்தை
தன்னை மறந்து கவனிக்கும் மக்களிடம்
‘எக்ஸ் கியூஸ் மீ...! போங்க.. போங்க...!’ என்று
விடாமல் ஹாரனை அடித்து விரட்டுகிறது அந்த வாய்.

அலுவலகம் கூட்டும் பெண்ணிடம்
‘இதோ குப்பை..’ என்று கச்சிதமாய்
தன் காலுக்கடியில் வேலை வாங்கிக் கொண்டு...
முடிவெட்டும் தொழிலாளியிடம்
முன்னும் பின்னும் கண்ணாடி பார்த்து
இம்மி பிசகாமல் வேலைத்தரத்தை உறுதி செய்து கொண்டு...

இப்படி... சகலத்திலும்
சமூக உழைப்பை அனுபவித்துக் கொண்டே,
நாட்டில் எது நடந்தாலும்
‘நீ எதையாவது செஞ்சுக்க.. எனக்கு வழிய விடு...
என்று ஒதுங்கிச் செல்கிறது அந்த உருவம்.

தன்னலம் தவிர வேறு எந்தக் கருத்திலும்
பிடிபடாமல் நழுவிச் செல்லும்
இது எந்த வகை மிருகம்?
மிருகங்களின் நடத்தை
இவ்வளவு மோசமாய் இருப்பதில்லை... எனில் !
இது வேறு என்ன?

● **துரை. சண்முகம்**



படிப்பகம்

www.padippakam.com

# மூக்குக் கடலை

எழும்பூர் ரயில் நிலையத்தின் நுழைவாயில், பயணிகள் காத்துக் கிடக்கும் அந்தப் பகுதியில் மின்விசிறிகளை சுவிட்ச் ஆஃப் செய்து வைத்திருந்தனர். பயணச் சீட்டு வழங்கப்படும் அந்தப் பகுதி என்னதான் பழைய கட்டிடமாய் இருந்தாலும், பயணிகள் பால் இரக்கமற்ற அதிகார வர்க்கத்தின் கல் மனதால் வெப்பம் வாட்டியது. தரையில் துண்டை விரித்து, பிள்ளை குட்டிகளுடன் சிலர் இரைந்து கிடந்தனர். இளவட்டங்கள் தூணில் சாய்ந்தபடி செல்போனில் நேரத்தை ஓட்டிக் கொண்டு கிடந்தனர்.

''சே! மெட்ராஸ்ல செம வெயிலு'' என்று ஊரையும் வெயிலையும் வெறுத்தவர்கள், ஒய்யாரமாக தான் மட்டும் ஏ.சி. அறையில் உட்கார்ந்திருக்கும் நிலைய அதிகாரியிடம் ஏன் மின்விசிறியை சுழல விடவில்லை என்று சூழ்நிலையிலிருந்து சிந்தித்து கேள்வி எழுப்பவும் தயாராக இல்லை. ஆனால் ஈரப்பதத்தைத் தேடித் தேடி இடத்தேர்வு செய்து கொண்டிருந்த ஒரு நாய் நிலைய அதிகாரி அறையை ஒட்டிப் போய் படுக்கையைப் போட, மோப்பம் பிடித்து சே! என அதிகாரி வந்து விரட்ட, பதிலுக்கு நாய் திட்டிக்கொண்டே ஓடியது. இப்படி பல்வேறு காட்சிகளுக்கிடையே வராண்டா பகுதியின் ஒரு மூலையில் கும்பலாகக் கொட்டிக் கிடந்தது போல குவியலாகப் படுத்துக் கிடந்தவர்களை ஒரு குரல் ''ஏய், உட்டோ... உட்டோ.. என்று விரட்ட, வாரிச்சுருட்டிக் கொண்டு குரல் காட்டிய திசைக்கு ஓட்டம் பிடித்தனர்.

ஆட்கள் எழுந்துபோன பின்பும் அவர்களின் ஆவி படுத்துக் கிடப்பது போல அவர்கள் படுத்துக்கிடந்த வியர்வைக்கறை தரையில் வரைபடம் போல படிந்து கிடந்தது. திரும்பவும் எங்கிருந்தோ வந்தவர்கள் கும்பலாக அதே இடத்தில் படுத்தனர் என்பதை விட களைப்பில் விழுந்தனர் என்பதுதான் சரியாக இருக்கும். அனைவருமே இருபத்தைந்து வயதுக்குட்பட்ட இளைஞர்கள். காலில் கேன்வாஸ் ஷூ, இறுக்கமான, கந்தலான ஜீன்ஸ், எண்ணெய் அறியாத தலைமுடி, கழுத்து முகம் என வியர்த்து ஓடுவதைத் தாண்டியும் தூக்கம் அவர்களை எதையும் உணர முடியாதவர்களாகக் கொன்று போட்டிருந்தது. அவர்களுக்கெல்லாம் காவல் போல அவர்களின் பைகளுக்குப் பக்கத்தில் ஒருவர் கண்களெல்லாம் மிளகாய் போல சிவந்து முழங்காலைக் கட்டிக் கொண்டு அசைந்து கொண்டே உட்கார்ந்திருந்தார்.

தோளில் ஒரு அழுக்குத் துண்டு, முழுதும் வியர்வையில் நனைந்து நிறம் மாறிய முழுக்கைச் சட்டை என்ற அவரது அடையாளம் தொலை தூரத்திலிருந்து பயணித்து வந்திருப்பதை பல வகையில் அடையாளங் காட்டியது. கைக்குப் பக்கத்தில் அவர் சொந்தம் கொண்டாடிய தண்ணீர் பாட்டில் என்னை ஈர்த்தது. வழக்கமாகத் தூக்கி எறியப்பட்ட அந்தப் பாட்டிலில் தண்ணீரோடு அடியில் கறுப்பாக கால்வாசி



பகுதி மணிமணியாகத் தெரிந்தது என்ன என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வம் மேலிட்டது எனக்கு.

எனக்கு இந்தி தெரியாது. இருந்தாலும் தொடர்புகொள்ள வேண்டிய ஆர்வத்தில் யுவர் ஸ்டேட் உ.பி.? என்று கலந்து அடித்தேன். அவரோ எந்த மாநிலம் என்று கேட்டதை எனது உடல் மொழி வாயிலாகப் புரிந்து கொண்டு ''பிகாரி'' என்றார் புன்சிரிப்புடன். பாட்டிலின் அடிப்பகுதியைக் காட்டி ''கியா'' என்றேன் மீண்டும். ''ஓ! இத்தா... சன்னா... என்றார். பாட்டிலைக் குலுக்கியும் காட்டினார். ''ஓ! கொஞ்சம் தமிழ் தெரியுமா?'' என்று ஆர்வமானேன். விரலைக் காட்டி ரெண்டு வருஷம்.. ஹமாரா.. தமிழ்நாடு.. இப்போ ட்ரிச்சி போறான்....'' என்று திருச்சி போவதை எனக்கு நன்றாகவே புரிய வைத்தார். எனது ஆர்வம் பெரும்பாலும் அந்தப் பாட்டிலைப் பற்றியே இருந்தது. என்னது பாட்டிலுக்கு அடியில சன்னாவா.. கடலையா? என்று ஜாடை காட்டிக் கேட்டேன்.

''ஆமா.! சன்னா.. சன்னா.. தெர்ராது... உங்களுக்கு கல்லையா.. இன்னா கல்ல... எனக்கு தெர்ல.. நீ சன்னா தெரியாது...'' என்னிடம் திரும்பக் கேட்டார். மேலும் தண்ணீர்ப் பாட்டிலை என் முகத்துக்கு நேரே உயர்த்திக் காட்டினார். ''ஓ! தெரியுது மூக்கு கடலை... இதுக்கு பேரு மூக்கு கடலை என்றேன்.

''இன்னா... மூக்கு கல்ல..'' சொல்லி சொல்லிப் பார்த்து சிரித்தார். பெரும்பாலும் பேச்சுக்குப் பேச்சு சிரித்தவாறு, களைப்பை மறந்து புன்னகை முகமாகக் காட்சியளித்தார்.

''எதுக்கு தண்ணியில... மூக்கு கல்ல... சன்னா? சன்னா?'' என்று ஜாடையோடு கேட்டேன்.

''நம்ப, த்ரீ டேஸ் ட்ரெயின்ல வர்றான்... எல்லா டைம் கானா நை! சன்னா வாட்டர் குடிச்சி தோ சன்னா சாப்ட்டா... இன்னா சொல்லுவ நீ பூஃக், பூஃக் அதான் .. என்று வயித்தைக் காட்டி ஹேய் அதான் பசி நிக்கல் ஜாயா!... ஹா.. ஹா... ஓங்கி சிரித்தார். ஜாடை பல காட்டி எனக்குப் புரிய வைத்த களைப்புடன், ஒரு மடக்கு மூக்கு கடலை தண்ணீரைக் குடித்து, ரெண்டு கடலையையும் மென்று கொண்டு ஹேய்... இதி... நம்ப படா கானா.. என்று மீண்டும் என்னைப் பார்த்து சிரித்தபடியே ஒரு மடக்குத் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்தார்.

பசியின் வேகத்தில் மூக்கு கடலை தண்ணீரோடு மோதி, ஏறி இறங்கும் அவரது குரல்வளையின் வேகத்திலும், சத்தத்திலும் குலை நடுங்கிப்போனேன் நான்! அந்த பிகாரியைப் பார்த்து என்னால் பதிலுக்குச் சிரிக்க முடியவில்லை.

● சுடர்விழி

**வழக்கமாகத் தூக்கி எறியப்பட்ட அந்தப் பாட்டிலில் தண்ணீரோடு அடியில் கறுப்பாக கால்வாசி பகுதி மணிமணியாகத் தெரிந்தது என்ன என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வம் மேலிட்டது எனக்கு.**



படிப்பகம்

www.padippakam.com

# தொலைக்காட்சி:

# பார்வையைத் தீர்மானிக்கும் கார்ப்பரேட் ஆதிக்கம்!

'அப்பாடா... ஒருவழியா கேபிள் டிவியை அரசே எடுத்து நடத்தப் போகுதாம். இனிமே நூறு ரூபா, நூற்றி இருபது ரூபா, நூற்றி ஐம்பது ரூபானு கேபிளுக்கு தண்டமா அழ வேண்டாம். அம்பது ரூபாக்குள்ள கட்டினா போதும்...' என மக்கள் மகிழ்கிறார்கள்.

'இனி கேபிள் டிவியில் ஏகபோக ஆட்சி நடைபெறாது. இதுநாள் வரை ஆதிக்கம் செலுத்தி வந்த சுமங்கலி கேபிள் விஷனின் கொட்டம் அடக்கப் பட்டு விட்டது...' என மகிழ்கின்றன ஊடகங்கள்.

ஊடகங்களின் மகிழ்ச்சியும், கட்சித் தொண்டர்களின் கொண்டாட்டமும் ஒரு பக்கம் இருக்கட்டும். அவர்களுக்கு உரிய, அவர்களுக்கு வேண்டிய பணம், அவர்களுக்குக் கிடைத்து விடும். கட்சித் தலைமையும், அரசாங்கத்தின் விளம்பரங்களும் அவர்கள் தேவையை நிறைவேற்றி விடும்.

ஆனால், மாதந்தோறும் ரூபாய் நூறு மீதமானதை நினைத்து பரவசப்படுகிறார்களே மக்கள்... அவர்கள் ஒரு போதும் அறிவதில்லை, தங்களையும் அறியாமல் மாதந்தோறும் பல கோடி ரூபாய்களை தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு 'நன்கொடை'யாக வழங்குகிறோம் என்று.

ஆம், அது பசியினால் நிலைகுத்திய பார்வையாக இருக்கலாம்; அல்லது வேலை பறிபோன துக்கத்தில் வெறித்த பார்வையாக இருக்கலாம்; அல்லது திருமணமாகாத முதிர்கன்னியின் வறண்ட பார்வையாக இருக்கலாம்; அல்லது கல்வி கற்க முடியாத துக்கப் பார்வையாக இருக்கலாம்; அல்லது கந்துவட்டிக்காரனின் மிரட்டலுக்குப் பயந்து ஒடுங்கிய பார்வையாக இருக்கலாம்; அல்லது மருத்துவம் பார்க்க வழியில்லாத நோயாளியின் மரணப் பார்வையாக இருக்கலாம்; அல்லது அடுத்த வேளை உணவைக் குறித்த கவலையில்லாத மேல்தட்டு மக்களின் இன்பமான பார்வையாகவும் இருக்கலாம்.

யாருடைய பார்வை என்பதும் முக்கியமில்லை. பொருளாதார படிக்கட்டில் எந்த இடத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதும் அவசியமில்லை. பார்வை அல்லது பார்வைகள்தான் முக்கியம். பார்வை படும் இடத்தில் தொலைக்காட்சிப் பெட்டி இருப்பதுதான் அவசியம். அந்தப் பெட்டி இருந்து விட்டால் போதும். அதன் வழியே நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தால் போதும். அனைத்து வர்க்கங்களைச் சேர்ந்த பார்வைகளின் மதிப்பும் ஒன்றுதான். என்ன, பார்க்கும் தொலைக்காட்சி நிறுவனத்தின் நிகழ்ச்சியைப் பொறுத்து அந்த மதிப்பு பத்து விநாடிகளுக்கு ரூபாய் ஐயாயிரம் முதல் ரூபாய் இருபதாயிரம் வரை வேறுபடும் என்பது மட்டுமே வித்தியாசம்.

> **யாருடைய பார்வை என்பதும் முக்கியமில்லை. பொருளாதார படிக்கட்டில் எந்த இடத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதும் அவசியமில்லை. பார்வை அல்லது பார்வைகள்தான் முக்கியம். பார்வை படும் இடத்தில் தொலைக்காட்சிப் பெட்டி இருப்பதுதான் அவசியம்.**

•••

எத்தனை குடும்பங்களில் இன்று தொலைக்காட்சிப் பெட்டி இருக்கிறது என்ற கேள்வி அவசியமேயில்லை. காரணம், அமெரிக்க மக்கள் தொகைக்குச் சமமாக இன்று இந்திய நடுத்தர மக்களின் தொகை இருக்கிறது என்ற புள்ளி விபரமே பன்னாட்டு நிறுவனங்களுக்குப் போதுமானதாக இருக்கிறது. கிராமங்களால் நிரம்பிய இந்தியாவில் ஒப்பீட்டளவில் இந்த நடுத்தர வர்க்கம் சிறுபான்மையினர்தான். ஆனால் நகரமயமாகி வரும் இந்தியாவில், வாழ்க்கைத் தரத்தில் ஏழை எளியவர்களாகவும், சிந்தனையில் மேட்டுக்குடியினராகவும் இருக்கும் இந்த நடுத்தர வர்க்கமே பெரும்பான்மையினர். எனவே இந்த வர்க்கத்தைத் தங்கள் சந்தைக்கான சரக்காக மாற்றுவதன் மூலம் கிராமங்கள் நிறைந்த இந்தியாவை பன்னாட்டு நிறுவனங்கள் சுரண்டத் துடிக்கிறார்கள். அதாவது, சின்ன மீனைக் காண்பித்து பெரிய மீனைப் பிடிப்பது போல.

இதற்காகவே இன்று இந்தக் காட்சி ஊடகத்தை இரண்டாக தரகு முதலாளிகள் பிரித்திருக்கிறார்கள். ஒன்று இருபத்து நான்கு மணிநேர செய்தி ஊடகம். இன்னொன்று இருபத்து நான்கு மணிநேர பொழுதுபோக்கு ஊடகம். ஊடகத்தின் இந்த இரு பிரிவுகளும் எந்தத் தரகு முதலாளியின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன என்பது முக்கியமில்லை. அனைத்து ஊடக நிறுவனங்களிலும் சட்டப்பூர்வமாக பன்னாட்டு நிறுவனங்கள் பங்குதாரர்களாக இருக்கிறார்கள் என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்.

தனிப்பட்ட வாடிக்கையாளர் ஒப்பந்தங்கள் இதன் பொருட்டுத்தான் போடப்படுகின்றன. ஒரு நாளைக்கு இத்தனை மணி நேரங்கள் என்ற அடிப்படையில் பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் பொருட்களின் விளம்பரங்களை எத்தனை காட்சி ஊடகங்கள் இருக்கிறதோ அத்தனையிலும் ஒளிபரப்புகின்றன. அந்தந்த காட்சி ஊடகத்துக்கு இருக்கும் 'பார்வை'யாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஒரு தொகையைத் தருகின்றன. இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு பல கோடி ரூபாய்கள் ஒவ்வொரு காட்சி ஊடக நிறுவனங்களுக்கும் வருவாயாகக் கிடைக்கின்றன.

இந்தக் கொள்ளை தொடர வேண்டுமானால், மக்களுக்கு தொடர்ந்து கிளு



படிப்பகம்

www.padippakam.com

கிளுப்பும் கிச்சு கிச்சுவும் மூட்ட வேண்டும். விழிப்புணர்வுக்கு என்று நடத்தப்படும் அரட்டை அரங்கம், மக்கள் அரங்கம், நீயா நானா... போன்ற டாக் ஷோக்களில் கூட கவனமாக பிரச்சினைகளின் வேரைத் தவிர்த்துவிட்டு மேம்போக்கான பொது நியாயங்கள் விவாதிக்கப்படும். பெற்றோருக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும், ஆசிரியர்களின் பேச்சுக்குக் கட்டுப்பட வேண்டும், கலப்பு மணத் திருமணத்தை பெற்றோர் ஒப்புதலுடன் செய்து கொள்ள வேண்டும். அவர்கள் மறுத்தால் காத்திருக்க வேண்டும், முதலாளிக்கு துரோகம் நினைக்கக் கூடாது போன்ற விழுமியங்கள், புதிய கீதைகளாக தொலைக்காட்சியில் ஒலிக்கின்றன.

இப்படி எல்லோருக்கும் பொருந்துகிற, குறிப்பிட்ட எந்தவொரு மக்கள் பிரிவினரையும் இலக்காகக் கொள்ளாமல், ஒரேவிதமான நிகழ்ச்சிகளையே ஒட்டுமொத்தப் 'பார்வை'யாளர்களுக்கும் வழங்குவதே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் அடிநாதம். இதன் மூலம் மறுகாலனியாதிக்கத்துக்கு உகந்த முதலாளித்துவ ஆன்மாவை - முதலாளித்துவ மனித மாதிரியை - உருவாக்குகின்றன.

அதனால்தான் ஹாலிவுட் பண்பாடு, தமிழர்களின் அடையாளமாகிறது. பீட்சாவும், சாண்ட் விச்சும், பர்க்கரும் உணவுப் பொருட்களாகின்றன. கோக்கும், பெப்சியும் குடிநீராகக் கருதப்படுகின்றன. இது உலகச் சந்தை; உலகக் கலாச்சாரம். அமெரிக்கா இதில் மேல்நிலை வகிப்பதால், அமெரிக்க சுவர்க்கத்தின் சுவடுகளை தமிழகப் புறநகரங்களிலும் காணலாம். இருபத்தோரு இன்ச் பெட்டிக்குள் உலகம் சுருங்கி விட்டதால், இவ்வுலகில் ஏழைகளுக்கு வாழ இடமில்லை. ஒவ்வொரு நாடும் தனது மரபு, தனது பண்பாடு மற்றும் விழுமியங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய அனைத்தையும் செயற்கைக்கோள் ஒளிபரப்பு தகர்த்துவிட்டது.

இதனால்தான் இரு வேறு கலாச்சார, பண்பாடுகள் கொண்ட இரு சீரியல்களை ஒரே நேரத்தில் மாற்றி மாறி பார்வையாளர்களால் ரசிக்க முடிகிறது. இரவு ஏழரை மணிக்கு சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'நாதஸ்வரம்' சீரியலையும், ஜீ தமிழ்த் தொலைக்காட்சியில் வெளிவரும் 'சின்ன மருமகள்' தொடரையும் போட்டி போட்டுக் கொண்டு மக்கள் பார்க்கிறார்கள். இந்தியில் மாபெரும் வெற்றி பெற்ற சீரியலின் இந்தத் தமிழாக்கத்தை பார்க்கும்போது எவ்வித பண்பாட்டு வேறுபாடுகளையும் அவர்கள் உணர்வதில்லை. இரண்டையும் ஒன்றுபோலவே ரசிக்கிறார்கள். 'நாதஸ்வரம்' கோபிக்காகவும் உருகுகிறார்கள், 'சின்ன மருமகள்' ராதிகாவுக்காகவும் உள்ளம் கசிகிறார்கள்.

அதேபோல் சட்டப்படி தடை செய்யப்பட்ட சூதாட்டங்கள், 'தங்க மழை', 'டீலா நோ டீலா' போன்ற நிகழ்ச்சிகளின் வழியே வீட்டுக்குள் நுழைகின்றன. 'பார்வை'யாளர்களையும் கலந்து கொள்ளத் தூண்டுகின்றன. ஒரே நாளில், ஒரே விளையாட்டின் மூலம் கோடீஸ்வரனாகலாம் என்ற குறுக்கு வழியைக் கற்றுத் தருகின்றன. இவையனைத்தும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் வெற்றி பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள். அதை அப்படியே 'தமிழ்க் கலாச்சாரத்துக்கு'த் தகுந்தபடி இறக்குமதி செய்கிறார்கள். சூதாட்டம் தவறு என்று இன்று யாரும் சொல்வதில்லை. சூதாட்டமே வாழ்க்கைக்கான உழைப்பாக அங்கீகாரம் பெற்று விட்டது. பங்குச்சந்தையும் ஒரு தொழிலாக உயர்வு பெற்றிருக்கிறது.

உழைப்பு மட்டுமல்ல, பார்வையும் சரக்காகி விட்ட நிலையில், திரும்பிய பக்கமெல்லாம் விளம்பரங்கள் கண் சிமிட்டும் ஜாலத்தில் கட்டியிருக்கும் கோவணத்தை விற்று, மாதம்தோறும் கோடிக்கணக்கான ரூபாய்களை தொலைக்காட்சி நிறுவனங்கள் சம்பாதிக்க தங்கள் 'பார்வை'யை அர்ப்பணிக்கும் பார்வையாளர்களே...




இப்போது சொல்லுங்கள், கேபிள் டிவியில் ஏகபோகமாக ஒரு குடும்பம் மட்டுமே ஆட்சி செலுத்துவதும், பகல் கொள்ளைக்கு சமமாக மக்களிடமிருந்து மாதந்தோறும் நூற்றி ஐம்பது ரூபாய் வரை வசூலிப்பதும் மட்டும்தான் பிரச்சனையா?

●●●

**பா**ர்வையாளர்களுக்குரிய 'தெரிந்து கொள்ளும் உரிமையை' தங்கள் வசதிக்கு ஏற்ப - தங்களுக்குச் சாதகமாக - தரகு முதலாளிகளால் எப்படி மாற்றிக் கொள்ள முடிகிறது என்ற உண்மையை இரண்டாம் கட்ட அலைகற்றையில் நடந்த ஊழல்களை செய்தி ஊடகங்கள் எப்படி வெளியிட்டன, வெளியிடுகின்றன என்பதை வைத்தே புரிந்து கொள்ளலாம். ஆ.ராசா, கனிமொழி, தயாநிதி மாறன்... எனத் தனி மனிதர்களை ஊழலின் ஊற்றுக்கண்ணாக முன்னிலைப்படுத்தும் செய்தி ஊடகங்கள் ஒரு போதும் இவர்களுக்குப் பின்னால் இருந்து இயக்கிய தரகு முதலாளிகளைக் குற்றம்சாட்டவும் இல்லை; அம்பலப்படுத்தவுமில்லை. கனிமொழி கைது செய்யப்பட்டபோதும், ஆ.ராசா திகார் சிறையில் அடைக்கப்பட்ட போதும் அந்தச் செய்திகளை ஊடகங்களில் தொடர்ந்து ஒளிபரப்பினார்கள். அப்போது அந்தச் செய்தி நேரத்தைப் பார்வையாளர்களுக்கு பெரும்பாலும் வழங்கியது, டாடாவின் டோக்கோமோவும், அம்பானியின் ரிலையன்சும்தான்.



படிப்பகம்

www.padippakam.com

உண்மையில் இரண்டாம் கட்ட அலைக்கற்றையால் கொழுத்த லாபமடைந்தவர்கள், இந்த இரு தரகு முதலாளிகளும்தான். ஆனால் எந்த ஊடகமும் இதை மக்களுக்கு தெரிவிக்கவில்லை. காரணம், ஒரு நாளைக்கு இத்தனை மணி நேரங்கள் என்ற அடிப்படையில் இந்தத் தரகு முதலாளிகள் அளிக்கும் விளம்பரங்கள்.

நம் நாட்டில் அரை மணி நேரத்துக்கு ஒரு விவசாயி தற்கொலை செய்துக் கொள்கிறார். இது குறித்து எந்தச் செய்தி ஊடகமும் பதிவும் செய்யவில்லை; காட்சிப்படுத்தவும் இல்லை. காரணம், பெரும்பான்மையினர் விவசாயிகளாக வாழும் நம் நாட்டில் விவசாய செய்தியாளர்கள் என்ற பிரிவே எந்த ஊடகத்திலும் கிடையாது. க்ரைம், அரசியல், வணிகம், மருத்துவம், அழகு சாதனப் பொருட்கள்... என அனைத்துப் பிரிவுக்கும் செய்தியாளர்கள் உண்டு. ஆனால், வேளாண்மைக்கு? ஒருவரும் இல்லை. ஏனெனில் எந்தப் பன்னாட்டு நிறுவனங்களும் விவசாயிகள் குறித்து அக்கறை காட்டுவதில்லை. எனவே அவர்களைச் சார்ந்து இருக்கும் செய்தி ஊடகங்களும் விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை.

அதனால்தான் விதர்பாவில் கொத்துக் கொத்தாக விவசாயிகள் தற்கொலை செய்துக் கொண்டபோது செய்தி ஊடகங்கள் அந்நிகழ்வைக் கண்டுகொள்ளவில்லை. பதிலாக நீரா ராடியா டேப் விவகாரம் வெளிச்சத்துக்கு வந்ததும் அது டாடாவின் தனி மனித இறையாண்மைக்கு ஊறு விளைப்பதாகக் கூறி செய்திகளை ஒளிபரப்பின. மத்திய அமைச்சரும், இனி எந்த நிறுவன முதலாளிகளின் தொலைபேசியும் ஒட்டுக் கேட்கப்படாது எனச் செய்தியாளர்களை அழைத்து உறுதியளித்தார். அதேபோல் பங்குச்சந்தை விழும்போதெல்லாம் கழிவறைகளில் இருந்தாலும் அப்படியே கழுவாமல் ஓடோடி வந்து, ஊடகங்களில் நடைபெறும் மாபெரும் விவாதங்களில் பங்கேற்று 'எல்லாம் சரியாகிவிடும்' என அபயம் அளிக்கிறார்கள் மத்திய அமைச்சர்களும், பொருளாதார வல்லுநர்களும்.



இந்த விவாதங்களில் பங்கேற்கும் கருத்து கந்தசாமிகள், அரை நொடியைக் கூட வீணாக்காமல் கருத்துச் சொல்லும் வல்லமைப் படைத்தவர்கள். யோசித்து பேச காட்சி ஊடகங்களில் வாய்ப்பில்லை. ஒவ்வொரு நொடியும் ரூபாய் நோட்டுக்களால் அளக்கப்படும்போது பட, பட என்று கருத்துக்கள் விழ வேண்டும். அவை சரியாகத்தான் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. தவறாக இருந்தாலும் யாரும் கண்டு கொள்ளப் போவதில்லை. சொல்பவருக்கும், கேட்பவருக்கும் நடக்கும் விவாதம் குறித்து எல்லாம் தெரியும் என்று சொல்ல முடியாது. உளறலும் கூட சிந்தனையின் வடிவங்கள்தான். பிரதமரை முட்டாள் என்று சொல்லலாம். ஆனால், அம்பானியை அப்படி அழைக்கக் கூடாது. நீதிபதியை தயக்கத்துடன் விமர்சிக்கலாம். ஆனால், நீதித்துறையை முணுமுணுப்பாகக் கூட கேள்வி கேட்கக் கூடாது.

ஹாலிவுட் பாணியில் ஒரு ஹீரோ, ஒரு ஹீரோயின், ஒரு வில்லன்; ஒரு ஆரம்பம், ஒரு நடுப்பகுதி, ஒரு முடிவு... என செய்திகளை வழங்கினால், அந்த நிகழ்ச்சி சக்சஸ். எப்பொழுதுமே அரசியல்வாதிகள்தான் வில்லன். தனியார் நிறுவன முதலாளிகள்தான் ஹீரோ. இந்த விதிக்கு கட்டுப்பட்டு நிகழ்ச்சிகளை நடத்துபவர்களையும், விவாதங்களில் பங்கேற்பவர்களையும் ஒரே இரவில் அறிவுஜீவிகளாகச் செய்தி ஊடகங்கள் மாற்றி விடும். பிறகு அவர்கள் சிறுநீர் கழித்தாலும் அது ஸ்கூப் நியூஸ்.

காஷ்மீரிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் இராணுவத்தினரும், துணை இராணுவத்தினரும் நடத்தும் பாலியல் வன்முறைகள் இயல்பானது. பொங்கி எழுந்து மக்கள் அவர்களை நோக்கிக் கற்களை வீசினால் அது பயங்கரவாதம். செய்தியை எப்படி வழங்க வேண்டும் என்பதை இப்படித்தான் இருபத்து நான்கு மணிநேர செய்தி ஊடகங்கள் கற்றுத் தருகின்றன.

காலையில் தெய்வ வழிபாட்டுடன்தான் பெரும்பாலான பொழுதுபோக்குக் காட்சி ஊடகங்கள் கண் விழிக்கின்றன. சுப்ரபாதமும், கந்த சஷ்டி கவசமும், தேவாரமும் தினமும் ஒ(லி)ளிபரப்பப்படுகின்றன. அதன்பிறகு உடற்பயிற்சி, யோகா, நாள்-பலன். பின்னர் செய்திகள். தொடர்ந்து ஏதேனும் ஒரு துறை வல்லுநருடன் நேர்காணல். இதனையடுத்து நகைச்சுவை நேரம் என்கிற பெயரில் திரைப்படத் துணுக்குகள் அல்லது திரைப்படப் பாடல். பின்னர் முப்பது முப்பது நிமிடங்களாக இரவு பத்து மணிவரை சின்னத்திரை நாடகங்கள். நடுவில் ஒரு திரைப்படம். இதுதான் வார நாட்களில் தொலைக்காட்சியின் 'மெனு'. அதுவே வார இறுதி என்றால், ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று திரைப்படங்கள்.

ஒரு 30 ஆண்டுகளுக்கு முன்புவரையிலும் கூட, 'உருப்படாத மாணவர்களும்', 'குடும்பப் பொறுப்பில்லாத பெண்களும்' வாரம் இரண்டு, மூன்று திரைப்படங்களைத் தாண்டி பார்த்திருப்பார்களா என்பது சந்தேகம்தான். ஆனால் அடித்தட்டு, நடுத்தர வர்க்க மக்கள் வரை அனைவரது வீட்டிலும் ஊடுருவிவிட்ட தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் இன்று ஒட்டுமொத்தக் குடும்பமும் அமர்ந்து தினமும் திரைப்படங்களைப் பார்க்கிறது; ரசிக்கிறது. அதாவது இன்று வாழ்க்கையில் உருப்பட,

**மற்றவர்கள் 'பார்வை'யில் அழகாகத் தென்பட வேண்டும் என்று மெனக்கெடும் நீங்கள், உங்கள் 'பார்வை'யால் துணிக்கடை முதலாளிகள் அடுத்தடுத்த ஊர்களில் கிளைகள் திறக்க மாதந்தோறும் எத்தனை கோடி ரூபாய்களை 'நன்கொடை' வழங்குகிறீர்கள் என்பதைப் பத்து விநாடிகள் யோசித்து விட்டுச் சொல்லுங்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

ஒருநாளைக்கு மூன்று திரைப்படங்கள் வரை பார்க்க வேண்டும் என்பதான புரிதலுக்கு மக்கள் வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தெய்வ வழிபாட்டுடன் தொடங்கும் அன்றைய பொழுது, 'குற்றம் நடந்தது என்ன' என்பதை அறிந்து கொள்வதுடன் முற்றுப்பெறும். இதன் ஊடாகத்தான் பார்ப்பனக் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. 'தெய்வ தரிசனம்' பார்ப்பன கடவுள்களின் அருமை பெருமைகளைப் பட்டியலிடுகிறது என்றால், 'நிஜம்' நிகழ்ச்சி சிறுதெய்வ வழிபாடுகளை ஏதோ காட்டுமிராண்டித்தனமான செயல் என்பது போல் சித்தரிக்கிறது.

தமிழகத்தில் ஒரு நாளைக்கு அனைத்துச் சேனல்களுமாகச் சேர்த்து சுமாராக முப்பது சீரியல்கள் வெளியாகின்றன. அதாவது முப்பது அரைமணி நேரங்கள். இவையனைத்தின் கதைகளும் ஏறக்குறைய ஒரு ஆணுக்கு இரு மனைவிகள், மாற்றாந்தாய் கொடுமை, திருமணத்துக்கு ஜாதகம் தடை, தம்பி அல்லது அண்ணன் ஊதாரி; உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றும் அக்கா, அண்ணியின் கொடுமை, ஏமாற்றிக் கைவிடும் காதலன்... போன்ற பீம்சிங் காலத்து 'ப' வரிசைப் படங்களின் கதைகளை ஒற்றித்தான் இருக்கின்றன.

'தங்கம்' சீரியலில் மாவட்ட ஆட்சியாளராக இருக்கும் கங்கா (ரம்யா கிருஷ்ணன்), தனது கணவர் உடல்நலம் குன்றி சுயநினைவு இல்லாமல் இருந்த போது, மண்சோறு சாப்பிட்டாள்; தீ மிதித்தாள்; நூற்றியெட்டு குடங்களில் அம்மனுக்கு அபிஷேகம் செய்தாள். மருத்துவம் குணப்படுத்த வேண்டிய நோயை அம்மன் குணப்படுத்தியதாக கதை பின்னப்பட்டது, மூட நம்பிக்கைகள் நிறைந்த சென்ற நூற்றாண்டில் அல்ல. அறிவியல் கண்டுபிடிப்புகளும், தொழில்நுட்பமும் வளர்ந்துள்ள இன்றைய பொழுதில்தான் என்பது வெட்கப்பட வேண்டிய விஷயமல்லவா?

அலுவலகமோ, ஏற்றுமதி நிறுவனமோ சக்கையாகப் பிழியப்பட்டு துப்பப்படும் பெண் தொழிலாளர்கள் வீடு திரும்பியதும் அக்கடாவென ஓய்வெடுக்கத் தொலைக்காட்சித் தொடர்கள் விடுவதில்லை. வீட்டு வேலைகள் ஒரு புறம் என்றால், 'திருமதி செல்வத்தில்' அர்ச்சனா வாழ்க்கையில் முன்னேறுவாளா... 'தங்கத்தில்' கங்காவின் தங்கை ரமாவுக்கு சுகப்பிரசவம் நிகழுமா அல்லது அவளது மாமனாரே அவள் கருவைக் கலைத்து விடுவாரா... 'தென்றலில்' தமிழ் - துளசி வாழ்க்கையை சாரு எப்படி அழிக்கப் போகிறாள், இந்தச் சூழ்ச்சிக்கு இந்தத் தம்பதிகள் பலியாவார்களா... 'செல்லமே' தொடரில் தன் மாமியாரிடமிருந்து அமுதாவுக்கு எப்பொழுது விடுதலை கிடைக்கும், செல்லம்மா பிரிந்த சகோதரர்களை எப்படி சேர்க்கப் போகிறாள்... என்பதையெல்லாம் கட்டாயம் தெரிந்து கொள்ள நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

பெண்களின் ஓய்வுநேரங்கள் இப்படியாக கொள்ளையடிக்கப்படுகிறது என்றால், ஆண்களின் கழுத்து விளையாட்டை நோக்கித் திருப்பப்படுகிறது. இலங்கை அணியின் ஸ்கோரை இந்திய கிரிக்கெட் வீரர்கள் எட்டுவார்களா?



என மனம் துடிக்கத் துடிக்க, நகத்தை கடித்தபடி கொட்டக் கொட்ட விழித்திருந்து பதற வேண்டும்.

இப்படிப் பாலினம் சார்ந்து பொழுது போக்கைப் பிரித்துக் கொள்ளையடிக்கும் ஏகாதிபத்தியங்கள், குழந்தைகளையும் விட்டுவைக்கவில்லை. சுட்டி டிவியும், போகோவும், ஜெட்டிக்ஸும் அவர்களது ஓய்வுநேரத்தைப் பந்தாடுகின்றன.

இதெல்லாம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது 'வெறும் டைம் பாஸ்'க்குத் தான் என்று சொல்ல முடியாது. பன்னாட்டு முதலாளிகளுக்கு வேண்டுமானால் இது பொருந்தலாம். ஆனால், உழைக்கும் மக்களுக்கு பொருந்தாது. ஏனெனில் உழைப்பைத் திருடுவது நிகழ்காலத்தைத் திருடுவது என்றால், ஓய்வுநேரத்தை கொள்ளையடிப்பது எதிர்காலத்தைத் திருடுவதற்கு சமமானது.

நாற்பதுக்கும் மேற்பட்ட சரும சோப்புகளுக்கும், முப்பதுக்கும் மேற்பட்ட துணிக்கடை விளம்பரங்களுக்கும், இருபதுக்கும் மேற்பட்ட வாஷிங் சோப்புகளுக்கும், பத்துக்கும் மேற்பட்ட ஷாம்புகளுக்கும், ஐந்துக்கும் மேற்பட்ட பற்பசைகளுக்கும் இடையில் உங்கள் ஓய்வுநேர பொழுதுபோக்கை இன்பமாக அனுபவிக்கும் மதிப்புக்குரிய நடுத்தர மக்களே...

உங்கள் சரும பளபளப்புக்கும், பற்கள் மின்னவும், தலைமுடி காற்றில் பறக்காமல் இருக்கவும் எந்த நிறுவனத் தயாரிப்பை பயன்படுத்துகிறீர்கள்? எது சட்டென்று உங்கள் நினைவுக்கு வருகிறது? மாதாந்திர மளிகைப் பொருட்கள் லிஸ்டில் நுகர்வுப் பொருட்களுக்காக எவ்வளவு ஒதுக்குகிறீர்கள்..? மற்றவர்கள் 'பார்வை'யில் அழகாகத் தென்பட வேண்டும் என்று மெனக்கெடும் நீங்கள், உங்கள் 'பார்வை'யால் துணிக்கடை முதலாளிகள் அடுத்தடுத்த ஊர்களில் கிளைகள் திறக்க மாதந்தோறும் எத்தனை கோடி ரூபாய்களை 'நன்கொடை' வழங்குகிறீர்கள் என்பதைப் பத்து விநாடிகள் யோசித்து விட்டுச் சொல்லுங்கள்.

கேபிள் டிவியில் ஏகபோகமாக ஒரு குடும்பம் மட்டுமே ஆட்சி செலுத்துவதும், பகல் கொள்ளைக்கு சமமாக மக்களிடமிருந்து மாதந்தோறும் நூற்றி ஐம்பது ரூபாய் வரை வசூலிப்பதும் மட்டும்தான் பிரச்சனையா?

**● அறிவுச் செல்வன்**



படிப்பகம்

www.padippakam.com

# இசுலாமியப் பெண்களைச் சிதைக்கும் ஆணாதிக்க அமிலம்!

13 வயது ஜன்னத் உறங்கிக் கொண்டிருக்கிறாள். தன் மேலிருந்த போர்வை உருவப்படுவதை உணர்ந்து கண் விழிக்கிறாள். சில நொடிகளில் என்ன நடக்கிறதென்று உணர்வதற்குள்ளேயே, அவளது நெஞ்சும், முகமும் தாங்க முடியாத அளவுக்கு வலியும், எரிச்சலுமடைகிறது. அவளுக்கருகில் உறங்கிக் கொண்டிருந்த அவளது தம்பிக்கும் முதுகில் வலி. ஜன்னல் வழியாக வீசப்பட்ட பாட்டரி ஆசிட் தாக்குதல்தான் இச்சிறுமியின், அவளது தம்பியின் வலிக்கும் எரிச்சலுக்கும் காரணம்.

ஜன்னத் மீது ஆசிட் வீசியவர் அவளது வீட்டுக்கருகில் வசிக்கும் 20 வயது இளைஞர். ஜன்னத்தின் முகத்தை ஆசிட் வீசி சிதைக்கக் காரணம், அவள் அவ்விளைஞரின் திருமண ஆசைக்குச் சம்மதிக்காததுதான். பெண்களின் மீதான ஆசிட் தாக்குதலைப் பற்றி அதுவரை கேள்விப்பட்டிருக்க மட்டுமே செய்திருந்த ஜன்னத்தின் குடும்பத்தினருக்கு அன்றுதான் அதன் உண்மையான வலியும், வேதனையும், சூழ்நிலையின் பதைபதைப்பும் புரிந்தது. சில நூறு கிலோமீட்டர்கள் தள்ளி இருக்கும் தலைநகர் டாக்காவிற்கு ஜன்னத்தை உடனடியாக அழைத்துச் சென்றார்கள். ஆனாலும் மருத்துவமனையில் இடம் இல்லாத காரணத்தால் ஆசிட் காயத்துடனே காத்திருந்த ஜன்னத்-க்கு மறுநாள்தான் சிகிச்சை அளிக்கப்பட்டது.

ரூபாலிக்கு திருமண வாழ்வைப் பற்றி ஒரு அழகான கனவு இருந்தது. ஆனால், அந்தக் கனவு திருமணமான ஆறு மாதங்களிலேயே ஆட்டம் கண்டது. வரதட்சணையாக ஒரு மோட்டார் பைக்கை வழங்கியிருந்தார் ரூபாலியின் தந்தை. ஆனாலும் இன்னும் பணத்தை வாங்கி வருமாறு அவளது கணவனும், மாமியாரும் வற்புறுத்தினர். ரூபாலியைக் கடுமையாக நடத்தியதோடு, நாள் முழுவதும் ஓய்வில்லாத வீட்டு வேலைகளைச் செய்யுமாறும் கட்டாயப்படுத்தினர்.

முடிவில் ரூபாலி தன் பெற்றோர் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்று கூறியபோது, அவரது கணவனும் மாமியாரும் அவருடன் வாக்குவாதம் செய்து சண்டையிட்டனர். அதைத் தொடர்ந்து அடிக்கவும் முற்பட்டனர். திடீரென்று அவள் எதிர்பாராத தருணத்தில், ரூபாலியின் மாமியார் அவரைப் பின்னாலிருந்து பிடித்துக் கொள்ள கணவன் அவரது வாயில் ஆசிட்டை ஊற்றினான்.

அக்கம்பக்கத்து வீட்டினர் ரூபாலியைக் காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனாலும், மருத்துவர்களால் முதலுதவி அளிக்க முடியவில்லை. டாக்காவிற்கு அழைத்துச் சென்றாலும் ரூபாலிக்கு சிகிச்சை அளிக்க முடியவில்லை. ரூபாலியின் பெற்றோரால் மருந்துகளை விலை கொடுத்து வாங்க முடியாததே அதற்குக் காரணம்.

இந்த ஆசிட் வீச்சு ஜன்னத்துக்கோ அல்லது ரூபாலிக்கோ மட்டும் நடந்ததல்ல. பங்களாதேஷில் ஒவ்வொரு ஆண்டும் தோராயமாக 300 பெண்கள் ஜன்னத்தைப் போலவும், ரூபாலியைப் போலவும் ஆசிட் வீச்சுக்கு உள்ளாகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் இந்த எண்ணிக்கை கூடிக்கொண்டே செல்கின்றது. பாதிக்கப்பட்டவர்களில் பாதிப்பேர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள்.



78 சதவீத ஆசிட் வீச்சுகளுக்குக் காரணம் காதலை ஏற்க மறுத்தது மற்றும் திருமணத்துக்கு சம்மதம் அளிக்காதது அல்லது உடலுறவுக்குச் சம்மதிக்காதது போன்றவையே. வரதட்சணை, குடும்பச் சண்டைகள், சொத்துப் பிரச்சினைகள் முதல் சமையல் செய்வதில் ஏற்படும் சிறு தாமதம் கூட இந்த ஆசிட் வீச்சுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. தாக்குதலுக்கு உள்ளாகுவோரின் மருத்துவச் செலவுகளுக்காகப் பெற்றவர்கள் நிலத்தை விற்க வேண்டிவரும் என்பதற்காகவே நிலத் தகராறுகளுக்காகவும் ஆசிட் தாக்குதல்கள் நடக்கின்றன.

இந்த ஆசிட் வீச்சுகள் பெரும்பாலும் இரவு நேரங்களில்தான் நடக்கின்றன. அல்லது மிக அவசியமான வேலைகளுக்காகப் பெண்கள் வெளியே செல்லும் சமயங்களில் இந்த ஆசிட் தாக்குதலுக்கு ஆளாகின்றனர். அருகிலிருப்பவர்களும் இந்தத் தாக்குதலில் பாதிக்கப்படுவதால், சுதாரித்துக் கொண்டு மருத்துவமனைக்குச் செல்வதும் தாமதமாகின்றது.

ஆசிட் எனும் கொடூரமான ஆயுதம் ஏன் எனில் கார் பாட்டரியின் ஆசிட் கிடைப்பது எளிது, அதே சமயத்தில் விலை மலிவான ஆயுதமும் கூட. ஒரு சில நாணயங்களில் ஒரு முழுக் கிண்ணம் அளவுக்கு ஆசிட் எங்கு வேண்டுமானாலும் கிடைக்கும். இந்த ஆசிட் வீச்சுகள் எல்லாம், முக்கியமாக முகத்தை நோக்கிக் குறிவைத்து வீசப்படுகின்றன. பாதிக்கப்பட்டவரின் முகம் முற்றிலும் பாதிப்புக்குள்ளாகிறது. ஒருவரது சொந்த அடையாளத்தையே சிதைப்பது குரூரத்தின் உச்சநிலையாக இருக்கிறது! அவர்களது வாழ்க்கையே முற்றிலும் மாறிவிடுகின்றது. பல்லாண்டு காலம் பெண்கள் முகத்தை மூடியிருந்த ஹிஜாப், பிரான்ஸ் நாட்டில் தடை செய்யப்பட்டு அவர்கள் தங்கள் சுய முகத்துடன், அடையாளத்துடன் வெளிவருகிற நேரத்தில் பங்களாதேஷ் தனது பெண்களை ஆசிட் வீசி பர்தாவுக்குள் ஒரேயடியாகத் தள்ளுகிறது.

பெண்கள் உடல் ரீதியாக, மன ரீதியாக, பொருளாதார ரீதியாக பல தாக்குதல்களுக்கு உள்ளாகின்றனர். அதில் பெரும்பான்மை குடும்ப வன்முறையாகத்தான் இருக்கிறது. உலகம் முழுவதிலும் பெண்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுகின்றனர் என்றாலும், மூன்றாம் உலக நாடுகளில் மதத்தின் பெயரால் பெண்கள் பெருமளவு பாதிக்கப்படுகின்றனர், சுரண்டப்படுகின்றனர், உதாசீனப்படுத்தப்படுகின்றனர். இந்த



படிப்பகம்

www.padippakam.com

வகையான ஆசிட் வீச்சுகள் பாதிக்கப்பட்டவரை முற்றிலுமாக நிலைகுலையச் செய்து விடுகின்றன. இந்தத் தாக்குதலால் அவர் உயிரிழப்பதில்லையே தவிர உறுப்புகள் மிகுந்த பாதிப்படைகின்றன. சில சமயங்களில் மேல் தோல் மட்டுமன்றி எலும்புகளும் சிதைந்து விடுவதுண்டு. இந்த ஆசிட் வீச்சால் ஏதாவது ஒரு உறுப்பை அல்லது சில உறுப்புகளை இழக்க வேண்டியதாகிறது. பெரும்பாலானோர் கண்களை இழக்கின்றனர் அல்லது கேட்கும் திறனை இழந்து விடுகின்றனர்.

இந்தத் தாக்குதல்கள் அப்பெண்களுக்கு நிரந்தப் பாதிப்பு என்பதோடு மட்டுமல்லாமல் அவர்களது தன்னம்பிக்கையையும் குலைத்துப் போடுகின்றது. ஒவ்வொரு நாளும் சமூகத்தோடு செத்து மடிய வேண்டியிருக்கிறது. அன்றாட வாழ்வுக்கே போராட வேண்டியிருக்கிறது. இந்தப் பெண்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைப் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்லாது அந்தக் குடும்பங்களுமே அனுபவிக்கின்றன. ஒவ்வொரு நாளும் செத்து செத்து உயிர் வாழ்வதற்குப் பதிலாக ஒரேயடியாக இறந்து போனால் முற்றிலும் விடுதலையடைந்ததாக இருக்கும் என்று கூடப் பலர் கருதுகிறார்கள். எப்படியோ மீண்டு வந்து விட்டாலும், மனப்போராட்டங்கள் அவர்களைத் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள், தங்களைப் பார்ப்பவர்கள் உடனடியாக வெளிப்படுத்தும் அதிர்ச்சியைத் தாங்கிக்கொண்டுதான் வாழ வேண்டியிருக்கிறது.

அவர்களால் தொடர்ந்து சமூகத்தில் முன்போல உலவ முடிவதில்லை. கல்லூரிக்குச் செல்லவோ அல்லது வேலைக்குச் செல்லவோ முடிவதில்லை. தனிமையையே நாடுகிறார்கள். இது அவர்களது சமூக மற்றும் பொருளாதார ரீதியான வாழ்வை நிலைகுலையச் செய்து விடுகிறது. சமயங்களில் அவர்களது சொந்தக் குடும்பங்களாலேயே கைவிடப்படுகின்றனர். மறுமணம் நடப்பதும் மிகவும் அபூர்வம். பாதிக்கப்பட்ட இந்த அப்பாவிப் பெண்கள் மன உளைச்சல் காரணமாகத் தற்கொலை செய்தும் கொள்கிறார்கள்.

அதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீண்ட கால மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். இது பங்களாதேஷ் போன்ற நாடுகளில் மிகவும் கடினம். அதோடு மருத்துவச் செலவும் மிகவும் அதிகம். ஒரு மணி நேர அறுவைச் சிகிச்சைக்கே பல நூறு அமெரிக்க டாலர்கள் வரை தேவையாக இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட வேண்டியிருக்கும். பாதிக்கப்பட்ட பெண்களின் ஏழ்மை நிலைமை இதற்கு இடம் கொடுப்பதில்லை.

டோலி அக்தர் என்ற 16 வயதுப் பெண், காதலை மறுத்த காரணத்துக்காக ஆசிட் தாக்குதலுக்கு உள்ளானாள். அவளது தந்தையிடமிருந்த முழுச்சொத்தும் அவளது மருத்துவத்துக்கே செலவானதால், படிப்பை நிறுத்தி விட்டு தற்போது துணிகளைத் தைத்துக் கொண்டிருக்கிறாள். சிறு வயதில் அவளது வாழ்க்கை அவளது மற்ற நண்பர்களைக் காட்டிலும் முற்றிலும் மோசமானதாக மாறியிருக்கிறது.

பீனா என்ற மற்றொரு சிறுமி, அவளது உறவினரான மற்றொரு சிறுமியை முகமூடி அணிந்த நபரிடமிருந்து காப்பாற்றும்போது ஆசிட் தாக்குதலுக்கு உள்ளானாள். இந்தத் தாக்குதல் அவளுக்கு இரவில் நடந்தது. இருவருமே ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பீனா, ஒரு தடகள வீராங்கனை. உலக அளவிலான போட்டிகளில் பங்கேற்பதற்காக உற்சாகமாகக் காத்திருந்தாள். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவளது கனவுகள் சுக்குநூறாகிப் போய் விட்டன.

பங்களாதேஷில் முன்பை விடப் பெண்கள் பொதுவில் அதிகமாக வெளிவரத் துவங்கியிருக்கிறார்கள். ஏழைப் பெண்கள் கல்விக்காகவும், வேலைக்காகவும் தமது கிராமங்களை விட்டு நகர்ப்புறங்களுக்கு வருகிறார்கள். இதனாலெல்லாம் பெண்களை புர்க்காவுக்குள் அடக்கி வைக்கும் ஆண் சமூகத்தின் கண்ணோட்டம் மாறி விடவில்லை. வீட்டுக்கு உள்ளேயும், வீட்டுக்கு வெளியேயும் பாதுகாப்பு இல்லாத இந்தப் பெண்கள் மிகவும் எளிதாக இந்த வக்கிரமான பாலியல் வன்முறைக்கு ஆளாகி விடுகிறார்கள்.

பெண்கள் மீதான ஆசிட் வீச்சுகள் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் பெருமளவு நடக்கிறது என்றாலும், பங்களாதேஷ் தான் அதில் முன்னணியில் இருக்கிறது. இருபது முப்பது ஆண்டுகளாகவே பெண்கள் மீதான ஆசிட் வீச்சுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதற்கு முக்கியக் காரணங்கள் பழைமை வாதமும், ஆணாதிக்க சமூகமும், அதில் ஊறிப்போன நீதித் துறையுமே. பெண்களை இரண்டாந்தரமாக நடத்துவது மூன்றாம் உலக நாடுகளில் மிகவும் சகஜமாக இருக்கிறது. பெண்கள் தங்களது உடைமை என்ற பிற்போக்குக் கண்ணோட்டமும் ஒரு காரணம்.

ஆசிட் வீச்சுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும், சட்டங்களையும் இயற்றி இருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால், குற்றவாளிகளில் ஒன்றிரண்டு பேரைத் தவிர பெரும்பாலோனோர் தண்டிக்கப்படுவதேயில்லை. அவர்கள் சட்டங்களின் துணை கொண்டே வெளியில் வந்து வழக்கம் போல் நடமாடுகின்றனர். சகஜமான வாழ்க்கையை வாழ்கின்றனர். அவர்களுக்கு எவ்விதக் குற்றவுணர்வும் ஏற்படுவதில்லை.

**பங்களாதேஷில் ஒவ்வொரு ஆண்டும் தோராயமாக 300 பெண்கள் ஜன்னத்தைப் போலவும், ரூபாலியைப் போலவும் ஆசிட் வீச்சுக்கு உள்ளாகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் இந்த எண்ணிக்கை கூடிக்கொண்டே செல்கின்றது. பாதிக்கப்பட்டவர்களில் பாதிப்பேர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள்.**

•••

ஏனெனில் பெண்களை அடிமைப்படுத்துவது என்பது மத ரீதியாக வளர்த்தெடுக்கப்படுகிறது. பிற்போக்குத்தனத்தில் ஊறிப்போன மதங்களுக்கு இசுலாமும் விதிவிலக்கல்ல. பிற்போக்குத்தனத்தில் கட்டுண்ட மதங்கள் அனைத்தும் ஒன்றுபடுவது ஒரு விசயத்தில்தான் - பெண்ணடிமைத்தனமும், ஆணாதிக்கமும். இதனைச் சுட்டிக்காட்டினால், இசுலாம் தவறாக புரிந்துகொள்ளப்பட்டு விட்டதாகக் கூறுகிறார்கள் இசுலாம் மதத்தலைவர்கள். உண்மையில், பெண்களுக்குச் சில உரிமைகளை இசுலாம் வழங்குவதாகவும், ஒரு சில இனத்தவரின் பழக்க வழக்கங்களும், பெண்ணடிமைத்தனமும்தான் இந்நிலைமைக்குக் காரணம் என்றும் கூறுகின்றனர். முகமது நபி சில உரிமைகளைப் பெண்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com

வழங்கியிருப்பதாகவும் சொல்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக, பிறந்த பெண் குழந்தைகளை வேண்டாத குழந்தையென்று மண்ணில் புதைக்கும் வழக்கத்தை அவர்தான் தடை செய்ததாகவும் கூறுகிறார்கள். அதோடு, குரான் அடிப்படையில் பெண்களுக்கு சொத்துரிமையும், பாலியல் ரீதியான சுதந்திரமும் இருப்பதாகக் கூறுகிறார்கள். பெண்களுக்குச் சொத்துரிமை வழங்காத, சதி எனும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை பாரம்பரியம் என்று சொல்லிக்கொள்ளும் இந்து மதத்தோடு ஒப்பிடுகையில் இசுலாம் பெண்களுக்கு இவ்வுரிமைகளை வழங்கியிருப்பது உண்மைதான்.

ஆனாலும் இவ்வுரிமைகளினால் பெண்களுக்கு சம உரிமையோ, குரான் படி பெண்களின் பெண்ணடிமைத்தனம் முற்றிலும் களையப்படவோ இல்லையென்றுதான் கூற வேண்டும். இசுலாமைப் பொறுத்தவரைக்கும் மூன்று வகையான மனிதர்கள் இருக்கிறார்கள். ஆண்கள், பெண்கள் மற்றும் முசுலீம் அல்லாத பிற சமய மக்கள். இதில் பெண்கள் என்பவர்கள் ஒரு முசுலீம் ஆணில் பாதிக்குச் சமம். ஒரு பெண், ஆணுக்குக் கொடுக்கப்படும் சொத்துரிமையில் பாதியைத்தான் பெறுவாள் என்பதே இதற்குச் சான்று. ஒரு பெண் கீழ்படியவில்லை அல்லது கண்ணியமற்ற முறையில் நடந்துக்கொள்வதாக தெரிந்தால், ஆண் அவளை அதட்டிக் கேட்கலாம்; உடலுறவுக்கு மறுத்தால் அடிக்கலாம் என்றும் குரான் கூறுகிறது.

குரானின் (சுரா 4:34) படி, ஆணின் கையிலேதான் பெண்ணைக் குறித்த முழு அதிகாரமும் இருக்கிறது. பெண்ணைப் பராமரிப்பதிலேயே ஆண் தனது செல்வத்தைச் செலவழிப்பதால் பெண்ணை விட ஆணை உயர்ந்தவராக கடவுள் படைத்திருப்பதாகக் கூறுகிறது. நல்லபடியாக (!) நடந்துக் கொள்ளும் பெண்களுக்கு ஆண்களைப் போலவே சரிநிகராக உரிமைகள் இருந்தாலும், ஆணே எப்போதும் பெண்ணை விட உயர்ந்தவராகக் கருதப்படுவார் என்றும் குரான் கூறுகிறது.

இசுலாமிய ஷரியத் சட்டப்படி, ஒரு ஆணுக்கு நான்கு மனைவிகள் இருக்கலாம். தலாக் என்று மூன்று முறை கூறுவதன் மூலம் தனது மனைவியை அல்லது மனைவிகளை மணவிலக்குச் செய்யலாம். ஆனால், ஒரு பெண் விவாகரத்து பெறுவது என்பது நடைமுறையில் மிகச் சிக்கலானது. இசுலாமியச் சட்டப்படி பெண்களும் விவாகரத்து கோரலாம் என்றும், தாய் என்ற இடத்தில் பெண்கள் வணக்குரியவர்களாகவும், மதிப்பிற்குரியவர்களாகவும் வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.



ஆனால், விவாகரத்தின்போது குழந்தைகளை உரிய வயது வரும் வரையில் வைத்துப் பராமரிக்கும் உரிமை தந்தைக்கே கிடைக்கிறது. தங்களது குழந்தைகளை இழந்து விடுவோமோ என்ற பயத்தினாலேயே பெண்கள் தங்கள் கணவன் பலதார மணம் புரிந்தாலும் அதனை ஏற்றுக் கொள்கிறார்கள். மேலும் பெண்களுக்கு தாய் என்ற மதிப்பிற்குரிய அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பதாகக் கூறும் இசுலாம்தான், குழந்தைகள் தந்தையின் உரிமை என்றும் கூறுகிறது.

அதன்படி தாய் என்பவள் ஒரு பராமரிப்பு வேலைகளைச் செய்பவர் என்றுதான் ஆகிறது. எனில், குரான்படி பெண்களுக்கு சம உரிமைகளோ, சுதந்திரமோ இருக்கிறதென்று எப்படிக் கூற முடியும்?

இசுலாமிய ஷரியத் படி, ஒரு பெண்ணைக் கொலை செய்தால் அதற்குத் தண்டனையாக ஒரு ஆணைக் கொலை செய்ததற்கு அபராதமாகச் செலுத்தப்படுவதில் பாதியைச் செலுத்தினால் போதும். நீதிமன்றத்தில் ஒரு பெண்ணின் சாட்சியானது ஒரு ஆணின் சாட்சியில் பாதியாக மதிக்கப்படும். ஆண், பெண்ணை பராமரிப்பதால் பெண் மீது ஆணுக்கு அதிகாரம் உண்டு. இதிலிருந்து, இசுலாம் பெண்களை சுமையாகத்தான் கருதுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இத்தனைக்கும், குழந்தைகளைப் பராமரிப்பதிலிருந்து வீட்டு வேலைகளை செய்வதிலிருந்து குடும்பத்துக்குத் தேவையான அனைத்து உழைப்பும் பெண்களிடமிருந்தே சுரண்டப்படுகிறது. ஒன்பது வயதுச் சிறுமிகள், தங்கள் தந்தையராலேயே மணம் முடித்துக் கொடுத்து விடப்படுகின்றனர். தாய் மறுத்தாலும் அதைக் கணக்கில் கொள்வதில்லை. பெரும்பாலான சமயங்களில் அந்த ஆண்களுக்கு அது இரண்டாவது அல்லது மூன்றாவது திருமணமாக இருக்கும். தீவிர நம்பிக்கைக்குரிய மதத் தலைவர்கள், பெண்களின் குறைந்த பட்ச திருமண வயதைக்கூட உயர்த்தத் தயாரில்லை. முகமதுவின் மனைவியருள் ஒருவரான ஆயிஷா திருமணம் நிச்சயிக்கப்படும்போது ஏழு வயதாக இருந்தார். திருமணத்தின்போது அவருக்கு ஒன்பது வயதுதான். முகமது நபிக்கோ கிட்டதட்ட ஐம்பது வயதிருக்கும். அதோடு அவருக்குப் பல மனைவிகள் இருந்ததாகவும் தெரிய வருகிறது.

பெண்கள் உரிமைகளுக்கான சட்டங்கள் எதுவும் அரசாங்கத்தால் முன் எடுக்கப்பட்டால் அது மதவாதிகளின் தீவிர எதிர்ப்புக்குள்ளாகும். குரானை எவ்விதத்திலும் மாற்றத்துக்கு உள்ளாக்காமல் கடைபிடிக்க வேண்டுமென்று கண்மூடித்தனமாக அச்சட்டத்தை எதிர்ப்பார்கள். ஈரானியப் பெண் சக்கீனாவை அவ்வளவு சீக்கிரம் நாம் மறந்திருக்க முடியாது. தகாத உறவுள்ளவராக குற்றஞ்சாட்டி அவரைக் கல்லாலேயே



படிப்பகம்

www.padippakam.com

அடித்துக்கொல்ல வேண்டுமென்று தண்டனையும் விதித்தது, அரசு. அவருக்கு 99 கசையடிகளும் கொடுக்கப்பட்டது. சுரா (24:1) இல் தகாத உறவு கொண்டவராக இருந்தால் 100 கசையடிகள் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். முகம்மது நபி கல்லால் அடித்துக் கொல்லப்படுவதை கண்டித்திருந்தாலும், ஒரு இடத்தில் பாலியல் குற்றஞ்சாட்டப்பட்ட இருவரையும் கல்லால் அடித்துக் கொல்லுமாறு கூறுகிறார்.

இன்று இஸ்லாமிய அடிப்படைவாதிகள் அதனை பெண்களுக்கு மட்டுமே உரிய தண்டனையாக மாற்றி விட்டார்கள். ஏனெனில் ஆண்களுக்கு நான்கு மனைவிகள் வரை வைத்துக் கொள்ள உரிமை இருக்கிறது. பல முசுலீம் நாடுகளில் பெண்களைக் கல்லால் அடித்துக் கொல்லும் தண்டனை இன்றும் நடைமுறையில் உள்ளது. ஒருபெண் முதலிரவில் கன்னித்தன்மை இல்லாதவளாகக் கருதப்பட்டால் அவளது உறவினர்களாலேயே கொல்லப்பட்டு விடுவாள்.

இவ்வகையான கவுரவக் கொலைகள் இசுலாமிய நாடுகளில் சர்வசாதாரணமாக நடைபெறுகிறது. இந்த கவுரவக் கொலைகளுக்குப் பிஞ்சுக் குழந்தைகளும் தப்புவதில்லை. ஜோர்தானில் எட்டு வயதுச் சிறுமி தந்தையிடம் சொல்லாமல் நண்பர்களைப் பார்க்கச் சென்றதற்காக அடித்தே கொல்லப்பட்டாள். பெண்கள் உயிர் வாழ்வதும், உயிர் பறிக்கப்படுவதும் ஆண்களின் கையில் தான் இருக்கிறது. இப்படி உயிரைப் பறிக்கும் ஆண்கள் அவர்களது நண்பர்களாலும், உறவினர்களாலும் ஒரு ஹீரோவைப் போலத்தான் நடத்தப்படுகிறார்கள். இந்தியாவிலும் இந்தக் கவுரவக் கொலைகள், சாதி மற்றும் கோத்திரத்தின் பெயரால் நடைபெறுவதைக் கவனித்திருக்கலாம்.

இப்படி பெண்களின் நடத்தை, கண்ணியம் எல்லாமே ஆண்களின் மேற்பார்வையிலிருப்பதால் பெண்களும் தங்களைப் போல சம உரிமை பெற்ற மனித உயிர் என்று கருத அவர்கள் மறுக்கிறார்கள். சொல்லப்போனால், அப்படிச் சமமாக நடத்துவதை மதமே அல்லவா தடுத்து நிறுத்துகிறது?

மதத்தின் பெயரால், பெண்களின் கழுத்தின் மீதுதான் ஆண்களின் கால்கள் ஊன்றி நிற்கின்றன என்பதை மறுக்க முடியாது. இசுலாமிய சமூகத்தில் மதமே வாழ்வின் எல்லாவற்றிலும் கோலோச்சுகிறது - அவர்களுக்கென்று தனிப்பட்ட சட்டதிட்டங்கள், பழக்க வழக்கங்கள் என்று சகலமும் மதத்தையே முதுகெலும்பாகக் கொண்டிருக்கின்றன - இதற்கு எந்த மதமும் விதிவிலக்கல்ல என்றாலும்.

•••

இந்தப் பின்னணியில்தான் நாம் ஆசிட் தாக்குதல்களையும் நோக்க வேண்டியிருக்கிறது. எண்ணெயைப் பன்னாட்டு கம்பெனிகளுக்கு விற்று மேற்குலகின் செல்வச் செழிப்போடும், நவநாகரிகத்தோடும் பின்னிப் பிணைந்து வாழும் அரபு முதலாளிகள் தங்கள் இனப் பெண்களை பர்தாவுக்குள் அடைக்கின்றனர். ஒழுக்கம், கண்ணியம், கற்பு என்று வரும்போது மட்டும் குரானுக்குள் ஒளிந்துகொண்டு பெண்களைப் பலிகடாவாக்குகின்றனர். இந்த இரட்டை வேடத்தில் இந்துமதப் பயங்கரவாதிகளுக்கு சற்றும் குறைந்தவர்களில்லை, இசுலாமிய மதவாதிகள்.

சாதி மாறிக் காதலித்தால், ஒரே கோத்திரத்தில் திருமணம் செய்து கொண்டால் பெண்ணை கண்டந்துண்டமாக்குவது பார்ப்பனிய இந்துமதம். சாதிக்குள்ளும், கோத்திரத்துக்குள்ளும் பெண்ணை அடைத்து வைத்திருக்கிறது இந்துமதம். பர்தாவுக்குள் அடைத்து வைத்திருக்கிறது இசுலாமிய அடிப்படைவாதம்.

ஒரு பெண்ணுக்கு மணமகன் கொடை அளித்துத்தான் திருமணம் செய்ய வேண்டுமென்பதாகக் கூறினாலும் உண்மை வேறு மாதிரியாக இருக்கிறது. பங்களாதேஷின் பெரும்பாலான ஆசிட் தாக்குதல்கள் ஏழை மக்களிடையே வரதட்சணைக்காகவே நடத்தப்பட்டிருக்கிறது. ஒரு பெண் தனது காதலை நிராகரித்தால் அல்லது தனது ஆசைகளை நிறைவேற்ற மறுத்தால் தாங்கிக்கொள்ள முடியாத ஆணின் ஈகோ வக்கிரமாக அந்தப்பெண்ணைப் பழிவாங்கத் துடிக்கிறது. அதற்கு மதமும் துணை போகிறது.

இதுவே ஒரு பெண் ஆணின் மீது ஆசிட் தாக்குதலை நடத்த முடியாதா? கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல் என்பதுபோல ஆசிட் அதே விளைவுகளைத் தான் ஆண் மீதும் ஏற்படுத்தும் என்றாலும், ஒரு பெண் அவ்வாறு செய்வாளென்று யாரும் எதிர்ப்பார்ப்பதில்லை. நினைத்துக்கூட பார்ப்பதில்லை. அடங்கி நடக்க வேண்டியவளாகத்தான் எதிர்ப்பார்க்கப்படுகிறாள்.

ஆப்கானிஸ்தான் ரஷ்யாவின் கீழ் இருந்தவரை பெண்களுக்கான சம உரிமைகள் சட்டங்கள் மூலமாகத்தான் நிலைநாட்டப்பட்டன, மதத்தின் மூலமாக அல்ல. பங்களாதேஷில் பல பெண்கள் பொதுவாழ்வில் வெற்றிகரமாக ஈடுபட்டு வந்தாலும் சாமானிய மக்கள் வாழ்க்கையில் எந்தப் பெரிய மாற்றமும் இல்லாததற்கு இந்த மதரீதியான அடக்குமுறையே காரணம்.

ஷேக் ஹசீனா, காலிதா ஜியா மற்றும் சயீதா சஜீதா சவுத்ரி போன்றவர்கள் முக்கியமான அரசியல் பதவிகளை வகிக்கின்றனர். 2008 ஆம் ஆண்டின் கணக்குப்படி பொதுத்துறையில் உள்ள 4419 பேரில் பெண்கள் 673 பேர்தான். பெண்கள் முன்னுக்கு வருவதற்கு ஏகப்பட்ட மசோதாக்களும், சட்டங்களும், வளர்ச்சித்திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இருந்தாலும், பெண்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலே தீட்டப்படும் திட்டங்கள் வெறும் ஏட்டளவில்தான் இருக்க முடியும். 2000 ஆம் ஆண்டும், 2002 ஆம் ஆண்டும் சில கடுமையான சட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. சட்டத்துக்குப் புறம்பான வகையில் ஆசிட் கையாளப்பட்டது தெரியவந்தால் 10 முதல் 30 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை உண்டு. ஆசிட் தாக்குதல் நடத்தும் குற்றவாளிக்கு மரண தண்டனையும் உண்டு. இதனாலெல்லாம் இந்தத் தாக்குதல்களைப் பெருமளவு நிறுத்திவிட முடியவில்லை என்பதுதான் நடைமுறை எதார்த்தம். எளிதில் குற்றவாளி வெளியில் வந்துவிட முடிகின்ற சட்டத்துறை

**இதுவே ஒரு பெண் ஆணின் மீது ஆசிட் தாக்குதலை நடத்த முடியாதா? கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல் என்பதுபோல ஆசிட் அதே விளைவுகளைத்தான் ஆண் மீதும் ஏற்படுத்தும் என்றாலும், ஒரு பெண் அவ்வாறு செய்வாளென்று யாரும் எதிர்ப்பார்ப்பதில்லை. நினைத்துக்கூட பார்ப்பதில்லை.**



படிப்பகம்

www.padippakam.com

யும், ஊழல் மலிந்த காவல்துறையும் ஒரு காரணம். அதோடு குற்றவாளி பணக்காரராக இருந்தால் நிலைமை இன்னும் மோசம்.

நீதிமன்றத்துக்கு வரும் பாதிக்கப் பட்டவர்களை தொடுத்த வழக்கினைத் திரும்பப் பெறுமாறு மிரட்டுவார்கள். இல்லையென்றால், குடும்பத்தினரைத் தாக்கப் போவதாகவும் சொல்வார்கள். தன் சகோதரிக்காக வழக்குத் தொடுத்தி ருந்த ஒரு பெண் குற்றவாளியின் குடும் பத்தினரால் மிகக் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டாள். வழக்குத் தொடுப்ப வர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மிகுந்த வறுமை நிலையிலிருப்பதால் அதிகாரத்தை எதிர்த்து நிற்க முடிவதில் லை. பெரும்பாலும் தன்னார்வக் குழுக் களின் இல்லங்களிலேயே இப்பெண் கள் காலம் கழிக்க நேரிடுகிறது.

பல தன்னார்வக் குழுக்கள் ஆசிட் வீச்சினால் பாதிப்படைந்தவர்களுக்கு ஆதரவளிக்கின்றன. அதோடு மருத்துவ உதவிகளை இயன்ற அளவுக்குச் செய் கின்றன. இருந்தாலும் பாதிப்படைந்த வர்களுக்கு உதவுவதாக எண்ணி அவர் களைத் தனிமைப்படுத்தி விடுகின்றன. கல்வியும், வேலையும் தருவதாகக் கூறிக்கொண்டு அவர்களைச் சமூக வாழ்க்கையிலிருந்து பிரித்தெடுத்து விடுகின்றன. வக்கிரமாகப் பாதிக்கப் பட்ட இப்பெண்கள், மேலும் இரக்கமற்ற வாழ்க்கைக்கே உந்தப்படுகிறார்கள்.

உதவும் நோக்கு என்று சொல்லிக் கொண்டாலும் இந்தத் தன்னார்வ குழுக் கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு மற்று மொரு தண்டனையாகவே அமைந்து விடுகின்றன. எந்த உடல்நலக் குறை பாடோ, நோயோ இது போன்ற விளை வுகளை ஏற்படுத்துவதில்லை. ஒரு போதும் தங்களது பழைய உருவத்தை, அடையாளத்தைப் பெற முடியாது என் பது அவர்களது முகத்திலறையும் உண் மையாக இருக்கிறது. இதனை ஏற்றுக் கொண்டு வாழவேண்டிய கட்டாயத்துக் குத் தள்ளப்படுகின்றனர். பங்களாதேஷ் கிராமங்களில் அவர்கள் ஒருபோதும் தமது பழைய அங்கீகாரத்தைப் பெறுவ தில்லை.

வாழ்வாதாரத்துக்காகச் செய்யும் வேலையும் வெகுவாகப் பாதிக்கப்படு கிறது. ஒன்றிரண்டு வேலைகளையே செய்து பிழைக்க முடியுமென்ற நிலை தான் மீந்திருக்கிறது. அதுவும் அவர் களது பொருளாதார நிலைமையை மிக வும் பாதிக்கிறது.

இதற்குத் தீர்வென்பது, ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமான சட்ட உரிமைகளாலும் மற்றும் நீதியாலுமே முடியும். சமூகத்தின் ஒட்டுமொத்தக் கண்ணோட்டமே மாற வேண்டியிருக் கிறது. சீர்திருத்தங்களால் அங்கொன் றும் இங்கொன்றுமாக வேண்டுமானால் ஓரிரு நபர்களுக்கு மட்டும் தீர்வு கிட்ட லாமே ஒழிய அது தற்காலிமானதுதான்.

இந்த ஆசிட் தாக்குதல்கள் இந்தியா விலும் சாதாரணமானதொன்றுதான். கடந்த ஜனவரி 9-ஆம் தேதி கேரளா வைச் சேர்ந்த அஞ்சலி என்ற பெண் ணின் மீது உள்ளூர் பாஜக தலைவர் பிஜூ என்பவரின் அடியாட்கள் ஆசிட் வீசியிருக்கின்றனர். அஞ்சலிக்கு அந்த மாதம் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந் தது. பிஜூவின் ஆட்கள் அஞ்சலியின் வீட்டுக்கு ஃபோன் செய்து கூரியர் வந்தி



ருக்கிறதென்றும், வீடு அடையாளம் தெரியாததால் வெளியில் வந்து நிற்கு மாறும் கூறியிருக்கின்றனர். வீட்டுக்கு வெளியில் வந்து நின்ற அஞ்சலி முகத் தில் ஆசிட்டை வீசியுள்ளனர். தற்போது இதற்கான வழக்கு நடந்து வருகிறது. இதுவும் இந்துத்துவா காட்டும் பயங்கர வாதத்தின் மற்றொரு கோர முகம்தான்.

இந்தக் கோரமுகம்தான் நாடு முழுக்க கலாச்சாரக் காவலர் வேடமேற் கிறது. மதங்கள் வெவ்வேறானாலும் அதன் தூய்மை பெண்ணை எரிப்பதில் தான் இருக்கிறதென்று நிரூபிக்கின்றன இந்தச் சம்பவங்கள். சாதியையும், பெண்ணடிமைத்தனத்தையும் தனது கைகளாகக் கொண்டு மக்களை நசுக் கும் பார்ப்பனியம்தான் தற்போது அஞ் சலியின் வாழ்க்கையைக் கேள்விக்குறி யாக்கி இருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஆந்திரா வில் காதலை மறுத்த இரண்டு மாணவி கள் மீது இளைஞர்கள் ஆசிட் வீசியதால் அப்பெண்கள் பலியான சம்பவத்தை செய்தியில் பார்த்திருப்போம். காத லித்த பெண்ணின் மீது ஆசிட் ஊற்றுவது என்ன வகையான நேசம் என்பது புரிய வில்லை.

பெண்ணை நுகர்பொருளாக, உட மையாகக் கற்றுக்கொடுக்கும் ஊடகங்க ளும், சினிமாவும் அவளை அடைந்தே தீரவேண்டிய பொருளாகவே பார்க்கிற து. இந்தக் காதலை வியாபாரமாக்கிக் கொள்ளும் முதலாளித்துவமோ இன் றைய இளைஞர்களிடம் காதலைக் கூவிக் கூவி விற்றுக் காசாக்கிக் கொள்கி றது. காதலை ஏற்க மறுக்கும் உரிமை பெண்ணுக்கும் உண்டு என்பதை ஆணா திக்கம் உணர மறுக்கிறது. ரஜினி கமல் முதல் இன்றைய தனுஷ் வரை பெண் ணைத் தன் காலடியில் விழ வைப்பதே ஆண்மைக்கழகு என்று சவால் விட்டு அதனை நிரூபிக்கவும் செய்கிறார்கள். தனக்குக் கிடைக்காத பொருள் வேறு யாருக்கும் கிடைக்கக் கூடாது என்று ரசி கனுக்கும் கற்பிக்கிறார்கள்.

இந்த வழியில் இன்றைய இளைஞர் களும் அமிலத்தால் பெண்ணைத் துடிக்க துடிக்க அழிக்கிறார்கள். மதம் எதுவாக இருந்தாலும் அதன் ஒழுக்கம், அன்பு, அமைதி என்ற எல்லாவற்றை யும் பிரித்துவிட்டுப் பார்த்தால் மைய மாக இருப்பது பெண்ணடிமைத்தன மும், ஆணாதிக்கமும்தான். வாழ்நிலை மைகளையும், செல்வத்தை விநியோ கிக்கும் சமுதாய நிலைமைகளையும் முதலாளித்துவம் மாற்றியிருக்கிறது. ஆனால் அதன் இலாப நோக்குகளுக் காக நிலப்பிரப்புத்துவத்தின் பிற்போக் குத்தனங்களை அப்படியே நிலவ விட்டு ஆதாயமடைகிறது. அல்லது பெண் களை அரைகுறையாக சீயர் லீடர்ஸ் என்ற பெயரில் கவர்ச்சிக்கு உபயோகப் படுத்துகிறது.

இந்த நிலப்பிரபுத்துவ பிற்போக்குத் தனங்களையும், முதலாளித்துவ பாலி யல் சுரண்டல்களையும் எதிர்த்து மக்கள் அனைவரும் சேர்ந்து போராடுவதுதான் சரியான தீர்வாக இருக்க முடியும். தனிப் பட்ட ஓரிருவர் போராடுவது எந்தப் பல னையும் தராது. ஆளும் வர்க்கத்தின் பண்பாட்டு, கலாச்சார நிறுவனங்க ளைத் தகர்க்கும் சக்தி ஒடுக்கப்படும் மக் கள் கையில்தான் இருக்கிறது. அப்படி சமூக நலனுக்காகப் போராட புறப்படும் மக்கள் கையில்தான் விடுதலைக்கான திறவுகோல் இருக்கிறது.

● வேல்விழி



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

அடங்காத அவரது காமவெறி இதற்கும் தணிய மறுக்கிறது. தனது உரையாடல்களை அந்தப் பையன் பார்த்து விடப் போகிறானே என்று பதறும் சாரு, ஆதாரங்களையெல்லாம் அழித்து விடுமாறு எச்சரிக்கிறார். 'நீ வேண்டுமானால் அவனைத் திருமணம் செய்து கொள்; ஆனால் எனது காதலையும் ஏற்றுக் கொள்' என்று சொல்லும் சாரு, தொடர்ந்து ஆபாசமாகவே உரையாடுகிறார். தனது தற்காப்பு நடவடிக்கைகள் அனைத்துமே தோற்றுப்போன நிலையில் அப்பெண் இவரைத் தவிர்த்துத் துண்டித்துக் கொள்கிறார்.

தனது ஆசையில் மண் விழுந்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாத சாரு உடனே அப்பெண்ணைத் திட்டி தனது வாசகர் வட்டத்தில் எழுதுகிறார். இந்த உரையாடல்கள் அனைத்தும் சரியாக ஏழே நாட்களுக்குள் வெவ்வேறு சமயத்தில் நிகழ்ந்துள்ளது. தனக்கு ஏற்பட்ட அநீதியைக் கண்டு மனதுக்குள் குமைந்து கொண்டிருந்த அப்பெண், நீண்ட மனப் போராட்டத்திற்குப் பின்னும் சில இணைய நண்பர்களின் ஆலோசனையின் பேரிலும் இதை அம்பலப்படுத்த முடிவெடுக்கிறார்.

முதலில் பிரான்சில் இருந்து வலைப் பதிவுகள் எழுதும் பெரியார் இயக்கம் ஒன்றைச் சேர்ந்த தமிழச்சி என்கிற பதிவரின் கவனத்திற்கு இவையனைத்தையும் எடுத்துச் செல்கிறார். இவர் அளித்த சேட் ஆதாரங்களின் உண்மைத் தன்மையைச் சோதித்து உறுதிப்படுத்திக் கொண்ட தமிழச்சி வினவு தோழர்களின் கவனத்திற்குக் இவ்விவகாரத்தைக் கொண்டு வருகிறார் – தனது தளத்திலும் இது குறித்து எழுதுகிறார்.

தற்போது விவகாரம் அம்பலமாகி, ஊரே காறித்துப்பிக் கொண்டிருக்கும் நிலையில் முதலில் சாருவோடு உரையாடியது பெண்ணே இல்லை என்றனர் அவரது அடிப்பொடிகள். அடுத்து, சாரு தனக்கு சேட்டில் உரையாடும் வழக்கமே இல்லையென்றார். இவையிரண்டும் பச்சைப் பொய்கள் என்று நிரூபணமானதும், ஒரு படி மேலே போன அடிப்பொடிகள் இதெல்லாம் சாருவைத் திட்டமிட்டுப் பொறிவைத்துப் பிடிக்க செய்யப்பட்ட சதி என்றார்கள். மேலும் உலகெங்கும் அதிகாரத்தில் இருக்கும் ஆண்கள் தமக்கு இணங்காத பெண்களின் தனிப்பட்ட நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குவதன் மூலம் தம் மேல் உள்ள குற்றச்சாட்டுகளை நீர்த்துப்போக வைக்க என்னென்ன உத்திகளைக் கையாள்வார்களோ அதே விதமான உத்திகளையே சாருவும் அவரது ரசிகக் கும்பலும் கையாண்டது.

தற்போது விவகாரம் இணையதளங்களைத் தாண்டி அச்சு ஊடகங்களில் வெளியாகியுள்ள நிலையில், தனது கடவுச் சொல்லை வேறு ஒரு எழுத்தாளாருக்குக் கொடுத்து வைத்திருந்ததாகவும், அவர் தான் இப்படி விளையாடி விட்டார் என்றும் சாரு தெரிவித்துள்ளார். சாருவின் இந்தக் கடைசிக் கட்ட உளறல்கள், இப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று பூசி மெழுகி விசயத்தை நீர்த்துப் போக வைக்க முயன்ற அவரது ஆதரவாளர்களின் முகத்தில் கரியைப் பூசி விட்டுள்ளது. ஆனாலும் தமது முயற்சியில் சற்றும் மனதளரா அடிப்பொடிகள் ஒளிய வழியில்லாத அரவம் கிடைக்கும் இடுக்கிலெல்லாம் நுழைந்து கொள்ள முயல்வதைப் போல் கடைசியாக இலக்கியப் புதருக்குள் நுழைந்து கொண்டுள்ளனர்.

சாருவை இவ்விவகாரத்திலிருந்து காப்பாற்ற அவரது ரசிகக் கண்மணிகள் முன்வைத்த பல்வேறு கோமாளித்தனமான வாதங்களின் உட்கிடை வேறொன்றுமல்ல - அது 'நம்ம மைனரு ஆம்பிளைச் சிங்கம்யா' என்கிற அதே பழைய திமிர்த்தனம் தான். இதில் சாருவுக்கு வக்காலத்து வாங்க முன்வந்த சில பெண் பதிவர்கள் அரதப் பழசான பீம்சிங் காலத்து டயலாக்கான 'முள்ளு மேல சேலை விழுந்தாலும் சேலை மேல முள்ளு விழுந்தாலும்' என்று நீட்டி முழக்கினர்.

இதன் பொருள் பெண்கள் பொது வெளியில் வந்தால் இப்படித்தான் நடக்கும். ஆகவே, அவர்கள் தான் பாதுகாப்பாக வீட்டுக்குள் முடங்கிக்கொள்ள வேண்டும் என்பதே. இது தான் சோ, ஜெயேந்திரன், தாலிபான் வகையறாக்களின் கருத்தும் கூட. இணையம் போன்ற நவீன தொழில்நுட்ப அறிவையும், படிப்பு வாசனையையும் முக்காடாகப் போர்த்துக் கொண்டு வளைய

**எழுத்தாளர், இலக்கியப் பிரபலம் போன்வற்றை வைத்து இலக்கியத்தை வளர்க்கும் பணியினையோ, இல்லை வாசகர்களின் ரசனையை உயர்த்தும் செயலையோ செய்யாமல், தனது பொறுக்கித்தனத்தைத் தீர்ப்பதற்கு அதனைப் பயன்படுத்தியுள்ளார் என்பதுதான் முக்கியமானது.**

அதாவது எழுத்தாளனையும், எழுத்தையும் பிரித்துப் பார்க்க வேண்டும் என்கிறார்கள். சாரு அயோக்கியனாய் இருந்து விட்டுப் போகட்டும் - அவரது எழுத்துக்கள் உன்னதத்தின் உச்சம். எனவே அதை நாங்கள் கொண்டாடிக் கொண்டே இருப்போம் என்கிறார்கள். 'நீ காதலிக்கா விட்டால் என்ன ! நான் காதலித்துக் கொண்டே இருப்பேன்' என்கிற பாடாவதி விஜய் படத்தின் வசனங்களைப் பேசி மனதை ஆற்றுப்படுத்திக் கொள்ள முயல்கிறார்கள்.

ஆனால் சாருவே இதற்குப் பல சந்தர்ப்பங்களில் ஆப்பறைந்திருக்கிறார் என்பது தான் விசேசம். தானும், தனது எழுத்தும் வேறுவேறல்ல என்றும், தனது சொந்த வாழ்க்கையின் அனுபவத்தையே எழுத்தில் வடிப்பதாகவும் இதற்கு முன் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதியும், பேசியும் வந்திருக்கிறார்.

வந்தாலும் தங்களது காட்டுமிராண்டிக் 'கொண்டையை' மட்டும் இவர்கள் மறைக்கத் தவறுவதேயில்லை.

எழுத்தாளர், இலக்கியப் பிரபலம் போன்வற்றை வைத்து இலக்கியத்தை வளர்க்கும் பணியினையோ, இல்லை வாசகர்களின் ரசனையை உயர்த்தும் செயலையோ செய்யாமல், தனது பொறுக்கித்தனத்தைத் தீர்ப்பதற்கு அதனைப் பயன்படுத்தியுள்ளார் என்பதுதான் முக்கியமானது. இவர்கள் தான் அரசியல்வாதிகளாகவும், அதிகாரிகளாகவும், முதலாளிகளாகவும் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி முறைகேடுகள் செய்கின்றனர். சாரு நிவேதிதாவின் பொறுத்திதனமும் அத்தகையதுதான்.

***விரிவான கட்டுரை – ஆதாரங்களுக்கு***
www.vinavu.com

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA KALACHARAM (Tamil Monthly) REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87 Regd. No: TN / CCN / 434 / 09-11

# பாலியல் வன்முறையை எதிர்த்துப் போராடிய வீரப்பெண் தேவி!



செல்வராஜ்-தேவி

பெண்கள் அதிகம் வேலைக்குச் செல்லும் காலமிது! சென்னை முதல் சிறுநகரங்கள் வரை கடைகள், உணவகங்கள், ஏற்றுமதி ஆடையகங்கள் என ஒன்றுவிடாமல் எல்லாத் துறைகளிலும் இப்போது பெண்கள் அதிகரித்து வருகின்றனர். ஆண் தொழிலாளிகளை விட பெண் தொழிலாளிகள் ஒழுங்காக வேலைக்கு வருவார்கள், எதற்கும் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள், பொருளாதாரச் சுரண்டல் சுலபம் என்று பல வகைகளில் அவர்கள் சுரண்டப்படுகிறார்கள். ஏழைப் பெண்களை கொத்தடிமையாக்கும் ''சுமங்கலி'' திட்டத்தை வாசகர்கள் கேள்விப்பட்டிருக்கலாம்.

எனினும் இந்த பொருளாதார சுரண்டல் ஆண் தொழிலாளிகளுக்கும் உண்டு என்றாலும் பெண் என்று வரும் போது அங்கே பாலியல் சுரண்டல் முக்கிய பங்காற்றுகிறது. அன்றாடம் ஆயிரத்தெட்டு வழிகளில் பாலியல் வன்முறைகளை சகித்துக் கொண்டு வாழ்வது, வேலை செய்யும் பெண்களின் தலைவிதி போல ஆகிவிட்டது. ஆனால் அந்த தலைவிதியை சுக்கு நூறாக்கி உடைத்திருக்கிறார் ஓசூரைச் சேர்ந்த தேவி எனும் பெண் தொழிலாளி.

ஒசூரைச் சேர்ந்த ஆனந்த் எலக்ட்ரானிக்ஸ் எனும் நிறுவனத்தில் இரண்டரை ஆண்டுகளாகப் பணிபுரிகிறார் தேவி. 480 நாட்களுக்கு பிறகு தனது பணி நிரந்தரமாக்கப்படும் என்று காத்திருக்கிறார். ஆனால் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியான பெரியசாமி மற்ற தொழிலாளிகளை ஏமாற்றுவது போல தேவியையும் ஏமாற்றுகிறான். தட்டிக்கேட்ட தேவியை மிகவும் ஆபாசமாக திட்டுகிறான். அங்கு வேலை செய்யும் பெண்களுக்கு இது பழகிப்போன ஒன்று.

மனமுடைந்து போன தேவி தனது கணவர் செல்வராஜிடம் இது குறித்து பகிர்கிறார். ஆறுதல் சொன்ன செல்வராஜ் இதை எதிர்த்து போராடுமாறு மனைவியை ஊக்குவிக்கிறார். அடுத்த நாள் வேலைக்கு போன தேவி, ஒப்பந்த பணிச் சான்றிதழில் கையெழுத்திட மறுக்கிறார். பெரியசாமியோ ஆபாசமாக திட்டுகிறான். உடனே தேவி மிளகாய் பொடியை எடுத்து அவன் முகத்தில் வீசுகிறார். செருப்பால் அடிக்கிறார். இப்படி உள்ளேயும், வெளியுமாக பெரியசாமி எரிந்து புலம்புகிறான்.

போலிசு வருகிறது. பெரியசாமியை கைது செய்வதற்கு பதில் தேவியை கைது செய்து சிறையில் அடைக்கிறது. அதாவது இத்தகைய பாலியல் வன்முறைகளை எதிர்த்து எந்தப் பெண்ணும் போராடக்கூடாது என்று சொல்கிறது போலீசு. இதை தட்டிக்கேட்டு புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி தோழர்கள் போராடுகிறார்கள். உடனே தோழர் பரசுராமனை கைது செய்து சிறையில் அடைக்கிறது போலீசு. ஆயினும் தோழர்கள் இந்த விசயத்தை ஓசூர் முழுவதும் அறியும் வண்ணம் பிரச்சாரம் செய்து போராடுகிறார்கள்.

வீரப் பெண் தேவிக்கு வாழ்த்துக்கள்! பாலியல் வன்முறையை எதிர்த்து போராட வேண்டும் என்று பரிதவிக்கும் பெண்களுக்கு அவர் ஒரு முன்னோடி!

*தகவல்: புதிய ஜனநாயகத்தொழிலாளர் முன்னணி, ஓசூர்*